# புதிய

# பாரசீகம்

ஆர். எச். நாதன்
எழுதியது

ஜனசக்தி பிரசுராலயம்
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

1946 ஜூலை]

[விலை 10 அணா

# பொருளடக்கம்

பக்கம்

1. பாரசீகத்தின் நிலைமை ... 1

2. ரஷ்யப் புரட்சிக்குப் பின்பு ... 28

3. நேசப் படைகள் வந்த பின்பு ... 34

4. ஜனநாயக இயக்கத்தின் சரித்திரம் ... 39

5. அஜர்பெஜானில் நடந்ததென்ன? ... 53

6. ஏகாதிபத்தியச் சூழ்ச்சி பலிக்கவில்லை ... 58

7. ஜனநாயகப் பாதையில் செல்கிறது ... 68

---

அட்டைப் படம்:

—(வலது பக்கம்) பாரசீக பிரதம மந்திரி
கவாம் ஸுல்தானே

—(இடது பக்கம்) டூடே கட்சியின் பொதுக்காரியதரிசி
இரேஜ் இஸ்கண்டரி

# முகவுரை

இரான் (பாரசீகம்) நம் தேசத்திற்கு அண்டைநாடு. நம் பரந்த தேசத்தில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த ஜனங்கள் வாழ்வதுபோல், அங்கும் வாழ்கிறார்கள். நம் தேசத்தில் வாழும் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த மக்களும், தங்கள் தங்கள் நாகரீகமும், கலையும், பண்பும், மொழியும், பொருளாதாரமும் செழித்து வளர்ந்தோங்கவேண்டுமென்று விரும்புவதுபோல், அத் தேசத்தில் வாழும் ஒவ்வொரு இனத்தினரும் விரும்புகின்றனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பணமூட்டைகளின் நேரடியான சுரண்டல் ஆட்சிக்கு இந்தியா அடிமைப்பட்டுக்கிடக்கிறது என்றால், அதே ஏகாதிபத்தியத்தின் மூலதனத்திற்கும், படைபலத்திற்கும் கட்டுப்பட்டு மறைமுகமாக—இந்திய சமஸ்தானங்களைப் போல்—இரான் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தங்கு தடையற்ற சுரண்டல் உரிமையுடன் டோக் துரைகளும், டவுன் துரைகளும், தியோபால்டு துரைகளும் நம் தேசத்து மூலப் பொருள்களையும், உழைப்புச் சக்தியையும் பல தொழிற்சாலைகள் மூலமும், கம்பெனிகள் மூலமும் கொள்ளையடித்துச் செல்கின்றனர் என்றால், அதே துரைகளின் அண்ணன் தம்பிகள், மாமா மச்சான்கள், "ஆங்கிலோ இரானிய எண்ணெய் கம்பெனி" மூலம் இரான் தேசத்து மூலச் செல்வத்தையும், உழைப்புச் சக்தியையும் கொள்ளையடித்துச் செல்கின்றனர். தங்களுடைய சுரண்டல் உரிமையைப் பாதுகாப்பதற்காக "மன்னர் பிரானுடைய சர்க்காரும்", அதன் படைகளும் இந்த நாட்டில் இருக்கவேண்டுமென்று சுரண்டும் துரைகள் விரும்புவதுபோல், இரான் தேசத்திலும் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றக்கூடிய—தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட—சர்க்காரும் தங்களுடைய படைகளும் இருக்கவேண்டுமென்று அதே துரைகளின் அண்ணன், தம்பிகள் விரும்புகின்றனர். வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்வதற்காகவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் நம் நாட்டில் நமது ஜனங்களுடைய சர்க்கார் ஏற்படவேண்டும் என்று நமது ஜனங்கள் நடத்தும் போராட்டங்கள் மீது இந்தத் துரைகள் எரிந்து விழுவதுபோலவே, இரான் தேசத்து ஜனங்கள் அதே காரணங்களினால் நடத்தும் போராட்டங்களின் மீதும் அதே ஏகாதிபத்தியவாதிகள் சீறி விழுகின்றனர்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், சோவியத் யூனியனுக்கும் இரான் அண்டை நாடு. சுரண்டல் ஆட்சியின் பரமவைரியான சோஷலிஸத்தை ஒழிப்பதற்கு, முதல் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு இரானை ஒரு படைத்தளமாக ஏகாதிபத்யவாதிகள் உபயோகித்தனர். மூன்றாவது உலக யுத்தத்திற்கு அடிகோலி, சோவியத் யூனியன்மீது போர் தொடுக்கும் எண்ணத்தைவிட்டொழிக்காத ஏகாதிபத்தியப் பிண்டங்கள், திரும்

பவும் இரானை ஒரு படைத்தளமாக உபயோகிக்க எண்ணுகின்றன. சோவியத் எதிர்ப்பையே தொழிலாகக் கொண்ட பிற்போக்குக் கும்பல் இரான் சர்க்காரில் உட்கார்ந்திருந்தால்தான் இந்த எண்ணத்தை சுலபாக ஈடேற்றிக்கொள்ளமுடியும். ஆகவே, தங்களுடைய சொந்த (எண்ணெய்) நலனைக் காப்பாற்றிக்கொள்ளவும், சோவியத்மீது போர் தொடுக்கவும் எப்படியாவது தங்கள் கைக்கூலிகளை இரான் அரசாங்க பீடத்தில் உட்காரவைக்கவும் பகீரத முயற்சி செய்கின்றனர்.

இந்த நிலைமையில், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும் தங்களுடைய சொந்த பிரதிநிதிகளைக்கொண்ட ஜனநாயக சர்க்கார் ஏற்படவேண்டுமென்று இரான் மக்கள் நடத்தும் போராட்டத்தை, "சோவியத் ரஷ்யாவின் தூண்டுதல்" என்று கூறி, உலகத்தை ஏமாற்றுகிறார்கள. "நாடுபிடிக்கும் ஆசையால் சோவியத் சர்க்கார் இரான் மக்களைத் தூண்டிவிட்டு கலகம் செய்கிறது" என்று கட்டுக்கதைகளைக் கட்டி விடுகின்றனர். காஷ்மீர் மக்கள் தங்களுடைய சுதந்திரத்திற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தையும், அதன் கைக்கூலியையும் எதிர்த்துப் போராடுவதை, சோவியத் தூண்டுதல் என்று அதே ஏகாதிபத்யப் பிரசாராகர்கள் கூறவில்லையா? அதன்மூலம் தங்கள் மரணதாண்டவத்தை மறைத்துக்கொள்ளவில்லையா?

இந்தச் சிறு பிரசுரத்தில் இரானின் பழம் பெருமைகளையும், இன்றைய வாழ்க்கை நிலையையும், ஏகாதிபத்ய சுரண்டலையும், அதற்குக் கட்டுப்பட்ட ஆட்சி முறையையும் நன்றாக சித்தரித்துக் காட்டி, இரான் மக்களின் போராட்டத்திற்கு என்ன அர்த்தம் என்பதை தோழர் ஆர். எச். நாதன் மிகவும் தெளிவாக விளக்குகிறார். இரான் தேச மக்களின் ஜனநாயக வெற்றிக்கு அர்த்தம், நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் ஏகாதிபத்ய சங்கிலியில் ஒரு பகுதி துண்டாகுகிறது என்பதே.

ராய்ட்டர், அ. பி., யு. பி. முதலிய ஏகாதிபத்ய கைக்கூலி செய்தி ஸ்தாபனங்களின் பித்தலாட்ட பிரசாரத்தை மனங்கூசாமல் தேசிய போர்வையில் பிரசுரித்து, ஏகாதிபத்ய உலக நலன்களை வளர்க்கும் பத்திரிகைகளைப்படித்து மனங்குழம்பி நிற்கும் தேசபக்தர்களுக்கு, இச்சிறு வெளியீடு உண்மையை எடுத்துக் காட்டும் என்று நம்புகிறோம். இவ்வுண்மையை புரிந்துக்கொள்ளா விட்டால், ஏகாதிபத்ய வாதிகளின் மூன்றாவது உலக யுத்த சதியில் சிக்கிக்கொண்டு இந்திய தேசபக்தர்கள் குருடர்களாக நிற்க வேண்டியிருக்கும்.

சென்னை,
19—7—46

**எம். இஸ்மத் பாஷா.**
'ஜனசக்தி' உதவி ஆசிரியர்.




1. கிரீஸ், 2. கிரீட், 3. ஸைபரஸ், 4. எகிபது, 5. டிரான்ஸ் ஜோர்டான் 6. பாலஸ்தீனம்
7. ஸிரியா, 8 இராக், 9. சோவியத் யூனியன்



ரோடில் வேலை செய்யும் தொழிலாளர்கள். விடில்லே மரத்தடியில் சாப்பிடுகிறார்கள்.

# புதிய பாரசீகம்

## 1. பாரசீகத்தின் நிலைமை

*[பழம்பெரும் பாரசீகம்—இந்தியாவுக்கும், பாரசீகத்திற்கும் தொடர்பு—2000 குடும்பங்களின் சர்க்கார்—சுதேச மன்னர்கள்—ஏகாதிபத்தியங்களின் அடிமை நாடு—ஆங்கிலோ இரானிய எண்ணைக் கம்பனி-உழவருக்கு நிலமில்லை-தொழிலாளர் நிலைமை—வறுமை, பிணி, அறியாமை.]*

### பழம்பெரும் பாரசீகம்

பாரசீகம் பழைய பெயர்; 1935-ம் வருடத்திலிருந்து இரான் என்று அழைக்கப்படுகிறது. ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் மத்தியில் மலைகளும், நதிகளும், பாலைவனங்களும், ஏரிகளும் நிறைந்த பாரசீகம் பரந்து கிடக்கிறது. வடக்கில் சோவியத் யூனியனும், மேற்கில் துருக்கியும், இராக்கும் கிழக்கில் இந்தியாவும், ஆப்கானிஸ்தானமும் அதன் எல்லைகள். பாரசீகத்தின் மொத்த நிலப் பரப்பு 6,28,000 சதுர மைல்கள். அதாவது, சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம், அஸ்ஸாம், பீஹார், எல்லைப்புற மாகாணம், வங்காளம் ஆகிய எட்டு மாகாணங்களைவிடச் சிறிது பெரிய தேசம். ஒரு கோடி இருபது லட்சம் பாரசீகர்களும், நாற்பது லட்சம் அஜர்பெஜானியர்களும், ஐந்து லட்சம் குர்டிஸ்தானியர்களும், ஆர்மேனியர்களும், ஷாம்ஸே, காஷ்காய், பாக்தியார் முதலிய மலைஜாதியினரும் பாரசீகத்தில் வாழ்கிறார்கள். பாரசீகம், அஜர்பெஜான், குர்டிஸ்தான் முதலிய பல பாஷைகளும் பேசப்படுகின்றன. மண்ணெண்ணை கிணறுகள், இரும்பு, நிலக்கரி, பழவகைகள் முதலிய இயற்கைச் செல்வங்கள் மலிந்து கிடக்கும் தேசம்.

பாரசீக ஆப்பிள் பழமும், கம்பளமும் உலகப் பிரசித்தி பெற்றவை. பாரசீகம் உலக இலக்கியத்திற்கு மகத்தான நன்கொடை அளித்திருக்கிறது. பாரசீக மகா கவி உமர்கயூம்,

"லைலா மஜ்னு" காதற் கதை இன்று உலக இலக்கியத்தின் பொதுச் சொத்து. இத்துடன் வைத்தியத் துறையிலும் உலக மக்களுக்குப் பேருதவி புரிந்திருக்கிறது. மந்திரத்தால் வியாதியைக் குணப்படுத்தும் மூடப்பழக்க வழக்கம் உலக முழுவதும் பரவியிருந்த காலத்தில், பாரசீகத்தில் வைத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. "அபுபகர் மஹமத் இபின்சக்கரையா" என்ற வைத்திய நிபுணர் மிருகங்களின் நரம்புகளைப் புண்களுக்குக் கட்ட முதன் முதல் உபயோகித்தார். அதே அறிஞர்தான், காய் கறிகளிலிருந்து மதுபானம் செய்வதையும், கந்தகாமிலத்தையும் (Sulphuric Acid) முதலில் கண்டுபிடித்தார். அவிஸென்னு என்ற "வைத்திய மன்னன்" கானும் என்ற வைத்திய புத்தகத்தை எழுதினர். பதினேழாவது நூற்றூண்டு வரையிலும், இந்தப் புத்தகம் தான் ஐரோப்பாவிலுள்ள சகல வைத்திய கல்லூரிகளிலும் பாட புத்தகமாக இருந்தது.

## இந்தியாவுக்கும், பாரசீகத்திற்கும் தொடர்பு

இந்தியாவின் தலைமாட்டிலே இருக்கிறது பழம்பெரும் பாரசீகம். "இந்தியாவும், பாரசீகமும் அண்டை நாடுகள். ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பே, நாகரீகத்தின் மூலமாகவும், கலாச்சாரத்தின் மூலமாகவும் இரு நாடுகளுக்கு மிடையே நெருங்கிய தொடர்பிருந்தது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகள், வெகு தூரத்திலுள்ள இரண்டு வெவ்வேறு குடும்பத்தில் கல்யாணம் செய்துகொண்டதுபோல், ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த கலாச்சாரம் இந்தியாவிலும், பாரசீகத்திலும் பிரிந்து கிடக்கிறது.........இஸ்லாம் தலை தூக்கியதற்கு வெகு காலத்திற்கு முன்பே, பாரசீகர்களுக்கு இந்தியாவோடு நெருங்கிய தொடர்பிருந்தது......" என்று "ஹிந்துஸ்தானத்தில் முகலாயர்களுக்கு முன்பு பாரசீகத்தின் உறவு" என்ற புத்தகத்தில் ஷாம்ஸ் உல் உலாமா அல் ஹாஜ் மஹம்மத் அப்துல் கனி கூறுகிருர். ஆம், புராதன காலம்தொட்டு இரு நாடுகளுக்குமிடையே அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் நெருங்கிய தொடர்பிருந்தது என்ற உண்மையைச் சரித்திரமும், புராதன இலக்கியங்களும் நிரூபிக்கின்றன. புராதன பாரசீக இலக்கியங்களில், இந்தியாவைக் குறிப்பிடும் "அவஸ்தா" என்ற வார்த்தையும், பாரசீகத்தைக் குறிப்பிடும் "பார்ஷவாக்கள்" என்ற வார்த்தை நமது நாட்டு ரிக் வேதத்திலும் இருக்கின்றன. டரயஸ் அரசாட்சிக்கு முன்பு இந்திரன், வருணன் போன்ற இந்தியக் கடவுள்களை பாரசீக மக்கள் வணங்கி வந்தார்கள் என்று எச். ஆர். ஹால் "மத்தியதரைக் கடல் நாடுகளின் புராதன சரித்திரம்" என்ற புத்தகத்தில் வரைகிருர்.

வட இந்தியாவில்தான் பாரசீகர்கள் முதன்முதலில் குடியேறினார்கள். இவர்களில் பெரும்பாலோர் இந்தியாவை தங்களது தாயகமாக ஏற்றுக்கொண்டனர். சகல துறைகளிலும் இந்தியர்களோடு இரண்டறக் கலந்தனர். "இந்தியர்களும், பாரசீகர்களும் ஒன்றாகக் கலந்ததால், பாஞ்சாலத்திலுள்ள ஓரிடத்தில் இந்தோ—இரானிய கலப்பு இனம் இருந்தது" என்று "பாரசீக இலக்கியத்தின் சரித்திரம்" என்ற புத்தகத்தில் ஆசிரியர் பிரௌன் குறிப்பிடுகிறார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த பாரசீக இலக்கியத் தூது கோஷ்டியில் ஒருவர், "பாரசீகர்களும், இந்தியர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள். புராதன பாரசீக இதிகாசங்கள் இரு நாட்டினரும் ஒரே இனத்தினரென்றும், ஒருவன் கிழக்கு நோக்கியும், மற்றொருவன் மேற்கு நோக்கியும் சென்றார்கள் என்று கூறுகின்றன......" என்று இரு நாடுகளுக்கு மிடையேயுள்ள உறவை வலியுறுத்தினார்.

டரயஸ் என்ற அரசன் (கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 521-ல்) ஸைலூகஸ் என்ற கிரேக்க கடற்படைத் தலைவனை, கடல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் பாதையைக் கண்டுபிடிக்கச் சொன்னான். இதன்விளைவாக, பாரசீகர்களின் ஆட்சி பாஞ்சாலத்திலும், ஸிந்துவிலும் ஏற்பட்டது. தென் இந்தியாவிலுள்ள சாளுக்கிய அரசர்களும் பாரசீகத்தோடு ராஜீய உறவு வைத்திருந்தார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்குமுன்பு ஐந்தாவது நூற்றாண்டில், பாரசீகத் துருப்புகளோடு இந்தியத் துருப்புகளும் கிரீஸுக்குச் சென்றன. பாரசீகத்தின்மீது அலெக்ஸாண்டர் படையெடுத்த பொழுது, இந்தியாவிலிருந்த பாரசீகர்கள் இந்தியாவிலிருந்து ஆயுதங்களைப் பாரசீகத்திற்கு அனுப்பினார்கள் என்று 'ஷாநாமா" என்ற காவியத்தில், பிர்தூஷி என்ற பாரசீகப் புலவர் குறிப்பிடுகிறார்.

மகம்மதியர்கள் பாரசீகத்தை ஆக்கிரமித்தபொழுது, மேலும் ஆயிரக்கணக்கான பாரசீகர்கள் இந்தியாவில் குடியேறினார்கள். இவர்களின் சந்ததியார்கள்தான், இன்று நமது நாட்டிலுள்ள பார்ஸிகள். இவ்வாறு பாரசீகத்திலிருந்து "சொராஷ்டிர" மதத்தையும், பாரசீக நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும், இலக்கியத்தையும் இந்தியாவுக்குக் கொண்டு வந்தார்கள். "ஆப்கானியர்களும், முகலாயர்களும் இந்தியாவில் ஆட்சிபுரிந்த காலத்தில் பாரசீக பாஷைதான் ராஜாங்க பாஷையாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதுவரையிலும் இதுதான் ராஜாங்க

பாஷை" என்று "நான் கண்ட இந்தியா" என்ற புத்தகத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு வரைகிறார்.

இந்தியாவிலுள்ள சகல பாஷைகளிலும் பாரசீக வார்த்தைகள் ஏராளமாகக் கலந்திருக்கின்றன. நமது தமிழ் மொழியில் கூட—அமீனா, கச்சேரி, கஜானா முதலிய பாரசீக வார்த்தைகளைக் காணலாம். ஹிந்தியும், பாரசீகமும் கலந்த பாஷைதான் உருது.

இத்துடன் பாரசீக இலக்கியம் இந்தியாவிலும், இந்திய இலக்கியம் பாரசீகத்திலும் ஆழ வேரூன்றி யிருந்தன. பாரசீக இலக்கியத்தை இந்தியர்களும், இந்தியர் இலக்கியத்தைப் பாரசீகர்களும் மட்டற்ற மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

"எனது உள்ளத்தை இந்தியா அடிமைப்படுத்தி யிருக்கிறது. ......எனது சொந்த தேசத்தைப்போல் இந்தியாவைப் பாவிக்கிறேன்...ஹிந்துஸ்தானும், பாரசீகமும் நண்பர்களாக மிளிர்கிறார்கள்.—இங்கிருந்து எனது கவிதையின் மூலமாக, ஹிந்துஸ்தானிலுள்ள எனது சகோதர கவிகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன்" என்று உயிரோடிருக்கும் பாரசீக மகா கவி மாலிக் ஆஷ்-ஷுரா பஹார் இந்தியாவை நோக்கி உள்ளத்தைத் திறந்து பாடுகிறார்.

புராதன காலத்தில், அனுஷிர்வான் என்ற பாரசீக அரசன் பார்ஸாவா என்ற பாரசீக—ஸம்ஸ்கிருத பண்டிதரை, ஸம்ஸ்க்ருதத்திலுள்ள இலக்கியங்களைப் பாரசீக பாஷையில் மொழிபெயர்க்கச் செய்தார். பதினேழாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாரசீகப் புலவர் அல்புரூனி, இந்தியாவைப்பற்றி கிதாப்-அல்-ஹிந்த் என்ற புத்தகம் எழுதினார். சுல்தான் இப்ராஹிம் காலத்தில் அபு நாஸிர் புரோஸி என்ற பாரசீகப் புலவர் லாகூரில் ஒரு கல்லூரியை நிறுவினார். இந்தக் கல்லூரி, பல நூற்றாண்டுகள் வரையிலும் கீழ் நாடுகளில் பாரசீக, அராபிய இலக்கியத்திற்கு நடு நாயகமாக மிளிர்ந்தது. இந்திய சரித்திரத்தை முதன் முதல் எழுதியவர் ஸியா உதீன் பார்னி என்ற பாரசீகர்தான். இவருக்கு "இந்தியாவின் வானம்பாடி" என்ற பெயர் சூட்டப்பட்டது. பாரசீக அறிஞர்கள் ஹிந்தியிலும் பல புத்தகங்களை எழுதினர்கள்....

பல பாரசீகப் புலவர்களைச் சிருஷ்டித்த பெருமை இந்தியாவிற்கே உரியது. பாரசீக இலக்கியத்தை வளர்த்ததும் இந்தியாதான் என்று கூறுவது மிகையாகாது. "பாரசீகத்திலுள்ள ஹகீம் ஸானாய், அன்வாரி—போன்ற புலவர்கள், இந்தியாவிலிருந்த பாரசீகப் புலவர்களை ஏற்றிப் போற்றித் தலை வணங்கினார்கள்" என்று மஹமத் அப்துல் கனி கூறுகிறார். கஜினி அரசர்களும், கில்ஜி அரசர்களும், மொகலாய அரசர்களும் இந்தியா

வில் ஆட்சி புரிந்த காலத்தில்—மூன்று முறை—இந்தியாதான் பாரசீகத்திற்கு இலக்கியத் துறையில் தலைமை தாங்கிற்று.

மகா கவி ஓமார்கயூம் போன்ற பாரசீகப் புலவர்கள் இந்தியர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுபோனார்கள். அதேமாதிரியாக மகா கவி இக்பால் போன்ற இந்தியாவில் பிறந்த கவிகளும் பாரசீக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர்...

சமீபகாலத்தில் முறிந்துபோன இலக்கியத் தொடர்பு திரும்பவும் புதுப்பிக்கப்பட்டிருப்பதோடு, புதிய தொடர்பும் ஏற்பட்டிருக்கிறது. இரு தேசங்களும் ஒரே லட்சியத்திற்காக—சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காக—ஒரே எதிரிகளை—ஏகாதிபத்தியங்களையும், தத்தம் சுதேச பிற்போக்காளர்களையும்—எதிர்த்துப் போராடுகின்றன. ஏகாதிபத்தியங்களையும் பிற்போக்காளர்களையும் எதிர்த்துப் போராட, இரு தேசங்களும் ஒரே அணியில் அணிவகுத்து நிற்கின்றன.

சென்ற நூற்றாண்டில் பாரசீகத்தில் ஜனநாயகத்தைப் பரப்பப் போராடிய பத்திரிகைகளில், "ஹப்லுல் மா தீன்"தான் தலை சிறந்தது. ஸையத் ஜலாலு தீன் கூஸான் அதன் ஆசிரியர். பாரசீக யதேச்சாதிகார அரசன், ஜனநாயகக் கொள்கைளுக்கு இடமிளிக்காததால், 1893-ம் வருடம் ஜலாலுதீன் இந்தியாவுக்கு வந்து, கல்கத்தாவில் அந்தப் பத்திரிகையைத் திரும்பவும் பிரசுரித்தார். இங்கிருந்து, பாரசீகத்திற்கு தமது பத்திரிகையை அனுப்பி, தாயகத்திலுள்ள ஜனநாயக இயக்கத்திற்கு ஆக்கமளித்தார்.

முன்பு பாரசீக இலக்கியத்திற்கு உதவிபுரிந்த இந்தியா, இன்று சுதந்திர ஜனநாயக இயக்கத்திற்கு ஆதரவளிக்கிறது.

பாரசீக மக்களும் இந்த உறவின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தனர்.

"இந்தியா, பாலஸ்தீனம், இந்தோ சைனா, இந்தோனேஷியா முதலிய நாடுகளின் பரிதாபகாரமான நிலைமை எங்களுக்குத் தெரியும். அவர்கள் கஷ்டப்படுவதைக் கண்டு நாங்கள் பெரிதும் வருந்துகிறோம். இந்த நாடுகள்மீது உலக மக்களின் கவனம் செலுத்தப்பட்டிருப்பதை வேறு திசையில் திருப்பும் பொருட்டு, பாரசீகத்தை ஒரு கருவியாக உபயோகப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை......" என்று பாரசீக சட்டசபையில் டூடே கட்சியின் தலைவராக இருக்கும் டாக்டர் கேஷாவரெஸ் பிரிட்டிஷ் அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபொழுது கூறினர்.

"யுகோஸ்லேவியா, ஆல்பேனியா......முதலிய நாடுகளில் தோன்றியிருக்கும் சுதந்திர இயக்கங்களை நாங்கள் வரவேற்கி

றேம். ஏதேனும் ஒரு தேசத்தில் ஜனநாயக இயக்கம் முறியடிக் கப்பட்டால், அது உலக முழுதுமுள்ள ஜனநாயக இயக்கங்களைப் பாதிக்கக்கூடிய சம்பவம்" என்று உலக முழுதும் சுதந்திர ஜன நாயக முன்னணியை நிறுவவேண்டிய அவசியத்தை டாக்டர் கெஷாவரெஸ் மேலும் வற்புறுத்திக் கூறினர்,

ஆம், முற்றும் உண்மைதான். நமது தலைமாட்டிலுள்ள பாரசீகத்தில் சுதந்திர, ஜனநாயக இயக்கம் வெற்றிபெற்ருல், அது இந்தியாவின் வெற்றி; சுதந்திர, ஜனநாயக இந்தியா வாகை மாலை சூடினல், அது பாரசீகத்தின் வெற்றி; உலக முற்போக்கா ளர்களின் வெற்றி. எனவே, பாரசீகத்தில் மலர்ந்திருக்கும் ஜன நாயக இயக்கத்தைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில், பாரசீகப் போராட் டத்தை ஏகாதிபத்யங்கள் திரித்துக்கூறுகின்றன. இந்தப் பொய்ப் பிரசாரத்தின் மூலமாக, பாரசீக சுதந்திர, ஜனநாயகப் போராட் டத்தை உலக முற்போக்கு சக்திகளிடமிருந்து தனியே பிரித்து, அதை நசுக்க முயற்சிசெய்கின்றன. சர்வதேச சுதந்திர ஜன நாயக முன்னணியின் முக்கியத்துவத்தை ஏகாதிபத்தியங்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. ஆனல், துரதிர்ஷ்ட வசமாக, ஏகாதிபத்தியங்களின் மாயவலையில் காங்கிரஸ் தலைவர்களும், முஸ்லிம் லீக் தலைவர்களும், தேசீயப் பத்திரிகைகளும் சிக்கியிருக் கிருர்கள்.

> உதாரணமாக, "ரஷ்ய எல்லையை ஒட்டிய மாகாண மொன்றில் கலகம் முற்றிக்கொண்டு வருகிறது...... அங்குள்ள ஜனங்கள் இரானிலிருந்து பிரிந்து, ரஷ்யா வுடன் ஐக்கியமாக விரும்புகிருர்களாம்" என்று "சுதேசமித்திரன்" ஏகாதிபத்தியப் பொய்ப்பிரசாரத் தை நம்பி, அஜெர்பெஜான் தேசீய இயக்கத்தைக் தாக்குகிறது. (23-11-45)

ஏகாதிபத்தியங்களைவிட அதிக ஆத்திரத்தோடு சோவியத் யூனியனை வெளுத்து வாங்குகிறது "தினசரி" (21-11-45).

> "பாரசீக சர்க்கார் தங்களுக்குச் சாதகமாக இல்லையாத லால், மஞ்சூரியாவில் ரஷ்யா என்ன செய்ததோ, அதைத்தான் பாரசீகத்திலும் இன்று செய்கிறது. இது முதல்தரமான மோசடி என்பதில் சந்தேக மில்லை."

**பண்டித ஜவஹர்லால் நேரு "இரானில் ரஷ்ய ஆக்கிரமிப்பு" என்கிருர் (15-3-46). முஸ்லிம் லீக் தலைவர் ஜனப் ஜின்னுவும்**

"ரஷ்யா என்றால் தகராறு என்று அர்த்தம்........பாரசீகத்தில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினால், அதை முஸ்லிம் நாடுகள் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கமுடியாது" என்று ஸோவியத் யூனியனைக் கண்டிக்கிறார் (13-3-46).

ஏகாதிபத்தியங்கள் விரும்பியது இதுதான். பாரசீக இயக்கத்தையும், சோவியத் யூனியனையும் ஏனைய சுதந்திர இயக்கங்கள் தாக்கவேண்டுமென்பதற்காகத்தான் ஏகாதிபத்தியங்கள் பொய்ப் பிரசாரம் செய்தன.

"அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர் போலே கலிவிழ்ந்தான்.
கிரு தயுகம் எழுகமாதோ!"

என்று மகா கவி பாரதியார் சோவியத் யூனியனைப் புகழ்ந்து பாடினார். மகா கவி தாகூரும் அதே புது உலகைப் பாராட்டினார். ஆனால், அவர்களது பரம்பரைகள் சிந்திக்காமல், ஏகாதிபத்திய சூழ்ச்சியைக் கவனிக்காமல் நாக்கில் நரம்பில்லாமல் வசை புராணம் பாடினார்கள்!

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்றும்,

"எல்லோரு மோர் குலம்
எல்லோ ருமோ ரினம்"

என்றும் புதிய பாரத சமுதாயத்தைச் சிருஷ்டிக்க பாரதியார் கனவுகண்டார். அதை நனவாக்கியது சோவியத் யூனியன். பாரதியார் உலகைத் திட்டுவது தேசபக்தியா? பாரதியாருக்கு மரியாதை செலுத்துவதா, அல்லது அவமரியாதை செய்வதா? சிந்தித்துப் பாருங்கள்! பாரதியாரை வானளாவப் புகழ்கிறவர்கள், அவருக்கு ஞாபகச் சின்னங்களை அமைப்பவர்கள் பாரதியாரின் கொள்கைகளை மாத்திரம் ஏன் காற்று வாக்கில் பறக்கவிடுகிறார்கள்?

இன்று நாம் இந்தோனேஷியா, பர்மா, மலேயா, இந்தோசைனா முதலிய நாடுகளின் சுதந்திர இயக்கங்களை வரவேற்கிறோம்; ஆதரிக்கிறோம். அந்நிய ஏகாதிபத்தியங்களின் கடுமையான ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்தபோதிலும், படுகளத்தில் நிற்கும் இந்தோனேஷியாவும், இந்தோ சைனாவும், "பஞ்சத்தால் பரதவிக்

கும் பாரத மக்களுக்குப் பஞ்சத்தைப் போக்க அரிசிகொடுக்கத் தயாராக இருக்கிறோம்'' என்று முகமலர்ச்சியுடன் கூறுகின்றன.

பிரிட்டிஷ், அமெரிக்க, பிரஞ்சு, டச்சு ஏகாதிபத்தியங்கள் "இந்த நாடுகளில் தலை தூக்கியிருக்கும் சுதந்திர இயக்கங்கள் ஜப்பானியர்களால் தூண்டிவிடப்பட்டவை'' என்று பொய்ப் பிரசாரம் செய்தன. இதை நம்பி நாமும் ஏகாதிபத்தியங்களுக்கு வால்பிடித்து, தென் கிழக்கு ஆசிய நாடுகளிலுள்ள சுதந்திர இயக்கங்களைத் திட்டியிருந்தால், அவர்கள் மனம் புண்பட்டிருக்காதா? போர்க்களத்தில் நின்றுகொண்டு இந்தியாவிற்கு உதவி செய்ய முன் வருவார்களா? ஆனால் நாம் ஏகாதிபத்தியங்களின் துவேஷப் பிரசாரத்தை நம்பவில்லை. எனவே, நேச உறவு பலப்பட்டது. ஏகாதிபத்தியங்கள்தான் தனியே ஒதுக்கித் தள்ளப்பட்டன.

1942–ம் வருடத்தில் நமது தேசத் தலைவர்கள் திடீரெனக் கைது செய்யப்பட்டதும், பொதுமக்கள் வீறுகொண்டெழுந்தனர். "இது ஜப்பானிய பாசிஸ்டுகளுக்கு ஆதரவான இயக்கம்'' என்று இதே சர்ச்சில், அமெரி கும்பல்கள் பொய்ப் பிரசாரம் செய்யவில்லையா? இதை நம்பி ஏகாதிபத்தியங்களுக்கு ஒத்து ஊதிய பிற்போக்காளர்கள்மீது நமக்குக் கோபம் வரவில்லையா? இந்தோனேஷியா, இந்தோ சைனா முதலிய நாடுகளும் ஏகாதிபத்தியங்களுக்குத் தாளம்போட்டிருந்தால், நமக்கு ஆத்திரம் வந்திருக்காதா? நமது அன்பையும், ஆதரவையும் அவர்கள் இப்பொழுது பெற்றிருப்பார்களா?

அஜர்பெஜானிலுள்ள தேசீய இயக்கம் "கலாச்சார சுதந்திரத்தை''க் கேட்டது. பாரசீகப் பிற்போக்காளர்களும், ஏகாதிபத்தியங்களும் உண்மையைத் திரித்துக்கூறி, வழக்கம்போல் சுதந்திர ஜனநாயக எதிர்ப்புப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டன. காங்கிரஸ், லீக் தலைவர்களும், தேசியப் பத்திரிகைகளும் ஏகாதிபத்தியங்களின் குரலை எதிரொலித்தார்கள். இதைக்கேட்டு, அஸர்பெஜான் மக்கள் மனம் புண்பட்டிருக்காதா? நம்மையும் சர்ச்சில், அமெரி கும்பலில் சேர்த்திருக்கமாட்டார்களா? இதனால் யார் நன்மை யடைந்தார்கள்? ஏகாதிபத்தியங்களும், பிற்போக்காளர்களும்தான்!

ஆகவே, சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் விரும்புகிறவர்களாகிய நாம் பாரசீகத்தின் உண்மையான நிலைமையைத் தெரிந்துகொண்டு, ஏகாதிபத்தியத்தின் மாயவலையைச் சுக்குநூறுக் கிழித்தெறிய வேண்டும். அதுதான் நமது சுதந்திரப் பாதை.

சர்வதேச நிலைமையை நாம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால்தான் ஜனநாயகரீதியில் ஒரு முடிவுகட்டமுடியும். இல்லையானால், ஏகாதிபத்தியங்களுக்குத் தாளம்போட வேண்டியதுதான்.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்துவிட்டது. கிழக்கி லும், மேற்கிலும் ராணுவத் துறையில் பாஸிஸ்டுகள் முறியடிக்கப் பட்டனர். ஆனால், அவர்களுடைய சகாக்கள், சகல மக்களுக் கும் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அளிக்க மறுக்கிறார் கள். போராட்டத்தில் புடம்போட்டு எடுக்கப்பட்ட பொது மக் கள் அதைப் பெற்றே தீருவோம் என்று போர் முரசு கொட்டு கிறார்கள். இந்தப் போராட்டம்தான் பாரெங்கும் நடக்கிறது. இதை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. இந்தோசைனா, இந்தோனேஷியா, இந்தியா, பர்மா, மலேயா முதலிய அடிமை நாடுகள் சுதந்திரத்துக்காக ஏகாதிபத் தியங்களை எதிர்த்துப் போராடி வருகின்றன.

2. சைனா, கிரீஸ், பாரசிகம் முதலிய "சுதந்திர" நாடுகளில் உள்ள மக்கள் ஜனநாயக உரிமைகளைப் பெறும்பொருட்டு தத் தம் நாட்டை ஆளும் எதேச்சாதிகார சர்க்காரையும், அவர்களை ஆதரிக்கும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்துப் போராடி வரு கிறார்கள்.

பாரசிகத்தில் நடக்கும் போராட்டம் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தது. சுதேச பிற்போக்காளர்களையும், பிரிட்டிஷ், அமெ ரிக்க ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்துப் போராடினார்கள்......

சமீபத்தில் பாரசிகத்தில் நடந்த குழப்பத்திற்கு யார் கார ணம்? சோவியத் யூனியனா? இதோ பாரசீகத்தின் தலைவர்களே பதில் கொடுக்கிறார்கள்.

லண்டனிலுள்ள "டெய்லி டெலிகிராப்" நிருபரிடம் (இது சர்ச்சில் கும்பலின் பத்திரிகை) டிசம்பர் மாதத்தில்,

> "ஐக்கிய நாடுகளின் கொள்கைப்படி, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அனுதாபம் காட்டும் முறையில்தான், அஜர்பெஜான் விஷயத்தில் ரஷ்யா தலையிட்டது என்று கவாம் ஸுல்தானே கூறினார்" என்று எ. ஆர். ஹார்டிஞ்ச் "ஹிந்துஸ்தான்" பத்திரிகையில் (10-3-46) எழுதுகிறார்.

> "கடந்த இரு சட்டசபைகளின் பிரதிநிதிகளும், அவை களின் மந்திரி சபைகளும்தான் இப்பொழுது ஏற்பட்டிருக் கும் குழப்பத்திற்குக் காரணம். முட்டாள்தனமான கொள் கைகளாலும், செயல்களாலும், பாரசீகத்திற்கும், ரஷ்யா விற்கும் இடையே பாதகம் விளைவிக்கக்கூடிய அவநம்பிக் கையை உண்டுபண்ணினார்கள்"

என்று கவாம் ஸுல்தானே சமீபத்தில் அறிவித்தார். (இந்தோ னேஷியாவிலிருந்து வெளியாகும் "இன்டிபெண்டண்ட்" பத்திரி கையிலிருந்து மேற்கோள்).

ஆனல், உண்மையாகவே தலையிட்டது யார்? எதற்காக?

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் தெற்கு பாரசீகத்திலும், பாரசீக வளைகுடாவிலும் உள்ள பிரிட்டிஷ் சொத்துக்களைப் பாது காப்பதுபற்றி, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கேள்வி கேட்ட பொழுது பெவின் ஏகாதிபத்திய வெறியோடு கொக்கரித்தான்.

> "பிரிட்டனின் சொத்து உலகத்தின் எந்த பாகத்தில் இருந்தாலும் சரி, அதை பிரிட்டிஷ் சர்க்கார் பாதுகாக்கத் தான் செய்யும் என்று பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி பெவின் பதிலளித்தார். சமாதானத்தின் துரதிர்ஷ்டம் பிரிட் டனின் சொத்து உலக முழுவதும் இருக்கிறது. யாராவது இதை எதிர்த்துக்கொண்டே இருக்கிருர்கள். பாரசீகத்தில் பிரிட்டனுக்குச் சொந்தமான எண்ணெக் கிணறுகள் ஏராள மாக இருக்கின்றன. இப்பொழுது, சோவியத் யூனியனுக்கு ஒன்றுமே கிடையாது......" என்று பெவின் பிரசங்கத்திற்கு "ஹிந்து" பத்திரிகை (25-11-45) விமர்சனம் எழுதிற்று.

கன்ஸர்வேடிவ் கட்சியைச்சேர்ந்த பிரிகடியர் அந்தோனி ஹெட் என்பவனும், தொழிற்கட்சியைச் சேர்ந்த மைக்கேல் புட் என்பவனும் ஏப்ரல் மாதத்தில் பாரசீகத்திற்குச் சென் ருர்கள். திரும்பி வந்தவுடன் பிரிகடியர் அந்தோனி ஹெட், "பாரசீகத்தில் தலையிடக்கூடாது என்று சிலர் சொல்லுகிருர் கள்......இந்தச் சமயத்தில் பாரசீகத்தில் தலையிடக்கூடாது என்று சொல்வதன் அர்த்தம், பாரசீகத்தைக் கைநழுவ விட்டுவிடுவது, பாரசீகத்திலுள்ள பிரிட்டிஷ் நல உரிமைகளை (ஆங்கிலோ இரா னிய எண்ணெக் கம்பெனி முதலானவற்றை) பிறரிடம் ஒப்படைப் பது என்பதுதான்" (ஹிந்து 25-4-46) என்ருன்.

ஆகவே, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு வால் பிடித்தவர்கள் கண்ணைத் திறந்து பார்க்கட்டும்! ஏகாதிபத்தியப் பிரசார யந்திரத்திற்கு அடி பணிந்து, ஜனநாயக இயக்கத்தையும் சோவியத் யூனியனையும் தாக்குவதுதான் நமது சுதந்திரப் பாதையா? நமது பரம்பரையா? சிந்தித்துப் பாருங்கள்!

## இரண்டாயிரம் குடும்பங்களின் ஆட்சி

பாரசீகத்தை "சுதந்திர, ஜனநாயக நாடு" என்று ஏகாதிபத் தியங்கள் தம்பட்டமடித்தன. வாஸ்தவத்தில், பாரசீக மக்கள் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் கண்டதோ, கேட்டதோ கிடையாது. ஏகாதிபத்தியங்களின் ஆலோசகர்களும், அவர்களது கையாட்களான சுதேச மன்னர்களும், நிலச்சுவான்தார்களும்

தான் பாரசீகத்தில் ஆட்சிபுரிந்து வந்தார்கள். பொதுமக்களுக்கு அரசியலில் இம்மியளவேனும் உரிமை கிடையாது. பாரசீகம் தொன்றுதொட்டு யதேச்சாதிகார மன்னர்களின் ஆதிக்கத்தி லிருந்தது.

1905ம் வருடம் ரஷ்யாவில் வீசியடித்த சுதந்திர, ஜனநாயகப் புரட்சி, பாரசீகத்தையும் தட்டியெழுப்பிற்று.

"1905ம் வருடம், நடந்த புரட்சி பாரசீக மக்களையும் ஒரு உலுக்கு உலுக்கிற்று. 1906ம் வருடம், பாரசீகத்தில் நடந்த ஜன நாயகப் புரட்சிக்கு ரஷ்யப் புரட்சிதான் காரணம்.........ரஷ்யப் புரட்சி என்ற சண்டமாருதம் பாரசீகத்திலும் வீசி அடித்தது. பாரசீக மக்கள் ரஷ்யப் புரட்சியை இமை கொட்டாமல் கவனித் தார்கள் என்று பாரசீகப் புரட்சியை நேரில் கண்ட ஒருவர் சொன்னார்........." என்று "கிழக்கில் தேசீய இயக்கத்தின் சரித் திரம்" என்ற புத்தகத்தில் ஹான்ஸ் கோஹன் கூறுகிறார்.

ரஷ்யப் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் ".........டுமா (சட்டசபை) ஸ்தாபிக்கப்பட்டது. இந்தச் சம்பவம், பாரசீக சரித்திரத்திலும் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தது......சட்ட சபை வேண்டுமென்று பாரசீகம் முழுதும் பெருத்த கிளர்ச்சி நடந் தது" என்று எச். ஆர். ஹால், "மத்தியதரைக கடலிலுள்ள நாடு களின் புராதன சரித்திரம்" என்ற புத்தகத்தில், பாரசீகப் புரட் சிக்கு ரஷ்யப் புரட்சிதான் புத்தியிரளித்தது என்பதை சுட்டிக் காட்டுகிறார்.

1906ம் வருடம், பாரசீக மக்கள் வீறுகொண்டெழுந்து, பார சீக மன்னனின் யதேச்சாதிகாரத்தின் மண்டையில் ஓங்கி அடித்த னர். இதன் விளைவாக, அக்டோபர் மாதம் பாரசீகத்திலும் ஒரு சட்டசபை (மஜ்லிஸ்-இ-மில்லி) ஏற்பட்டது. பத்திரிகைகளும் உதயமாயின. ஆனால் பொதுமக்கள் பரிபூரணமாக பிரஜா உரி மைகளையும், ஓட் உரிமையையும் பெறவில்லை. எனவே, நிலச்சு வான்தார்களும், சுதேச மன்னர்களும், முதலாளிகளும்தான் அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

இந்தச் சட்டசபை கூட, பிரிட்டிஷ், ரஷ்ய ஏகாதிபத்யங்களின் ஆதிக்கத்தில்தான் இருந்தன; "இரு வல்லரசுகளும், குழந்தைப் பருவத்திலிருந்த புதிய சர்க்காரைப் பலஹீனப்படுத்தி வந்தன" என்று ஹான்ஸ் கோஹன் கூறுகிறார். ஆம், தங்களுடைய கை யாட்கள் மூலமாக ஏகாதிபத்தியங்களின் "பொம்மை" சட்டசபை யாக மாற்றினார்கள்.

உதாரணமாக, மார்கன் ஷுட்ஸ் என்ற அமெரிக்கரை, பாரசீக சர்க்கார் பொருளாதார ஆலோசகராக நியமித்தது.

இவரை உடனே விலக்கவேண்டுமென்று, ரஷ்ய ஏகாதிபத்தியம் ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்தது. சட்டசபையிலுள்ள ஜன நாயகவாதிகள் ரஷ்யாவின் கோரிக்கையை நிராகரித்து ஒரு தீர் மானம் நிறைவேற்றினார்கள். உடனே, ரஷ்யப்படைகள் பார சீகத்தின் பலபாகங்களைக் கைப்பற்றி, நூற்றுக்கணக்கானவர் களைச் சுட்டு வீழ்த்தின.........இறுதியில் அவர் பலாத்காரமாக விலக்கப்பட்டார்.

இத்துடன், ஒரு சில சுதேச பிற்போக்காளர்கள்தான் பார சீகத்தை ஆட்சிபுரிந்து வந்தார்கள். இவர்களுடைய யதேச்சாதி கார ஆட்சி அவ்வளவு அத்துமீறிப் போனதால், ஏகாதிபத்யச் செய்தி ஸ்தாபனமான "ராய்ட்டரின்" நிருபரே (ஜான்சிம்சே "கல்கத்தா ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையில் 27-12-45) சில உண் மைகளை அம்பலப்படுத்துகிறார்:

"பெயரளவில்தான் பாரசீகம் சட்டசபையுள்ள ஒரு முடி யாட்சியாக இருக்கிறது. ஒரு மஜ்லிஸும் (சட்ட சபை) ஒரு மந்திரி சபையும் இருக்கின்றன. பெயரளவில் மந்திரி சபை சட்ட சபைக்குப் பொறுப்பானது. ஆனால், **2000** பணக்காரக் குடும் பங்கள்தான் சர்க்காரை நடத்துகின்றன. பாரசீகத்திலுள்ள நிலம் அனைத்தும் இவர்களுக்குத்தான் சொந்தம். மந்திரி சபை யும், சட்ட சபையும் இவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக் கின்றன.

"அரசாங்க நிர்வாகம், வரி வசூல், போலீஸ் முதலிய இலாக் காக்களெல்லாம் இவர்களுடைய நேரடியான ஆதிக்கத்தில் இருக் கின்றன. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், சட்டசபை அங்கத் தினர்களும் லஞ்சமும், ஊழல்களும் உருவெடுத்தாற் போன்றவர் கள். டூடே கட்சி (பொதுஜனக் கட்சி) தோன்றுவதற்கு முன்பு, அரசியலில் பொது மக்களுக்கு இம்மியளவேனும் உரிமை கிடையாது.

"மஜ்லிஸில், ஸ்தாபன ரீதியாகக் கட்டுப்பாட்டுடன் இருப் பவர்கள் டூடே கட்சியினர்தான். ஏனையவர்கள் ஆறு சிறு கும் பல்களாகப் பிரிந்திருக்கிறார்கள்.........இவர்களுடைய லட்சியம், கட்சி கட்டி, பல தில்லுமுல்லுத்தனங்கள் மூலமாகத் தங்களு டைய உறவினர்களுக்கு உத்தியோகம் தேடுவது, பிரத்தியேக வியாபாரச் சலுகைகளைப் பெறுவது முதலியனதான்.......

"ஒரு வருடத்திற்கு மேலாக, உடனடியாகத் தீர்க்கவேண் டிய சமூக, பொருளாதார மசோதாக்கள் நூறுக்குமேல் சட்ட சபையில் குவிந்து கிடக்கின்றன. மஜ்லிஸிலுள்ள 127 அங்கத் தினர்களில், 65 சதவிகிதம் பேர்கள் சட்டசபைக் கூட்டத்திற்கு விஜயம் செய்தால்தான் (கோரம்) கூட்டத்தை நடத்த வேண்டு

மென்று சட்டம் கூறுகிறது. எனவே, ஏதேனும் முற்போக்கு மசோதாக்கள் சட்டசபைக்கு வந்தால், பணக்கார அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வருவதே கிடையாது,......இவர்கள் சட்டசபையில் பெரும்பாலோராக இருப்பதால் சட்டசபைக் கூட்டமே நடப்பது கிடையாது.

"தெஹ்ரானிலுள்ள 87 பத்திரிகைகளில் 57 பத்திரிகைகள் வலதுசாரிகளுக்குச் சொந்தம். சர்க்கார் வருமானத்தில் 50 சதவிகிதம் ராணுவத்திற்கும், போலீஸுக்கும் செலவழிக்கப்படுகிறது. ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் ஏழரை ரூபாய்தான்!....

"ரஷ்யப் புரட்சிக்கு முன்பு, இந்த 2000 குடும்பங்கள் ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் (ஜார் ஆட்சியில்) நண்பர்கள். சோவியத் ஆட்சி ஏற்பட்ட பின்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடுக் கூடிக் குலாவினார்கள். ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு, பாஸிஸ்டுகளின் உறவினர்களானார்கள். அவன் வீழ்ச்சிக்குப் பின்னர், திரும்பவும் பிரிட்டிஷ், ஏகாதிபத்தியத்தின் நண்பர்களாக மாறினார்கள்......"

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை முடிமன்னனின் பொம்மைச் சபைதான் என்பதை எல். பி. எல்வெல்ஸுட்டன் என்ற ஏகாதிபத்திய ஆசிரியரே "நவீன ஈரான்" என்ற புத்தகத்தில் ஒப்புக் கொள்கிறார்:

"சகல பெரிய உத்தியோகஸ்தர்களும், தெஹ்ரானிலுள்ள அதிகாரிகளால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் தெஹ்ரானைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், சுதேச மக்களை வெறுக்கிறார்கள்; அவர்களுடைய நலஉரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கரையே கிடையாது.......

"சகல சட்டங்களையும், முதலில் சர்க்கார் இலாக்காக்கள் உருவாக்கி, பின்பு சட்டசபையிலுள்ள கமிட்டிக்குச் சமர்ப்பிக்கின்றன. பின்பு பொது சபை முன்பு வைக்கப்படுகின்றன. கடைசியில் அவைகளில் கையெழுத்திடுவதற்காக, அரசனுக்கு அனுப்பப்படுகின்றன. இது சம்பிரதாயம். ஆனால், உண்மையில் நடப்பதென்ன? அரசனுடைய மந்திரிகள் மூலமாகப் பிரரேபிக்கப்பட்ட மசோதாக்களை சட்டசபையிலுள்ள பிரதிநிதிகள் ஊர்ஜிதம் செய்வதைத் தவிர, சுயேச்சையாக வேறு யாதொன்றும் செய்யமாட்டார்கள்."

"ரேஸாஷாதான் (பாரசீக மன்னன்) பாரசீக சர்க்கார்-மந்திரிகள் வரலாம், போகலாம். பெயரளவில்தான் மந்திரிகளுக்கு அதிகாரம் இருந்தது. உண்மையில், ரேஸாஷாதான் சர்க்காரை நேரில் நடத்தி வந்தான்......யுத்தத்திற்குமுன்பு யார்

அதிகம் லஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் மாகாண கவர்னர் பதவி கொடுக்கப்பட்டது. இயல்பாகவே, லஞ்சம் கொடுத்த பணத்தை எவ்வளவு விரைவில் திரும்பிப் பெறுவது என்பதில்தான் இவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்தனர்.......வரி வசூலிக்கும் முறை கொடிது, கொடிது...... ஒருநாள் பாரசீக அரசன் வீதியில் செல்லும்பொழுது, ஒரு தாய் தன் மகனை அடித்துக்கொண்டிருந்ததைக் கண்டான். காரணம் என்னவென்று கேட்டபொழுது, "என்னுடைய தோட்டத்தி லுள்ள திராக்ஷப் பழக் குலையை மகன் பறித்துவிட்டான். இன்னும் வரி கொடுக்கவில்லை. வரி கொடுக்காமல் தோட்டத்திலிருந்து ஒரு பழத்தைக்கூடப் பிடுங்கக்கூடாது. இது சட்டம்......என்று பதில் சொன்னாள்......" என்று மார்கரெட் போவ்ரி "மினரட் அண்டு பைப்லைன்" என்ற புத்தகத்தில் ஊழல் நிறைந்த பாரசீக சர்க்காரின் குட்டை அம்பலப்படுத்துகிறார்.

"இரானிலுள்ள சட்டசபையில் நிலச்சுவான்தார்கள்தான் பெரும்பான்மையோர். இவர்கள் பொறுக்கியெடுக்கும் மந்திரி கள் யாவரும் நிலச்சுவான்தார்கள்தான். அன்னிய நாட்டு எண்ணெ முதலாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே கவனம் செலுத்துகிறவர்கள். மக்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கரையே கிடையாது.!' என்று எ. ஆர். ஹார் டிஞ்ச் "இந்துஸ்தான்" என்ற பத்திரிகையில் எழுதுகிறார். (3-10-46)

பாரசீக சட்டசபையின் நிலைமையையும், அதன் அங்கத் தினர்கள் நிலைமையும் ரேமாண்ட் ஆர்தர் டேவீஸ் "ஆசியாவும் அமெரிக்காவும்" என்ற பத்திரிகையில், இதோ அம்பலப்படுத்து கிறார்:

"பாரசீக சட்டசபையில் 126 பேர்கள் இருக்கிறார்கள். அதில் மார்டான் (10 அங்கத்தினர்கள்) எராடே (2 அங்கத்தினர்கள்) எடெலாட் (7 அங்கத்தினர்கள்) டூடே (8 அங்கத்தினர்கள்) ஆகிய நான்கு கட்சிகள் இருக்கின்றன......ஏனையவர்கள் எந்தக் கட்சி யைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டேன். 'ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்சி இருக்கிறது. யாவருக்கும் ஒரே லட்சியம்தான். எவ்வளவு சீக்கிரத்தில் பணக்காரனாவது, எப்படி விவசாயிகளை நிலத்தைப் பெறாமல் நசுக்குவது என்பதுதான் அவர்களுடைய திட்டம்" என்று பதில் சொன்னார்கள். ஒரு மந்திரியின் மகனை அரசியல் நிலைமையைப் பற்றி கேள்வி கேட்டேன். "பணக்காரர் கள் அனைவரும் பிரிட்டனை ஆதரிக்கிறார்கள். சகல ஏழைகளும் ரஷ்யாவை ஆதரிக்கிறார்கள்" என்று பதிலிறுத்தார்.

"எடெலாட் (நியாயம்) கட்சியின் தலைவரான டாக்டர் இம்மாமியைக் கண்டு பேசினேன். அவர் யந்திரத் தொழிலை அபிவிருத்தி செய்யக் கூடாதென்றார். காரணம்......பெரிய நகரங்கள் கிராமங்களிலுள்ள விவசாயிகளை ஆகர்ஷிக்குமாம். எனவே, கிராமங்களில் குறைந்த கூலிக்கு விவசாயிகள் கிடைக்க மாட்டார்களாம்."

இதுதான் பாரசீக சர்க்காரின் நிலைமை. பாரசீக மக்களை இவ்வாறு சுரண்டிக் கொழுத்த ஒரு சில பிற்போக்காளர்கள்தான் சமீபத்தில் "சோவியத் ரஷ்யா எங்கள் சுதந்திரத்தில் தலையிடுகிறது" என்று ஒப்பாரி வைத்தார்கள்.

## சுதேச மன்னர்கள்

இந்த 2000 குடும்பங்களைத் தவிர, "அடங்காப்பிடாரிகளான" சுதேச மன்னர்களும், தங்களுடைய ஆதிக்கத்தின் கீழுள்ள மக்களைச் சுரண்டிக் கொழுத்தனர்.

பாரசீகத்தின் தென் பகுதியில் பார்ஸ், பாக்தியாரி, போயர் அஹமெடி, மமாஸானி, காமேஷ் முதலிய பல மலைஜாதியினர்கள் இருக்கிறார்கள். இங்கு பல சுதேச மன்னர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு கான், ஷேக் என்று பெயர். இவர்கள் மத்திய சர்க்காருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களல்ல. அடங்காப் பிடாரிகள். நமது நாட்டிலுள்ள சுதேச மன்னர்களைப்போல், ஏகாதிபத்தியங்களையும், சுதேச பிற்போக்காளர்களையும் ஆதரிப்பவர்கள். சுதேச மக்களின், ஜனநாயகத்தின் பரம வைரிகள். தங்களுடைய பிரஜைகளுக்கு அணுவளவேனும் பிரஜா உரிமைகளைக் கொடுக்காமல், யதேச்சாதிகார ஆட்சியைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

"ஆங்கிலோ இரானிய ஆயில் கம்பெனி கொடுக்கும் மானியத்தின் மூலமாக ஷேக்குகளும், கான்களும் கொழுத்த பணக்காரர்களாகி யிருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து ஏராளமான ஆயுதங்களையும் பெற்று வருகிறார்கள்"......என்று "உலக விவகாரத்தில் சோவியத்" என்ற புத்தகத்தில் லூயிபிஷர் குறிப்பிடுகிறார். இவர்கள் ஏகாதிபத்தியங்களை ஏன் ஆதரிக்கமாட்டார்கள்?

இத்துடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இவர்களுடைய படைகளுக்கு நவீன ராணுவப் பயிற்சியையும் கொடுத்திருக்கிறார்கள். மே. ஸர் குயேவ் என்ற ஸோவியத் ஆசிரியர் சென்ற வருடத்தில் பாரசீகம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து "நியூ டைம்ஸ்" என்ற சோவியத் பத்திரிகையில் இவர்கள் நிலைமையை அம்பலப் படுத்துகிறார்:

"பாரசீகத்தின் வடபாகத்தில் காஷ்காய், பாக்தியார் முதலிய மலை ஜாதியினர் வாழ்கிறார்கள். இவர்கள் பெயரளவில்தான் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறார்கள். கான்களும் ராணுவத் தலைவர்களும்தான் உண்மையான ஆளும் அதிகாரிகள்"

தெஹ்ரானிலுள்ள "கீஹான்" என்ற பத்திரிகை, "கான்கள் தான் கவர்னர்கள்; இவர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிகிறார்கள். இவர்களிடம், இவர்களுக்குச் சொந்தமான படைகள் இருக்கின்றன. தங்களுடைய எல்லைப் புறங்களைத் தாங்களே பாதுகாத்து வருகிறார்கள். ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டு, அவர்களே சுயேச்சையாக சமாதான ஒப்பந்தங்களையும் செய்து கொள்கிறார்கள். இவர்கள் மத்திய சர்க்காரை எள்ளி நகையாடுகிறார்கள். மத்திய சர்க்காரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே கிடையாது"

என்று (26—1—45) உண்மையான நிலைமையை எடுத்துரைத்தது.

1945ம் வருடத்தில், வசந்தகாலத்தில், ஷாரேகுர்ட் மாகாணத்திற்கு நீதிபதியாக காஷேமி என்பவரை மத்திய சர்க்கார் அனுப்பிற்று. ஆனால், அவர் விரைவில் திரும்பிவந்து, "இந்தப் பகுதியில்மன்னர்களின் யதேச்சாதிகாரம் நடக்கிறது. மத்திய சர்க்காரை அங்கீகரிக்கவில்லை" என்று கூறினார்.

இந்தச் சுதேசமன்னர்கள் தங்கள் விருப்பம்போல் வரிகளை விதிக்கிறார்கள். பொதுமக்கள் அதிருப்தியைத் தெரிவித்தால், மிருகத்தனமாகப் பழிவாங்கப்படுகிறார்கள்.

உதாரணமாக, 1945ம் வருடம் செப்டம்பர் மாதத்தில், ஆர்டெல் என்ற கிராமத்திலுள்ள விவசாயிகள் விளைவித்த தானியங்கள் அனைத்தையும் சுதேச மன்னன் பிடுங்கிக்கொண்டு போனான். காரணம், விவசாயிகள் சுதேச மன்னனின் சட்டங்கள் கொடியதாக இருக்கிறது என்று சொன்னார்களாம் என்று மெ. ஸர்குயேல் "நியூ டைம்ஸ்" பத்திரிகையில் வரைகிறார்.

எனவே, பாரசீகத்தின் தென் பகுதியிலுள்ள பார்ஸ் மாகாணத்தில், கான்கள்தான் "காட்டு ராஜாக்கள்". இவர்கள், தங்கள் விருப்பப்படி வரி வசூல் செய்வதன் மூலமாகவும், ஏகாதிபத்தியங்கள் கொடுக்கும் "லஞ்சத்தின்" மூலமாகவும் கொழுத்திருப்பதோடு, ஏராளமான நிலமும் இவர்களுக்குத்தான் சொந்தம்.

இந்தக் கான்களும், ஷேக்குகளும் இருக்கிற பகுதியில்தான் ஆங்கிலோ இரானிய எண்ணெய்க் கம்பனி இருக்கிறது. அரசர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாட்கள்.

தேச நலனைக் கருதாமல், ஏகாதிபத்தியங்களின் நலனைத்தான் பெரிதும் கருதுபவர்கள்.

இவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைமையின் கீழ், "தென்பகுதி மலைஜாதியினர் யூனியன்" ஒன்றை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த யூனியனிடம் 50,000 சிப்பாய்கள் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகள்தான் இதன் தலைவர்கள்.

இந்த வருட ஆரம்பத்தில், இரானிய மத்திய சர்க்கார் இவர்களுடைய அதிகாரத்தை அடக்க துருப்புகளை அனுப்பிற்று. பின்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தலையிட்டதால், வாபஸ் வாங்கப்பட்டது.

மத்திய சர்க்காரை கவிழ்க்கவும், ஜனநாயக இயக்கத்தை நசுக்கவும் இவர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், சுதேச பிற்போக்காளர்களும் பயன்படுத்திக்கொள்கிறார்கள். உதாரணமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் தூண்டுதலின்மேல், இஸ்பஹானுக்கு அருகேயுள்ள ஸாமிரோம் என்ற இடத்தில், மத்திய சர்க்காரின் 12,000 சிப்பாய்களை இவர்கள் வளைத்துக்கொண்டார்கள். முற்றுகையிடப்பட்ட சிப்பாய்கள் இஸ்பஹானுக்கு உடனே உதவியளிக்கும்படி கோரினார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அங்கும் தலையிட்டதால், உதவிப்படையை அனுப்பவில்லை- அனைவரும் கொலையுண்டு போனார்கள்.

குர்திஷ் ஜனநாயக வாதிகளை இவர்கள் அடிக்கடி ஆயுதம் கொண்டு தாக்கிவருகிறார்கள். எனவே, இவர்கள்தான் இன்று பாரசீக ஜனநாயக வாதிகளின் முதல் எதிரிகள்.

பாரசீகத்தில் சுதந்திர ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால் இவர்களுடைய எதேச்சாதிகாரத்திற்கு சாவுமணி அடிக்கப்படும். எனவே, சகல சுதேச பிற்போக்காளர்களையும், ஏகாதிபத்தியங்களையும் ஆதரித்து, ஜனநாயக இயக்கத்தை நசுக்கி வருகிறார்கள்.

பிற்போக்காளர்களை ஆதரிப்பதே இவர்களுடைய லட்சியம். ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தபிறகு, இவர்களுடைய நாடுகள், பாஸிஸ்டுகளின் கோட்டையாக மாறிற்று. உதாரணமாக, காஷ்காயர்களின் தலைவர்களான நாஸர்கானும், கோஸ்ரோவ் கானும் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமான காலத்தில், ஜெர்மானிய பாஸிஸ்டுகளுக்குத் தங்களுடைய நாட்டைப் பாதகாணிக்கையாகக் கொடுத்தனர். ஜெர்மானிய ஒற்றர் படையைச் சேர்ந்த மேஜர் ஜூலியஸ் ஷுல்ஸ் போன்றவர்கள் இங்குதான் முகாம் போட்டிருந்தார்கள். ஜெர்மானிய பாஸிஸ்டுகள் இங்கு ஒரு விமானதளத்தை (பெர்லின்—டோக்கியோவை இணைக்க) நிர்மாணித்திருந்தார்கள். இங்கிருந்துகொண்டே, நேசதேசங்களுக்கு விரோத

மான நாசகார வேலைகளைச் செய்து வந்தார்கள். நேசநாடுகளின் படைகள் பாரசீகத்திற்குள் வந்தபொழுது, பாரசீகத்திலுள்ள பிற்போக்கு பாஸிஸ்டுகள் இவர்களிடம்தான் அடைக்கலம் புகுந்து, மத்திய சர்க்காரையும், ஜனநாயகத்தையும் குழிவெட்டிப் புதைக்கச் சூழ்ச்சி செய்தார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாரசீகத்திலிருந்து சகல படைகளையும் வாபஸ் வாங்கிவிட்டோம் என்று கூறுகிறது. ஆனால் இந்த "ஏஜண்டுகளுக்கு" போதிய ஆயுதங்களையும், ராணுவப் பயிற்சியையும் கொடுத்து விட்டுத்தான் வெளியேறியிருக்கிறார்கள்.

## ஏகாதிபத்தியங்களின் அடிமை நாடு

இவ்வாறு ஒரு புறம் சுதேச பிற்போக்காளர்கள் பாரசீக மக்களின் ரத்தத்தைப் பிழிந்து குடித்தார்கள். மற்றொருபுறம் பிரிட்டிஷ், ரஷ்ய ஏகாதிபத்தியங்களும் பாரசீக மக்களைச் சுரண்டிக் கொழுத்தன. பாரசீகத்தையே அடிமைப்படுத்தி யிருந்தார்கள்.

எகிப்தியர்கள், கிரேக்கர்கள், அராபியர்கள், மங்கோலியர்கள் முதலிய பல நாட்டினர் பண்டைகாலத்தில் பாரசீகத்தின்மீது, படையெடுத்திருக்கிறார்கள். பலகாலம் வரையிலும் அடிமைப் படுத்தியும் இருந்தனர்.

யந்திரத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் மூலப்பொருளுக்காகவும், தாயகத்தில் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்வதற்காகவும், புதிய புதிய நாடுகள்மீது கவனம் செலுத்தத் துவங்கின.

1871-ம் வருடத்திலேயே பாரசீகத்தின் பொருளாதாரம் பிரிட்டிஷ், ரஷ்ய சர்க்கார்களின் ஆதிக்கத்திலிருந்தது. "1889-ம் வருடம் இம்பீரியல் பாங்க் ஆப் பெர்ஸியா (பாரசீகபாங்கு) ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஒரே ஒரு பாங்குதான் நோட்டுகளை அச்சடித்து வினியோகிக்கலாம். இது இங்கிலாந்துக்குச் சொந்தம்...... இவ்வாறு பாரசீகத்தின் பொருளாதாரம் இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்தது" என்று மார்கரெட்போவ்ரி கூறுகிறார். பின்னர் ரஷ்யாவும் ஒரு பாங்கை ஸ்தாபித்தது. இத்துடன் ரயில்வே, தந்தி, டெலிபோன், துறைமுகங்கள் முதலியனவும் அன்னிய ஏகாதிபத்தியங்களின் நிர்வாகத்தில்தான் இருந்தன.

இவை யாவற்றிலும் முக்கியமாக, பாரசீகத்தின் கைத்தொழிலை அடியோடு அழித்தார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டில், ஐரோப்பாவிலிருந்து யந்திரத்தில் செய்த மலிவான பொருள்கள் பாரசீகத்திற்குள் ஏராளமாக வந்து குவிந்தன.

சுதேச கைத்தொழில்கள் யந்திரத் தொழிலோடு போட்டிபோட முடியாமல் அழிந்துபோயின. லட்சக் கணக்கான மக்கள் வேலை கிடைக்காமல், கிராமங்களை நோக்கிச் சென்றனர். சுதேச கைத் தொழிலை அழித்த நாடுகள், சுதேச யந்திரத் தொழிலை அபிவிருத்தி செய்யவில்லை.

இந்தியாவைப் பிடிக்கவேண்டுமென்று கனவு கண்டுகொண்டிருந்த நெப்போலியனுக்கு, பாரசீகத்தின்மீது பார்வை விழுந்திருந்தது. இந்தியாவுக்குச் செல்லும் பாதையில் இருக்கிறதல்லவா? இந்தியாவைப் பாதுகாக்க அதன் எல்லையிலுள்ள ஆப்கானிஸ்தானமும், பாரசீகமும் நெடுநாட்களாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கண்ணை உறுத்தி வந்தது. அதேமாதிரியாக, 1000 மைல் தூரத்தில் தனது எல்லையிலுள்ள பாரசீகத்தை ஜார் கொடுங்கோலனும் அடிமைப்படுத்தத் திட்டம் போட்டிருந்தான்.

1907-ம் வருடத்திய ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க் ஒப்பந்தப்படி (இப்பொழுது லெனின் கிராட்) பிரிட்டிஷ் ரஷ்ய ஏகாதிபத்தியங்கள் பாரசீகத்தைப் பங்கு போட்டுக்கொண்டன. வடபாகத்தை ரஷ்யாவும், தெற்கு பாரசீகத்தை பிரிட்டனும் விழுங்கி ஏப்பமிட்டன,

மாஸ்கோவில்தான் இந்த ஒப்பந்தம் நடந்தது. பாரசீக சர்க்காரைச் சேர்த்துக்கொள்ளாமல் பாரசீகத்தைப் பங்கு போட்டுக்கொண்டார்கள். நிலப்பிரபுத்துவ முறையில் வேரூன்றிக் கிடந்த பாரசீகம் இதை எதிர்த்துப் போராடமுடியாமல் வாளாவிருந்தது.

இந்த ஒப்பந்தம் செய்துகொண்டதோடு, பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே யிருந்த ஏகாதிபத்திய முரண்பாடு அழுங்கிப் போகவில்லை. திரும்பவும் தலை தூக்கிற்று. "பிரிட்டனும் ரஷ்யாவும் பாரசீகத்தில் சண்டைபோட்டு வந்தார்கள்" என்று "கிழக்கு நாடுகளில் ஒரு ஸ்தானிகர்" என்ற புத்தகத்தில் எ. ஸி. ராடிஸ்லா குறிப்பிடுகிறார். இரு நாடுகளும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பைத் தொடர்ந்து நடத்தின. போட்டி போட்டு இரு நாடுகளும் பாரசீகத்தை முடிந்தமட்டும் சுரண்டிக் கொழுத்தன.

முதல் உலக மகாயுத்தம் நடக்கும்பொழுது, ரஷ்யாவும், பிரிட்டனும் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தப்படி, பாரசீகத்தில் மேலும் பல பகுதிகளை பிரிட்டன் விழுங்கிற்று. கடைசிவரையிலும் இந்த அநியாய ஒப்பந்தத்தை மூடி வைத்திருந்தார்கள். புரட்சிக்குப் பின்பு ஸோவியத் சர்க்கார்தான் இதை அம்பலப்படுத்தி, உடனே ரத்து செய்தது.

மேலும், உருட்டல் மிரட்டல்கள் மூலமாகவும், அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதன் மூலமாகவும் இரு ஏகாதிபத்தியங்களும் பல சலுகைகளைப் பெற்றன.

எண்ணெக் கிணறுகள், ரெயில்வே, ரஸ்தாக்கள், டெலிபோன், தந்தி போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் ஏகாதிபத்தியங்களின் நிர்வாகத்தில் இருந்தன. இவைகளின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் பாரசீகத்திலிருந்து சுரண்டிக் கொண்டுபோகப்பட்டது.

பாரசீகத்தின் அரசியல் விவகாரங்களிலும் தலையிட்டனர். முக்கியமான சர்க்கார் இலாக்காக்கள் ஏகாதிபத்தியங்களின் பிரதிநிதிகளின் ஆதிக்கத்தில் இருந்தன.

"பாரசீகத்திலுள்ள சகல பிற்போக்காளர்களையும் ரஷ்யா ஆதரித்தது. ஆம், அவர்கள் மூலமாக, மேலும் தங்களது ஆதிக்கத்தை விஸ்தரிக்கத்தான்" என்று ஹான்ஸ் கோஹன் கூறுகிறார். மேலும், "1907–ம் வருடம் தொடர்ச்சியாகப் பல கலகங்கள் ஏற்பட்டன. பிற்போக்காளர்கள்—முக்கியமாக ரஷ்யர்கள்—இவைகளைத் தூண்டிவிட்டார்கள்" என்று கூறுகிறார். பிரித்தாளும் சூழ்ச்சி மூலமாகத்தானே ஏகாதிபத்தியங்கள் தங்களுடைய ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொள்கின்றன? இது ஏகாதிபத்தியங்களின் பிறவிக் குணம்!

பிரிட்டிஷ் முதலாளிகள் பாரசீகத்தில் விளையும் புகையிலையை வாங்கி, அவைகளைத் திரும்பவும் பாரசீகர்களுக்கே அதிக விலைக்கு விற்றுவந்தார்கள்.

1917-ம் வருடத்தில் பிரிட்டனுக்கும்—பாரசீகத்திற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் பாரசீகத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடாக மாற்றிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அரசியல், ராணுவ ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டார்கள். இதற்குக் கைம்மாருக பாரசீகத்திற்கு பிரிட்டன் 20,00,000 பவுன் கடன் கொடுத்தது. பாக்தாதுக்கும்-இந்தியாவுக்குமிடையே ரெயில்வே போடவும், ஐரோப்பாவுக்கும், இந்தியாவுக்கும் மத்தியில் பாரசீகம் இருப்பதால், தெஹ்ரானில் விமானதளம் அமைக்கவும் திட்டம் போட்டிருந்தது......

"1919-ம் வருடத்திய பிரிட்டிஷ்—பாரசீக ஒப்பந்தம், பெயரளவில் பாரசீகத்தின் சுதந்திரத்தை ஊர்ஜிதம் செய்தாலும், இதை முகமூடியிட்ட "அடிமைச் சாஸனம்" என்றுதான் கருத வேண்டும். ஒப்பந்தப்படி, பிரிட்டிஷ் ஆலோசகர்களை பாரசீக சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். பாரசீக ராணுவத்திற்கு, பிரிட்டிஷ் ஆபீஸர்கள்தான் பயிற்சி கொடுப்பார்கள்......யுத்தத்திற்குப் பிறகு, எகிப்துக்குக் கொடுத்த அந்தஸ்துதான் பாரசீகத்திற்கும் கொடுக்கப்பட்டது. அதாவது, "ஆலோசகர்கள்" மூலமாக ஆங்கிலேய சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்டது" என்று ஒப்பந்தத்தின் சுயசொரூபத்தை மார்க ரெட் போவ்ரி விளக்குகிறார்.

1921–ம் வருடம் பாரசீகத்தில் வீசி அடித்த ஜனநாயகப் புயல், இந்த அநியாய ஒப்பந்தத்தை ரத்து செய்தது.

## ஆங்கிலோ-இரானிய எண்ணெக் கம்பெனி

1901-ம் வருடத்தில் நாக்ஸ்-டி-ஆர்ஸி என்ற ஆஸ்திரேலியன் பாரசீக அரசனின் புதல்வியின் நோயைக் குணப்படுத்தினன். இதற்குக் கைம்மாருக எண்ணெக் கிணறுகள் உள்ள 5 லட்சம் சதுர மைல் பிரதேசத்தில் (பாரசீகத்தின் மொத்த நிலப்பரப்பில் ஆறில் ஐந்து பாகத்தில்) எண்ணெ எடுக்கும் உரிமையை 5 லட்சம் ரூபாய்க்கு பாரசீக அரசன் நாக்ஸுக்கு விற்ருன். 1909-ம் வருடத்தில், பர்மா எண்ணெக் கம்பெனிக்கு நாக்ஸ் இதை விற்று விட்டான். பின்பு, ஆங்கிலோ-இரானிய எண்ணெக் கம்பெனி என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

1932-ம் வருடத்தில் பாரசீக அரசன் இந்த உரிமையை ரத்து செய்து, புதிதாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு 2,50,000 சதுர மைல்களாகக் குறைத்தான். பின்பு, 1938-ம் வருடத்தில் ஒரு லட்சம் சதுர மைல்களாகக் குறைக்கப்பட்டது. கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக கோடிக்கணக்கான டன் எண்ணெ பாரசீகத்திலிருந்து சுரண்டிக்கொண்டு போகப்பட்டது. 1945-ம் வருடம் 1,70,00,000 டன் எண்ணெ பாரசீக எண்ணெக் கிணறுகளிலிருந்து எடுக்கப்பட்டது. 1914-ம் வருடத்திற்குப் பிறகு இந்தக் கம்பெனியின் மூலதனத்தில் (மூன்று கோடி முப்பது லட்சம் பவுன்) பெரும்பாகம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சர்க்காருக்குச் சொந்தம். எண்ணெயை எடுப்பதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் பிரிட்டனிலிருந்துதான் வருகின்றன. பாரசீகத்தில் யந்திரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேயில்லை! வருடா வருடம் 20 சத விகிதம் லாபப் பங்கு (டிவிடண்ட்) கொடுக்கப்படுகிறது. இந்தக் கம்பெனியில் ஒரு தம்பிடிகூட மூலதனம் போட பாரசீக மக்களுக்கு உரிமை கிடையாது.

இதில் வேலை செய்யும் 65,000 தொழிலாளர்களின் நிலைமை படுமோசமானது. குறைந்த கூலி, ஆனல் அதிக நேர வேலை! ஒன்றுசேர்ந்து இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராட தொழிலாளர்களுக்கு சங்கம் அமைக்கும் உரிமை கிடையாது. பாரசீகத் தொழிலாளர்களுக்கு தொழிற் கல்விப் பயிற்சி அளிக்காமல், "சாதாரண கூலிகளாகவே" நடத்துகிருர்கள். தொழிற் கல்விப் பயிற்சி பெற்றவர்களை ஸிரியா, பாலஸ்தீனம் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிருர்கள். பாரசீகர், பாலஸ்தீனர்கள், ஸிரியர்கள் என்று தொழிலாளர்களைப் பிளவுபடுத்துவதற்காகவும், பாரசீக மக்களை அறியாமையில் அமுக்கி வைப்பதற்

காகவும் இந்தச் சூழச்சியைக் கையாள்கிருர்கள். இந்தக் கம்பெனியிலுள்ள குமாஸ்தாக்கள் சென்னை மாகாணத்தினர். எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்ற உண்மையைப் பாரசீக மக்கள் அறியக்கூடாதென்பதுதான் அந்தரங்க நோக்கம்!

1941-ம் வருடத்திலிருந்து தொழிலாளர்களைப் பிளவுபடுத்த பிரிட்டிஷ், இந்திய, பர்மா தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி வருகிருர்கள். பாரசீகத் தொழிலாளர்களை இப்பொழுது எடுத்துக்கொள்வதில்லை. 1941-ம் வருடத்தில் அன்னிய நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 700. 1943-ல் 4000; இன்று 6000!

இதைத் தவிர, பாரசீக வளைகுடாவிலுள்ள பாஹ்ரென் தீவுகளில், அமெரிக்காவிலுள்ள நான்கு கம்பெனிகளுக்கு எண்ணைக் கிணறுகள் இருக்கின்றன.

"1937-ம் வருடத்தில் பாஹ்ரன் தீவுகளிலுள்ள எண்ணைக் கிணறுகளிலிருந்து மண்ணெண்ணை எடுக்கும் காலிபோர்னியா அண்டு டெக்ஸாஸ் ஆயில் கம்பெனிக்கு 40 லட்சம் டாலர்கள் (சுமார் ஒன்றரைக்கோடி ரூபாய்) லாபம் கிடைத்தது. 1938–ம் வருடம் 80 லட்சம் டாலர் (மூன்று கோடி ரூபாய்) லாபத்தை எதிர்பார்க்கிருர்கள். தினசரி, சராசரி 25,000 பாரல் (பீப்பாய்) எண்ணை எடுக்கப்படுகிறது" என்று மார்கரெட் போவ்ரி கூறுகிருர்.

பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பாரசீகத்திற்காகப் பரிந்து பேசியதன் ரகசியம் இதுதான்!

## உழவருக்கு நிலமில்லை

பாரசீகத்தில் பெரும்பாலோர் விவசாயிகள். விவசாயம் தான் தேசத்தின் முதுகெலும்பு. நமது நாட்டைப்போல், பாரசீகத்திலுள்ள நிலச்சுவான்தார்களும், லேவாதேவிக்காரர்களும், அதிகாரவர்க்கமும் ஏழை விவசாயிகளை அட்டைபோல் உறிஞ்சி வருகிருர்கள்.

"விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில விவசாயிகள்தான் பண்ணை வைத்திருக்கிருர்கள் .... நிலச்சுவான்கள் பண்ணைகளை எட்டிப் பார்க்கமாட்டார்கள். நிலத்தைச் சீர்படுத்துவதில் அவர்களுக்கு இம்மியளவேனும் அக்கரை கிடையாது" என்று எல்வெல்ஸுட்டன் கூறுகிருர்.

இரவு பகலாக உழைத்த உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிச்சமில்லை என்பது நமது நாட்டுப் பழமொழி. இது பாரசீகத்திற்கும் பொருத்தமானதே! புராதன கால நிலப்

பிரபுத்வ முறைப்படி விளைந்த தானியம் சூறையாடப்படுகிறது விளைந்த தானியத்தில் முதல் பாகம் நில வாடகையாகவும், இரண்டாவது பாகம் தண்ணீருக்கும், மூன்ருவது பாகம் ஏர் முதலிய கருவிகளின் வாடகையாகவும், நான்காவது பாகம் மாடுகளுக்காகவும், ஐந்தாவது பாகம் விதைகளைக் கொடுத்ததற்காகவும் நிலச்சுவான்தார்கள் சுரண்டிக்கொண்டு போகிருர்கள். ஆருவது பாகம்தான் (ஆறில் ஒரு பாகம்) உழைத்த உழவனுக்குச் சொந்தம்!

"விவசாயிகளில் பெரும்பாலோருக்கு நிலமே கிடையாது. தங்களைப் பண்ணை அடிமைகளாகப் பாவிக்கும் நிலச்சுவான்தார்களின் தயவில்தான் வாழ்ந்து வருகிருர்கள்" என்று ரேஸாஷாவின் நண்பரும், பாரசீகப் பிரஜையுமான **பாத்சே கான்** **"பாரசீகத்தின் பொருளாதார நிலைமை"** என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிருர்.

சாகுபடி செய்யப்படும் மொத்த நிலத்தில் 80 சத விகிதம் நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தம்! ஓரிரண்டு ஏக்கர் நிலத்தை வைத்திருக்கும் ஏழை விவசாயிகளிடம் உழுவதற்கு வேண்டிய கருவிகளோ, மாடுகளோ, விதைகளோ இல்லாததால், அவைகளை நிலச்சுவான்தார்களிடமிருந்து வாடகைக்கு வாங்குகிருர்கள். உழைத்த பலன் முழுதும் வாடகையாக நிலச்சுவான்தார்களுக்கே போய்ச் சேருகிறது.

உற்பத்தி முறையை எடுத்துக்கொண்டால், பாரசீகத்தை நமது "மூத்தண்ணு" என்று கூறலாம். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு உபயோகித்த கருவிகளைத்தான் இப்பொழுதும் உபயோகிக்கிருர்கள். சமூக, அரசியல், பொருளாதார விலங்குகள் அவர்களை முன்னேறவிடாமல் அமுக்கி வருகின்றன.

"இப்பொழுது பாரசீக விவசாயிகள் அறியாமையிலும், வறுமையிலும் மூழ்கிக் கிடக்கிருர்கள்......ஆயினும் அவர்களைப் பார்த்துப் பேசியபொழுது, அவர்கள் முகத்தில் ஜீவசக்தியும், புத்தி கூர்மையும் பொங்கித் ததும்பிற்று. விருந்தாளிகளை வரவேற்று விருந்தோம்பும் உயர்ந்த பண்பு படைத்தவர்கள். அவர்களுக்குப் போதிய வசதிகளை அளித்தால், சமூக முறையை மாற்றியமைத்தால் பழம் பெரும் பாரசீகத்தின் சந்ததியார்களாகவும், புராதன காலத்தில் உலக முழுதும் புகழ்பெற்ற மாபெரும் கவிகளின் வாரிசுகளாகவும் திகழ்வார்கள் என்பதில் சந்தேகமேயில்லை" என்று **மே. ஸர் குயேவ் "நியூ டைம்ஸ்"** பத்திரிகையில் வர்ணிக்கிருர்.

## தொழிலாளர் நிலை

பாரசீகத்தில் மூலப் பொருள்கள் மலிந்து கிடக்கின்றன. ஆயினும், பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடையவில்லை! சுதேச நிலச்சுவான்களும், ஏகாதிபத்தியங்களும் பாரசீகம் நவீன யந்திரத் தொழிலை நோக்கி முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். ஏகாதிபத்தியங்கள் பாரசீகத்திலிருந்து மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்து, தாய் நாடுகளில் அவைகளைப் பண்டங்களாக மாற்றி, திரும்பவும் பாரசீக மக்களுக்கே அவைகளை அதிக விலைக்கு விற்று வருகிறார்கள். இந்த ஏகாதிபத்திய சுரண்டுதலை நீடிக்கத்தான், சுதேச கைத்தொழிலை அழித்த ஏகாதிபத்தியங்கள், பாரசீகத்தில் யந்திரத் தொழில் அபிவிருத்தியடைவதைத் தடுத்து வருகின்றன.

இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமான பிறகு சில யந்திரத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

ஆங்கிலோ-இரானிய ஆயில் கம்பெனியிலும், வேறு தொழிற்சாலைகளிலும் ஆறு லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். தொழிலாளர்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களே கிடையாது. ஆனால் தொழிலாளர்களை நசுக்கும் சட்டங்கள் மாத்திரம் ஏட்டிலடங்காது.

1936ம் வருடம் பிரகடனம் செய்த சட்டப்படி, தொழிலாளர்கள் தங்களுடைய ஜீவாதாரமான உரிமையை—தொழிற் சங்கம் அமைக்கும் உரிமையை—இழந்தார்கள்:

"தொழிற்சாலையின் நலஉரிமைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தச் சங்கத்திலும் தொழிலாளர்கள் கலந்துகொள்ளக் கூடாது. தொழிலாளர்களில் யாரேனும் இந்தச் சட்டத்தை மீறி நடந்தால், இதன் மூலமாக முதலாளி நஷ்டமடைந்தால் இந்தக் குற்றத்தைப் புரிந்த தொழிலாளி நஷ்டஈடு கொடுக்க வேண்டும்; ஒருவார சிறைதண்டனையும் 40 அல்லது 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்".

எம். ஸர் குயேவ் இஸ்பஹானிலுள்ள தொழிற்சாலைகளுக்குச் சென்று, தொழிலாளர்களின் நிலைமையை நேரில் கண்டு பின்வருமாறு எழுதுகிறார்:

"பாரசீகத்தில் இஸ்பஹான்தான் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள நகரம். இங்கு, மிகப் பெரிய இரண்டு ஆலைகளுக்கு விஜயம் செய்தோம். இந்த ஆலைகளில் இரண்டாயிரத்துக்குமேல் தொழிலாழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள். அங்குள்ள ஏனைய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைச் சேர்த்

துக்கொண்டால், மொத்தம் 15,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.........

"இவர்களில் பாதிப் பேர்கள் ஆண்கள்; கால்வாசிப் பேர்கள் பெண்கள்; எஞ்சிய கால்வாசிப் பேர்கள் ஆறு—ஏழு வயதுக் குழந்தைகள்! .... மஸாண்ட்ரான் முதலிய நகரங்களுக்கும் சென்றோம். எங்கும் இதே நிலைமைதான்......

"ஆண்களில் பெரும்பாலோரின் தினசரிச் சம்பளம் 15 முதல் 30 ரயல்வரையிலும், பெண்களுக்கு 8 முதல் 18 ரயல் வரையிலும், குழந்தைகளுக்கு 8 அல்லது 9 ரயல் தினசரிச் சம்பளம்! ரேஸாஷா தொழிற் சங்கங்களையும் ஜனநாயகக் கட்சிகளையும் ஈவு இரக்கமின்றி நசுக்கி வந்தான். அவன் 1941-ம் வருடம் முடிதுறந்து ஓடிப்போன பிறகுதான் தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடி, பல சலுகைகளைப் பெற்றனர்" (ஒரு ரயல் என்பது அரையணவுக்குச் சமம்).

டூடே கட்சியின் தலைமையிலுள்ள தொழிற்சங்கத்தில், மொத்தம் ஆறு லட்சம் தொழிலாளர்களில் ஒரு லட்சம் தொழிலாளர்கள் ஸ்தாபனரீதியாக ஒன்றுபட்டுள்ளார்கள். தொழிலாளர்களின் சக்தி தினேதினே வளர்ந்து வலிமை பெற்று வருவதைக் கண்டு, சுதேச பிற்போக்காளர்களும், ஏகாதிபத்தியங்களும் நடுநடுங்கினார்கள் தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கவில்லையென்றால், அமித லாபச் சுரண்டலுக்குச் சாவுமணியடிக்கப்படும் என்பதை நன்கு உணர்ந்தனர்- எனவே, தொழிலாளர் சங்கங்களை நிர்மூலம் செய்யப் பல உபாயங்களைக் கையாண்டார்கள்.

முதலில், பல இடங்களில் போட்டிச் சங்கங்களை—கம்பனிச் சங்கங்களை—அமைத்தார்கள். இந்த முதலாளிகளின் சங்கங்களில் சேருகிற தொழிலாளர்களுக்கு, முதலாளிகள் அதிகச் சம்பளம் முதலிய சலுகைகளைக் கொடுத்தார்கள். ஆனால், தொழிலாளர்கள் இந்த மாய வலையில் சிக்கவில்லை.

போட்டிச் சங்கத்தின் மூலமாகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை முறியடிக்க முடியாதுபோகவும், தொழிற்சங்கக் கட்டிடங்களைத் தாக்குவது, அவைகளின் பணத்தைக் கொள்ளையடிப்பது, தொழிலாளர் தலைவர்களைக் கொல்வது முதலிய நாசகார வேலைகளில் ஈடுபட்டனர்.

1945-ம் வருட ஆரம்பத்தில், இஸ்பஹானில் "தொழிலாளர்கள் முதலாளிகள் நேசக் கட்சி" என்ற பெயரில் ஒரு கம்பெனிச் சங்கத்தை ஆரம்பித்தனர். தொழிலாளர்களை

ஆகர்ஷிக்கும் பொருட்டு, இதில் அங்கத்தினர்களாக இருக்கும் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் முதலிய சலுகைகளைக் கொடுத்தனர். ஆயினும் வர்க்க ஊணர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இம்மியளவேனும் மசியவில்லை. எனவே, குண்டர்களின் முறைகளைக் கையாண்டனர். முதலில் இந்தக் கம்பனி சங்கத்தில் சேராதவர்களை வேலையிலிருந்து விலக்கினர்கள். 1945-ம் வருடம் மார்ச் மாதம் 27-ந் தேதி டுடே கட்சியின் காரியாலயத்தையும், தொழிற் சங்கக் கட்டிடத்தையும், "துனியா இம்ரூஸ்" என்ற ஜனநாயகப் பத்திரிகாலயத்தையும் குண்டர்கள் தாக்கினர்கள்; கட்டிடங்களுக்கு தீ வைத்து, உள்ளே இருந்த பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்தனர். தொழிலாளர் தலைவர்களும், டுடே கட்சித் தலைவர்களும், டுடே கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தினரான போக்ராடியும், தெஹ்ரானிலுள்ள முற்போக்குப் பத்திரிகையான "பேர்மான்" ஆசிரியர் ஷாஹெண்டேயும் படுகாய முற்றனர். போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகாமையில்தான் இந்தச் சம்பவங்கள் நடந்தன. ஆனல் போலீஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களே தவிர, தலையிடவில்லை. குண்டர்களுக்கு சர்க்கார் உதவி புரிந்தது!

ஆனல் தொழிலாளர்கள் அடிக்கு அடி திருப்பிக் கொடுத்தார்கள். அப்பொழுது, குண்டர்கள் நிலை குலைந்து ஓடுகிற சமயத்தில், சிப்பாய்களும், போலீஸ் "புலிகளும்" அவர்களுக்கு உதவி புரிய வந்தனர். தொழிலாளர்களை நையப் புடைத்து, நூற்றுக் கணக்கானவர்களைக் கைது செய்தனர்.

இதே மாதிரியாகப் பல இடங்களில் தொடர்ச்சியாகத் தொழிலாளர்களும், ஜனநாயக வாதிகளும் தாக்கப்பட்டனர்.

தொழிலாளர்களுக்கு சர்க்கார் உதவி செய்யாததோடு, முதலாளிகளின் நல உரிமைகளை காக்க பாட்டாளி மக்களை நசுக்கியும் வந்தது. சுதேச முதலாளிகளும், பிரிட்டிஷ், அமெரிக்க முதலாளிகளும் பாரசீகத் தொழிலாளர்களைச் சுரண்டி வருவதைத் தடுக்க எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

## வறுமை, பிணி, அறியாமை

இவ்வாறு ஒன்றரைக்கோடி பாரசீக மக்களை நிலச்சுவான்தார்களும், சுதேச மன்னர்களும், முதலாளிகளும், ஏகாதிபத்தியங்களும் அட்டைபோல் உறிஞ்சி வந்தார்கள். இதன் விளைவாக, பாரசீக மக்களுக்குக் கிடைத்த பலன் வறுமை, பிணி, அறியாமை முதலியனதான்!

பாரசீக சர்க்காரின் கல்வி இலாக்கா டைரக்டர் ஆகா அப்துல் காஸிம் 1944-ம் வருடம் வெளியிட்ட சர்க்கார் அறிக்கையில்:

"ஏராளமான இயற்கைச் செல்வங்கள் மலிந்து கிடந்தபோதிலும், பெரும்பாலான மக்கள் அரைவயிற்றுக் கஞ்சிக்கே திண்டாடுகிறார்கள். பிழைக்க வழியின்றி கிராமம் கிராமமாக அலைகிறார்கள். நகரங்களுக்குக் கூட்டங் கூட்டமாகச் சென்று பிச்சை யெடுத்து, சகல வியாதிகளையும் பெற்று இறுதியில் இறந்து போகிறார்கள். நிலத்தைச் சீர்திருத்தி யமைக்க சர்க்காரும் நிலச்சுவான்தார்களும் முயற்சி எடுத்துக் கொள்ளாததாலும். ...ஏனைய காரணங்களாலும் மக்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

பாரசீகத்திற்குச் சென்று, நிலைமையை நேரில் கண்ட ராய்ட்டரின் நிருபர், ஏகாதிபத்தியப் பத்திரிகையில் (கல்கத்தாவிலுள்ள "**ஸ்டேட்ஸ்மனில்**" 20—12—45) பாரசீக மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

"ஒருகோடியே இருபது லட்சம் பாரசீகர்களில், ஒருகோடி பத்து லட்சம் பேர்கள் தினசரி உண்ண உணவின்றி தவிக்கிறார்கள். அனைவரும் கல்வியறிவில்லாதவர்கள். பாரசீகத்தில் பிறக்கும் குழந்தைகளில் நான்கில் மூன்று குழந்தைகள் ஒரு வயதாவதற்குள்ளேயே இறந்துபோகின்றன!"

அதே பத்திரிகையில் "**நியூ யார்க் டைம்ஸ்**" பத்திரிகையின் நிருபர் (15-12-45) மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறார்:

"கந்தையை உடுத்தித் திரியும் மக்கள் நிறைந்த தேசம் பாரசீகம். மக்கள் முகத்தில் வறுமையின் கொடுமை கோர தாண்டவமாடுவதைக் கண்கூடாகக் காணலாம். தெஹ்ரானிலுள்ள வீதிகளில் ஒருவன் நின்றால், ஐந்துநிமிடத்திற்கு ஒருதரம் ஒருபிச்சைக்காரன் சாரிசாரியாக வந்துகொண்டே யிருப்பதைப்பார்க்கலாம். சாதாரண காலத்தில்கூட, பெரும்பாலான மக்கள் வயிறு நிறைய உணவருந்தியதே கிடையாது.......அமெரிக்க சுகாதார மந்திரி **பென்னட் ஆவர்** 3,20,000 பேர்கள் சென்ற வருடத்தில் மலேரியா ஜுரத்தால் கஷ்டப்பட்டார்கள் என்று கூறுகிறார். சில கிராமங்களில் 90 சத விகிதம் பேர்கள் மலேரியா ஜுரத்திற்குப் பலியானவர்கள்."

கல்வியைப்பற்றி எழுதுவதற்கே கைகூசுகிறது. அடிமை நாடாகிய இந்தியாவைவிட அதிகமாக அறியாமை பாரசீகத்தில் தலைவிரித்தாடுகிறது. 1921-ம் வருடம் 612 பள்ளிக்கூடங்கள் இருந்தன. மொத்தம் 55,000 மாணவர்கள் கல்வி கற்றுவந்தனர். 1937-ம் வருடம் 4,939 பள்ளிக்கூடங்களில் 2,73,680 மாணவர் படித்து வந்தார்கள்.

"பழம்பெரும் தேசம் பாரசீகம்—எண்ணெ முதலிய உலகச் சொத்திற்கு உறைவிடம்......(அதே சமயத்தில்) உலகத்திலுள்ள நாடுகளில் வறுமை கோர தாண்டவமாடும் நாடாகவும், கையா லாகாதவர்கள் சர்க்காரை நடத்தும் நாடாகவும் இருக்கிறது" என்று லண்டனிலுள்ள **"நியூஸ் கிரானிக்கள்"** பத்திரிகை எழுது கிறது. (1-2-46)

இதுதான் பாரசீகத்தின் உண்மையான நிலைமை. வறுமை யாலும், பிணியாலும். அடிமைத் தளைகளாலும் தவியாய் தவித்த மக்களை யாராவது தூண்டிவிட வேண்டுமா? மக்கள் மனதில் வீறுகொண்டெழும் சுதந்திர ஆர்வத்தை ஆறியாத ஏகாதிபத்தி யங்கள்தான்—இல்லை, அதை அடக்கி ஒடுக்க விரும்பும் ஏகாதி பத்தியங்கள்தான்—"ரஷ்யர்களால் தூண்டிவிடப்பட்ட இயக்கம்" என்று தொண்டை கிழியக்கத்தலாம்!

# 2. ரஷ்யப் புரட்சிக்குப் பின்பு

*[அடிமை நாடுகளுக்கு பூரண சுதந்திரம்—பாரசீக-சோவி யத் ஒப்பந்தம்—ஸையத் ஸியா உதீன்—ரேஸாஷாவின் சர்வாதிகார ஆட்சி.]*

1917-ம் வருடம் நவம்பர் மாதம் 7-ந்தேதி ரஷ்யாவில் சரித் திரப் பிரசித்திபெற்ற போல்ஷ்விக் புரட்சி நடந்தது. ரஷ்யாவி லுள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும், சிப்பாய்களும் கிளர்ந்தெழுந்து, ஜார் ஏகாதிபத்தியத்தை வேரோடு கெல்லி எறிந்தார்கள். வர்க்க பேதமற்ற சோவியத் சமூகம் மலர்ந்தது. அதிகாரத்தைக் கைப்பற்றியதும், சோவியத் சர்க்கார் முன்பு ஜார் ஏகாதிபத்தியம் பலாத்காரமாக அடிமைப்படுத்தியிருந்த நாடுகளுக்குப் பூரண சுதந்திரமளித்தது. சைனு, மங்கோலியா, பின்லாந்து, பாரசீகம் முதலிய நாடுகளோடு செய்திருந்த அநியாய ஒப்பந்தங்களை ரத்துசெய்து தானுகவே, பிரத்தியேக உரிமைகளை யும், பிரதேசங்களையும் திருப்பிக் கொடுத்தது. தாயகத்திலுள்ள சகல தேசீய இனத்தினர்களுக்கும் சமூக, பொருளாதார, அரசி யல் சுதந்திரமளித்த சோவியத் சர்க்கார், ஏனைய நாடுகளையும்—அது எவ்வளவு சிறிய நாடாக இருந்தாலும் சரி—சரி சமத்துவ மாகப் பாவித்தது. இது மட்டுமல்ல; அச்சமயத்தில் சைனு, மங்

கோலியா முதலிய நாடுகளுக்கு உருப்படியான உதவியளித்த நாடு சோவியத் யூனியன்தான். சைனாவின் தந்தை—டாக்டர் ஸன்யாட்ஸன்—1925-ம் வருடம் மார்ச் மாதம் 12-ந்தேதி இறக்கு முன்பு, சோவியத் யூனியனின் மத்திய கமிட்டிக்கு கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பினார்:

அன்புமிக்க தோழர்களே,

மனித சக்தியால் ஒன்றும் செய்யமுடியாத வியாதியால் நான் இங்கு வலிமையிழந்து படுக்கையில் கிடக்கும்பொழுது, எனது எண்ணங்கள் உங்களிடமும், எனது தேசத்தின் தலைவிதியையும் நாடிச் செல்கின்றன. நீங்கள் சுதந்திரக் குடியரசின், ஐக்கிய சர்க்காரின் தலைவர்களாகத் திகழ்கிறீர்கள். இந்தப் பிதுரார்ஜித சொத்தை, சிரஞ்சீவியான லெனின் நசுக்கப்பட்ட மக்களுக்கு அளித்துள்ளார். தொன்றுதொட்டு பிறரை அடிமைப்படுத்துவது, போர் தொடுப்பது, பிறருக்கு அநியாயம் செய்வது ஆகியவைகளில் வேரூன்றிக் கிடக்கும் சர்வதேச திட்டத்திலிருந்து ஏகாதிபத்தியத்திற்கு இரையான மக்கள் இந்தப் பிதுரார்ஜித சொத்தின் உதவியால் விடுதலை பெறுவது திண்ணம். சைனாவையும், ஏனைய சுரண்டப்பட்ட நாடுகளையும் ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பணியில் உங்களோடு ஒத்துழைக்க எனக்குப் பின்னல் நான் ஒரு கட்சியை விட்டுச் செல்கிறேன். நான் சதா சர்வகாலமும் விரும்பியதுபோல், அது உங்களோடு ஒத்துழைக்கும். விதியின் விருப்பப்படி, நான் எனது வேலையைப் பூர்த்தி செய்யாமல், யார் கட்சியின் கொள்கைக்கும், கோட்பாட்டிற்கும் துரோகம் செய்யாமல் இருக்கிறார்களோ, அவர்களிடம் எனது வேலையை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். இதனால்தான் சைனா பரிபூரணமாக விடுதலை பெறுவது வரையிலும் தேசிய சுதந்திர இயக்கத்தை தொடர்ந்து நடத்தும்படி குவோமிண்டாங்கிற்குக் கட்டளையிடுகிறேன். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நான் குவோமிண்டாங்கை உங்களோடு தொடர்ந்து நேச உறவு வைத்துக்கொள்ளுமாறு கூறியிருக்கிறேன். இதுவரையிலும் எனது தேசத்திற்கு நீங்கள் செய்த பேருதவி நிலைத்திருக்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன். பிரிய தோழர்களே, உங்களிடமிருந்து இறுதியாக விடைபெற்றுக்கொள்ளு முன்பு, சோவியத் யூனியன் பலமான, சுதந்திர சைனாவை நண்பனாகவும், துணையாளாகவும் வரவேற்கும் நாள் அதிக தூரத்தில் இல்லையென்பதையும், நசுக்கப்பட்ட உலக மக்கள் அனைவரையும் விடுவிக்க இரு தேசங்களும் தோளோடு தோள் நின்று, வெற்றியை நோக்கி கம்பீரமாக நடந்து

செல்லும் தினமும் நெருங்கிவிட்டது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்."

பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் முதல் உலக மகா யுத்தம் முடிந்த பின்பு உலக முழுதும் வெடித்த தேசிய இயக்கங்களைப் பலாத்காரமாக நசுக்கிவந்த தருணத்தில், சரித்திரம் என்றுமே கேட்டும் கண்டுமிராத இந்தச் சம்பவம் நடந்தது! அடிமை நாட்டு மக்கள், முற்போக்கு சக்திகள் சோவியத் யூனியனைக் கொட்டுமுழக்கத்தோடு வரவேற்றதில் ஆச்சரியமென்ன!

## சோவியத் பாரசீக ஒப்பந்தம்

புதிய பாட்டாளி மக்களின் சர்க்காரைப் பூண்டோடு அழிக்க பதினான்கு முதலாளித்துவ நாடுகள் சோவியத் யூனியன்மீது படையெடுத்தன.

ஜெனரல் டன்ஸ்டர்லிங் என்பவனின் தலைமையின்கீழ் ஏகாதிபத்தியப் படைகள் சோவியத் யூனியனைத் தாக்கப் பாரசீகத்தை ராணுவ தளமாக உபயோகித்தன. பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்கள் அவர்களுக்கு உதவி புரிந்தார்கள். இப்பொழுது சோவியத் யூனியனோடு ஒப்பந்தம் செய்துகொள்ள மறுத்த பிரதம மந்திரி இப்ராஹிம் ஹகீமீ அப்பொழுது (1919) மந்திரி சபையிலிருந்தார். இப்பொழுது சோவியத் யூனியனைத் தாக்கிவரும் ஸையத் ஸியா உதீன் பிற்போக்காளர்களின் தலைவனாக இருந்தான். வெர்ஸேல்ஸ் சமாதான மகாநாட்டிற்கு பாரசீகம் ஒரு யதாஸ்தைச் சமர்ப்பித்திருந்தது. ஸோவியத் காகஸஸையும் ஸோவியத் டிரான்ஸ் காஸ்பியன் பிரதேசத்தையும், பகுவையும் கைப்பற்ற திட்டம் போட்டிருந்தார்கள் என்ற உண்மை அதிலிருந்து பகிரங்கமாயிற்று. ஸோவியத் யூனியனைக் குழிவெட்டிப் புதைக்கப் பாரசீக சர்க்கார் போர் தொடுத்தபோதிலும், அவைகளையெல்லாம் சோவியத் யூனியன் பொருட்படுத்தாமல் பாரசீகத்தைச் சரிசமத்துவமாகவே பாவித்தது!

1921-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-ந் தேதி, சோவியத் பாரசீக ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தப்படி.

(1) ஜார் ரஷ்ய ஏகாதிபத்தியத்திற்கு பாரசீகம் கொடுக்க வேண்டிய ஐந்து கோடி பவுன் கடன் ரத்து செய்யப்பட்டது. ரஷ்ய ஏகாதிபத்தியம் பாரசீகத்தில் அநியாயமாக கைப்பற்றியிருந்த சகல பிரதேசங்களையும், திருப்பக் கொடுத்தது, ரஷ்யப் படைகள் அனைத்தையும் பாரசீகத்திலிருந்து வாபஸ் வாங்கிற்று.

(2) பாரசீகத்தில் ரஷ்யர்கள் ஏதேனும் குற்றம் புரிந்தால், பாரசீக சர்க்காருக்கு அவர்களை விசாரணை செய்ய உரிமை

கிடையாது. இந்தச் சலுகையையும் ரத்து செய்தது. பாரசீகத்திலுள்ள சோவியத் பிரஜைகள், பாரசீக சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற விதியை ஏற்றுக்கொண்டது.

(3) ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் "ஐந்தாம் படையாக" வேலை செய்துவந்த "ரஷ்யப் பாதிரிகள் ஸ்தாபனங்களை"க் கலைத்தது. அவைகளுக்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் பாரசீக சர்க்காருக்கே திருப்பிக் கொடுத்தது.

(4) பாரசீகத்தை ஏதேனும் நாடுகள் ஆக்கிரமித்தால், ஆர்மேனியா, அல்லது அஜர்பெஜான் வழியாக பாரசீகத்திற்கு சோவியத் யூனியன் உதவி புரியவேண்டும். இதற்குக் கைம்மாறாக தெற்கு பாரசீகம் மூலமாக யாரேனும் சோவியத் யூனியன்மீது படையெடுத்தால், அவர்களைத் துரத்த சோவியத் யூனியன் பாரசீகத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பாரசீகத்தில் யாரேனும் சோவியத் யூனியனுக்கு எதிரிடையான காரியங்களைச் செய்துவந்தால், அந்த அன்னிய நாட்டு அதிகாரிகளை அங்கிருந்து அகற்றும்படி சோவியத் யூனியன் கோரிக்கை விடுக்க உரிமையுண்டு.

" இந்த ஒப்பந்தத்தின் அர்த்தம், பாரசீகத்தில் ஒரு புதிய சகாப்தம் பிறந்திருக்கிறது " என்று ஹான்ஸ் கோஹன் நியாயத்தை, சரிசமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறுகிறார்.

ரஷ்யா பல சலுகைகளை விட்டுக்கொடுத்ததோடு, "உருமி ஏரியிலிருந்த ரஷ்யக் கப்பல்கள், நிலம், கட்டிடம் முதலியன அனைத்தையும் பாரசீகத்திற்கே நஷ்டஈடில்லாமல் திருப்பிக் கொடுத்தது" என்று "பாரசீகத்தின் சரித்திரம்" என்ற புத்தகத்தில், பிரிகடியர் ஜெனரல் ஸர் பெர்ஸிஸைக்ஸ் சோவியத் சர்க்கார் பாரசீகத்தை எப்படி பாவித்தது என்பதைத் தெளிவாக விவரிக்கிறார்.

இன்று பாரசீகத்திற்குப் பரிந்து பேசுவதுபோல் நடிக்கிற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் டிரான்ஸ்ஜோடான், இராக் முதலிய நாடுகளோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்திருப்பதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரசாரம் செய்கிறது. ஆனால், பிரிட்டிஷ் படைகளும், பிரிட்டிஷ் ஆலோசகர்களும்தான் அந்த நாடுகளின் எஜமானர்கள். பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தமான சொத்துக்கள்—எண்ணைக் கிணறுகள், ரெயில்வே முதலியவைகளை சுதேச சர்க்காருக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை. இந்தியாவைத்

தான் எடுத்துக்கொள்வோம். பிரிட்டிஷ் மந்திரிகள் தூதுகோஷ்டி, பிரிட்டிஷ் படைகளை உடனே வாபஸ் வாங்குவதுபற்றியோ, உடனே இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கிறோம் என்று பிரகடனம் செய்வதுபற்றியோ, இந்தியாவில் பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தமான சொத்துக்களை இந்தியர்களுக்கே திருப்பிக் கொடுப்பதுபற்றியோ, நமக்குக் கொடுக்கவேண்டிய 1740 கோடி ரூபாயைப்பற்றியோ பேச்சுமூச்சில்லை. யார் சிறிய நாடுகளை நசுக்குகிறார்கள், யார் சரிசமத்துவமாகப் பாவிப்பது கிடையாது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

## சையத் ஸியாவுதீன்

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்பு உலக முழுதும் சுதந்திர ஜனநாயக இயக்கம் தலைதூக்கி யிருப்பதுபோல், முதல் உலக மகாயுத்தம் முடிந்தபின்பு உலக முழுதும் சுதந்திரச் சண்டமாருதம் வீசியடித்தது. துருக்கியில் கமால் பாக்ஷாவின் புரட்சி; இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம்; சைனாவில் தேசிய இயக்கம்............பாரசீகத்திலும் பழைய முடியாட்சியை மக்கள் வெறுத்து, வீறுகொண்டெழுந்தனர். ரஷ்யப் புரட்சி பாரசீக மக்களுக்குப் புத்துயிரளித்தது.

1921-ம் வருடம் பிப்ரவரி மாதம் 2-ந் தேதி சையத் ஸியா உதீனும் (ஒரு வலதுசாரி எழுத்தாளன்), ரேஸா கான் என்ற ஒரு ராணுவத் தலைவனும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உதவி பெற்று திடீரென அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். பாரசீக மன்னன் முடி துறந்து ஓடிப்போனான்.

சிறிது காலத்திற்குள் ஸியா உதீன் பிரதம மந்திரியானான். பின்னர், சோவியத் யூனியனையும், உள்நாட்டிலுள்ள ஜனநாயக இயக்கத்தையும் தாக்கத் துவங்கினான். பாரசீக-சோவியத் ஒப்பந்தத்தைக் குழிவெட்டிப் புதைக்கப் பெருமுயற்சி செய்தான். சோவியத்-பாரசீக ஒப்பந்தத்தை பத்திரிகையில் பிரசுரிக்கக் கூடாதென்று உத்திரவிட்டான். நியாயமான உடன்படிக்கையைப் பொதுமக்கள் தெரிந்துகொண்டால், சோவியத் யூனியனை ஆதரிப்பார்கள்; ஸியா உதீனின் சோவியத் எதிர்ப்புப் பொய்ப் பிரசாரத்திற்கு இடமளிக்கமாட்டார்கள். அதனால்தான் இந்த இருட்டடிப்பு!

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்பு, சோவியத் ராஜ தூதர் பாரசீகத்திற்குச் சென்றபொழுது, அவரை வரவிடாமல் தடுத்தான். மேலும், பாரசீகத்திலுள்ள சோவியத் பிரஜைகளை அவமரியாதை செய்து, நூற்றுக்கணக்கானவர்களைச் சிறையிலடைத்

தான். பலரை நாடு கடத்தினான். பாரசீகத்தை அடிமைப்படுத்தும் 1919-ம் வருடத்திய பிரிட்டிஷ்–பாரசீக உடன்படிக்கையை ஆதரித்து, "பிரிட்டிஷ்–பாரசீக உடன்படிக்கையும், பாரசீக சரித்திரத்தில் புதிய சகாப்தமும்" என்று ஒரு புத்தகம் எழுதினான். அதில், புதிய சோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்கு இந்த ஒப்பந்தம் அவசியம்தான் என்று பகிரங்கமாக எழுதினான். இத்துடன், ஸியா உதீன் அதிகாரத்திலிருக்கும்பொழுது, ஜனநாயக இயக்கத்தையும், அதன் தலைவர்களையும் வேட்டையாடி வந்தான். **ஆம், சோவியத் எதிர்ப்பும், ஜனநாயக எதிர்ப்பும் பிரிக்கமுடியாத இரண்டு அம்சங்கள்.** சோவியத் யூனியனை எதிர்ப்பவர்கள், சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பல முகமூடிகளின்கீழ் எதிர்ப்பதை உலக முழுதும் நிதர்சனமாகக் காணலாம்...... 1922-ம் வருடத்தில் "**இருபதாவது நூற்றாண்டு**" என்ற ஜனநாயகப் பத்திரிகையின் ஆசிரியரும், பாலகவியுமான **இஸ்கி** என்ற ஜனநாயக வாதியைக் கொலை செய்தான். காரணம் ஸியா உதீனின் கொடுங்கோலாட்சியைக் கண்டிக்கும் ஒரு பாட்டைப் பிரசுரித்தாராம்! இஸ்கி இறந்தபின்பு **பரூக்கி-யாஸ்டி** என்ற மற்றொரு பாரசீகக் கவி, இஷ்கியின் ஞாபகார்த்தமாக ஒரு பாட்டு எழுதினார். பரூக்கியையும் ஸியா உதீன் கைதுசெய்து, சிறைக் கோட்டத்தில் அடைத்தான்......

பாரசீகத்தின் சுதந்திர, ஜனநாயக எழுச்சி வலிமை பெற்றிருந்ததால், ஸியா உதீனின் பிற்போக்குக் கொள்கைகளைப் பொது ஜனங்கள் ஆதரிக்கவில்லை. சோவியத் யூனியனையும், ஜனநாயகத்தையும் ஒருபுறம் தாக்கி, மற்றொருபுறம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்கு ஆதரவு கொடுத்து வந்ததனால், 1923-ம் வருடம் ரேஸாகான் ஸியாஉதீனை பிரதம மந்திரி பதவியிலிருந்து அகற்றினான். பின்னர், தேச நலனுக்காகப் பாடுபடுபவனல்ல, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு பாரசீகத்தை அடிமைப்படுத்தத் தான் சூழ்ச்சி செய்கிறான் என்ற குற்றம்சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மோட்டாரில், பாலஸ்தீனத்திற்குச் சென்று, பிரிட்டிஷ் பராமரிப்பில் வாழ்ந்து வந்தான்.

ரேஸாகான் பிரதம மந்திரியானான். பின்பு 1925-ம் வருடத்தில் தன்னைப் பாரசீகத்தின் அரசன் என்று அழைத்துக்கொண்டான். ரேஸாஷா என்று பெயரையும் மாற்றினான்.

ரேஸாஷா முன்பு இரண்டு பாதைகள் திறந்து கிடந்தன. ஒன்று, பாரசீக ஜனநாயக இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, பாரசீக நிலப்பிரபுத்துவ முறையை அடியோடு ஒழித்து, ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திற்குச் சாவுமணி அடிப்பது; இரண்டாவது பழைய பாதை. நிலப்பிரபுத்துவ முறையையும், ஏகாதிபத்தியங்

களையும் ஆதரிப்பது. ரேஸாஷா இரண்டாவது பாதையைத் தான் பொறுக்கி எடுத்தான். எனவே, உள்நாட்டில் ஜனநாயக இயக்கத்தை நசுக்கியதோடு, வெளிநாட்டுக் கொள்கையில் சோவியத் யூனியனை எதிர்த்தான். சோவியத் யூனியனோடு உறவு வைத்துக்கொண்டால், உள்நாட்டில் ஜனநாயக சக்திகள் வளர்ந்து வலிமைபெறும் அல்லவா ?

ரேஸாஷா பாரசீகத்திலுள்ள சகல மாகாணங்களையும் மத்திய சர்க்காருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்தான். ஓரளவு அடங்காப் பிடாரிகளான சுதேச மன்னர்களையும் பணியவைத்தான். ஆனால், அவர்களுடைய நிலப்பிரபுத்துவ முறையை உடைத்தெறிய வில்லை.

ரேஸாஷா, பாரசீகத்திலுள்ள தேசிய இனத்தினரை ஒருவரோடொருவர் சண்டை போடும்படி தூண்டினான். ஏகாதிபத்தியவாதியும், சோவியத் எதிர்ப்பாளருமான குஸ்டாவ்கிரிஸ்டு **"அனுமதிக்காத தேசத்தினூடே"** என்ற புத்தகத்தில் ரேஸாஷாவின் சூழ்ச்சியை அம்பலப்படுத்துகிறார்:

"குர்டிஸ்தான் தேசிய இனத்தினர், அவர்களுடைய பரம வைரிகளான ஆஜர்பெஜானியர்களோடு சண்டை போடும்படி ரேஸாஷா கோரியதைச் சந்தோஷத்துடன் வரவேற்றனர்......"

பாரசீக மக்கள் ரேஸாஷாவின் சர்வாதிகார ஆட்சியின்கீழ் அடிமைகளாகவே வாழ்ந்தார்கள். பிரஜா உரிமைகள் அணுவளவேனும் வழங்கப்படவில்லை. அவருடைய அனுமதியின்றி பத்திரிகைகளைப் பிரசுரிக்கக்கூடாது. பாரசீகத்திலுள்ள பல்வேறு தேசீய இனத்தினர்களின் பாஷைகளை பள்ளிக்கூடத்தில் போதிக்கக் கூடாதென்று உத்தரவிட்டான். ஜனநாயக விரோதியாகவும், சோவியத் எதிரியாகவும் இருந்ததால், ஜெர்மானிய பாஸிஸ்டுகளுக்குத் தனது நாட்டில் இடம் கொடுத்தது இயற்கை தானே !

# 3. நேசப் படைகள் வந்தபின்பு

*[பாரசீகத்தில் பிரிட்டிஷ், சோவியத் துருப்புகள்—பிரிட்டிஷ் பிரதேசத்தில்—மக்கள் நண்பர்கள் செம்படை.]*

**ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததிருந்து, பாரசீகத்தைப் பாஸிஸ்டுகள் தங்களுடைய ஐந்தாம்படைகளின் கோட்டையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.**

ரேஸாஷா பகிரங்கமாக பாஸிஸ்டுகளோடு கூடிக்குலாவி னன். 1933-ம் வருடத்திலிருந்து ஜெர்மானிய பாஸிஸ்டுகள் பல வேஷங்களில் பாரசீகத்தில் குடியேறினர்கள்.

1938-ம் வருடம் மார்ச் மாதத்தில் பாரசீகத்தில் விமான தளம் அமைக்க ஜெர்மானிய பாஸிஸ்டுகள் உரிமை பெற்றார்கள். தீபான்பர்கர், குருப் போன்ற பாஸிஸ்டு முதலாளிகள் பாரசீகத்தில் புதிய தொழிற் சாலைகளை அமைக்க உரிமை பெற்றார்கள். 1938-ம் வருடத்தில் தெஹரானுக்கு அருகாமையிலுள்ள சுரங்கங்கள் சொந்தமாயின. துறைமுகங்கள், டெலிபோன், தந்தி ரயில்வே முதலிய முக்கியமான இலாக்காக்கள் ஜெர்மானியர்களின் நிர்வாகத்தில் இருந்தன. பாஸிஸ்டு ஐந்தாம் படைகளும், பிரசாரகர்களும் பாரசீகம் முழுதும் பரவிக் கிடந்தனர்.

ஜெர்மானிய பாஸிஸ்டுகள் 1941-ம் வருடம், ஜூன் மாதம் 22-ந் தேதி சோவியத் யூனியனைத் திடீரென தாக்கினர்கள். ஜெர்மானிய பாஸிஸ்டுகளை, பாரசீகத்திலிருந்து துரத்தும்படி சோவியத் யூனியன் ரேஸாஷாவிடம் கோரிற்று. ரேஸாஷா இதை உதாசீனம் செய்தான். பாஸிஸ்டுகள் சோவியத் யூனியனுக்கு எதிரிடையாக இன்னும் தீவிரமாகச் சூழ்ச்சி செய்யத் துவங்கினர்கள். சோவியத் யூனியன்மீது படையெடுக்க எதிரிகள் பாரசீகத்தை ராணுவ தளமாகப் பயன்படுத்திக் கொண்டால் அவர்களைத் துரத்த பாரசீகத்திற்குள் சோவியத் யூனியன் படைகளை அனுப்பலாம் என்று 1921-ம் வருட சோவியத்—பாரசீக ஒப்பந்தம் கூறுகிறது. இந்த ஒப்பந்தப்படி, 1941-ம் வருடம், ஆகஸ்டு மாதம் 25-ந் தேதியன்று செம்படைகள் வடபாரசீகத்திற்குள் (சோவியத் எல்லையை ஒட்டிய பிரதேசத்தில்) புகுந்தன.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் படைகளும் பாரசீகத்தின் தென் பகுதிக்குள் புகுந்தன. பாரசீக சர்க்காரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் பிரிட்டிஷ் படைகள் வந்தன என்பது குறிப்பிடத் தக்கது. பிரிட்டிஷ் படைகள் பாரசீகத்தில் இருப்பதற்கு எந்த விதமான சட்டரீதியான உரிமையும் கிடையாது. எனவே, ஆங்கிலோ—சோவியத்—பாரசீக ஒப்பந்தம் 1942-ம் வருடம் ஜனவரி மாதம் 29-ந்தேதி ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி பிரிட்டிஷ்—சோவியத் படைகள் யுத்தம் முடிந்து ஆறுமாத காலம் வரையிலும் பாரசீகத்தில் இருக்கலாம். பின்னர் எந்தவிதமான சட்டரீதியான உரிமையுமின்றி அமெரிக்கப்படைகளும் பாரசீகத்தில் புகுந்தன.

இரானின் வடபாகத்தில் செம்படைகளும், தெற்கு பாகத்தில் பிரிட்டிஷ் துருப்புகளும் இருந்தன.

**"ஆசியாவும் அமெரிக்காவும்"** என்ற அமெரிக்க பத்திரிகையில் **ரேமாண்ட் ஆர்தர் டேவிஸ்** ரேஸாஷா முடி துறந்து ஓடிய பிறகு ஜனநாயக சக்திகள் வளர்ச்சியடைந்ததைப் பின்வருமாறு எழுதுகிறார்:

"நேசப்படைகள் வந்த பின்பு சர்வாதிகார ஆட்சி சிதறடிக்கப்பட்டது. அமோகமாக பாரசீக பொதுஜன இயக்கம் வளர்ச்சியடைந்தது. அரசியல் கட்சிகள் உதயமாயின. பல வருடங்களாக சட்டவிரோதமாக இயங்கிக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சி சட்ட ரீதியாக வேலை செய்யத் துவங்கிற்று. சகல தொழிற் சாலைகளிலும் தொழிற் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1944-ம் வருட இறுதியில் 2 லட்சம் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டிருந்தார்கள். மாதர்கள் சங்கமும், விவசாயிகள் ஸ்தாபனமும் அமைக்கப்பட்டன."

## பிரிட்டிஷ் பிரதேசத்தில்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் படைகளுள்ள பிரதேசத்தில் கள்ளமார்க்கட் கொலைபாதகர்களும், நிலச்சுவான்தார்களும் சுதேச மன்னர்களும், அவர்களது எஜமானனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் பொதுஜனங்களைச் சுரண்டிக் கொழுத்ததோடு, ஜனநாயக இயக்கத்தை நசுக்கியும் வந்தார்கள்.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுது ஆரம்ப காலத்தில் ஜனநாயக கட்சிகளுக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சிறிது சுதந்திரமளித்தது. ஏனெனில் ஜெர்மானிய பாஸிஸ்டுகள் காகஸஸில் முன்னேறுவதைக் கண்டு பயந்தார்கள். எனவே, பொதுஜனங்களின் ஆதரவு தேவையாக இருந்தது. ஸ்டாலின்கிராடில் ஜெர்மானிய பாஸிஸ்டுகள் குழிவெட்டிப் புதைக்கப்பட்டபின்பு, ஹிட்லர் அபாயம் ஒழிந்தபின்பு, டுடே கட்சியை வேட்டையாடத் துவங்கினார்கள். அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்கள். பொதுஜன சக்தி டுடே கட்சியின் தலைமையில் வலிமைபெற்று வருவதைக் கண்டு அஞ்சினார்கள்.

தேசத் துரோகி என்ற குற்றம் சாட்டி 1923-ம் வருடம் நாடு கடத்திய **ஸையத் ஸியாவுதீனை** தேர்தலுக்குச் சிலநாட்கள் முன்பு 1943-ம் வருடம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திரும்பவும் பாரசீகத்திற்கு கொண்டுவந்தது. டாக்டர் ஹுஸ்ஸேன் ஆலா (இப்பொழுது அமெரிக்காவில் சோவியத் யூனியனைத் தாக்கி வருகிறவர்) ஸையத் ஸியாவுதீனை குதூகலத்தோடு வரவேற்றார்! பிரிட்டிஷ ஏகாதிபத்தியமும், சுதேச பிற்போக்காளர்களும் இந்த ஏஜண்டின் மூலமாக ஜனநாயக இயக்கத்தையும், தொழிற் சங்கத்தையும் நசுக்க சூழ்ச்சி செய்தார்கள்.

1943-ம் வருடத்தில் நடந்த தேர்தலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஸையத் ஸியா உதீனுக்குப் பேராதரவு கொடுத்ததோடு, ஸியாஉதீனை எதிர்த்த பல அபேட்சகர்கள் தங்களுடைய தொகுதிக்குப் போவதைத் தடுத்தனர். கொராம் ஷார் என்ற நகரத்திலுள்ள ஒரு எழுத்தாளர் தனது தொகுதிக்குப் போவதைத் தடுத்ததோடு, அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்று கூறிய பொழுது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையை அம்பலப்படுத்துவார் என்று பயந்து, பாரசீகத்தை விட்டு வெளியேறக் கூடாதென்று தடுத்தது! தெஹரானிலுள்ள டாக்டர் ஸஞ்சாபி என்பவரையும் தனது தொகுதித்குப் போவதைத் தடுத்தது. கர்னல் பிளச்சர் என்பவன்தான் இத்தகைய அடக்குமுறைகளுக்குத் தலைவன் என்று தெஹரான் பத்திரிகைகள் கூறின.

## "மக்கள் நண்பர்கள் செம்படை"

செம்படை பாரசீகத்திற்குச் சென்றது, பாஸிஸ்டுகளின் கொடிய கரங்களிலிருந்து தங்களுடைய நாட்டையும், உலகத்தையும் விடுவிப்பதற்காகத்தான். சமதர்ம நாட்டிற்கு, பாரசீகத்தைச் சுரண்டி வாழவேண்டிய அவசியமே கிடையாது. வர்க்க பேதமற்ற புதியசமூகத்தில் பிறந்து வளர்ந்த செம்படைக்கும், அடிமை நாடுகளைச் சுரண்டிக்கொழுக்கும் ஏகாதிபத்திய படைகளுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது...... செம்படை பாரசீகத்தில் எப்படி நடந்துகொண்டது என்பதை பாரசீகரே வர்ணித்தார்.

பம்பாயிலுள்ள ஒரு பாரசீக வியாபாரி தமது நாட்டை நேரில்கண்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். அந்த வியாபாரியை 1944ம் வருடம், நவம்பர் மாதம் "பீபில்ஸ்வார் நிருபர்" பேட்டி கண்டார். எந்த அரசியல் கட்சியையும் சேராத அந்த வியாபாரி, செம்படையைப்பற்றி பின்வருமாறு கூறினர்:

"கடந்த 6 மாதங்களாக நான் பாரசீகத்தில் தங்கியிருந்தேன். அக்டோபர் மாதக் கடைசியில்தான் இந்தியாவுக்கு வந்தேன்...... இப்பொழுது விலைவாசிகள் விஷம்போல் ஏறியிருக்கின்றன. காரணம், பிரிட்டிஷ் படைகளும், பிரிட்டிஷ் அதிகாரிகளும்தான். அவர்கள் தானியங்களை யெல்லாம் பதுக்கி வைத்திருக்கிருர்கள்.

"இரண்டு பாரசீகத்திற்கு மிடையே—பிரிட்டிஷ், சோவியத் பிரதேசங்களுக்கிடைய—மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசத்தை கண்டேன். சோவியத் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு செம்படை தானியங்களைக் கொடுத்துப் பேருதவி புரிந்திருக்கிறது. ஆனல் பிரிட்டிஷ் பகுதியில் மக்கள் உணவில்லாமல் கஷ்டப்பட்டார்கள். நெருக்கடி காலத்தில் சோவியத் யூனியன் தானியங்கள்,

உடை முதலியன கொடுத்து உதவியதால் விலைவாசிகள் இறங்கின. கள்ளச் சேமிப்பாளர்களின் கள்ளமார்க்கெட் கோட்டை தகர்ந்தது.......

"உங்களுக்கு இந்தச் "சிவப்பு" மனிதர்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது! அவர்கள் வயல்களில்கூட வேலைசெய்து எங்களுடைய மக்களுக்கு உதவி புரிந்தார்கள். தங்களுடைய நாடகங்களுக்கும், சினிமாக்களுக்கும் எங்களை அழைத்தார்கள்.......

"சோவியத் யூனியனுக்கும், பாரசீகத்திற்கும் இடையே கடந்த இருபது ஆண்டுகளாக நேச உறவு ஏற்பட்டிருக்கிறது. பாரசீகத்தை "விழுங்க"வேண்டுமென்று நினைத்தால், சோவியத் யூனியன் ஏற்கனவே விழுங்கி ஏப்ப மிட்டிருக்கும். ஆனால் அதற்கு நேர் முரணாக, 1943ம் வருடத்தில் நாங்கள் உணவின்றி தவியாய்த் தவித்தபொழுது, சோவியத் யூனியன் மாத்திரம்தான் எங்களுக்கு உதவி புரிந்தது.......பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அண்டப்புளுகுகள் நேச உறவை ஒருகாலத்திலும் சிதறடிக்க முடியாது.........

"என்னுடைய தேசம் இன்று அபிவிருத்தி யடைந்து வருகிறது. யுத்தத்திற்கு முன்பு, எங்களுடைய நாட்டில் பாக்டரிகளே கிடையாது என்று சொல்லலாம். இப்பொழுது "சிவப்பு" பாரசீகத்தில் ஐந்து பாக்டரிகளும், தெற்கில் இரண்டு பாக்டரிகளும் இருக்கின்றன. ஐந்து பாக்டரிகளும், ஏழு சர்க்கரை பாக்டரிகளும் இருக்கின்றன. இவையெல்லாம், "சிவப்பு" பாரசீகத்தில் தான்! தெற்கில் ஒரே ஒரு ரயில்தான் இருக்கிறது. "சிவப்பு" பாரசீகத்திலோ, பல ரயில்வேக்கள் இருக்கின்றன். சோவியத் யூனியனிலுள்ள ஐந்து முக்கியமான நகரங்களை இணைக்கும் ரயில் வேக்கள்: இவை இப்பொழுதுதான், யுத்தம் ஆரம்பமான பின்பு தான் அமைக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் சிந்தித்துப் பாருங்கள்! சோவியத் யூனியன் பாரசீகத்தின் உண்மையான நண்பனல்லவா? பாரசீக மக்கள் சோவியத் யூனியனை எப்படி வெறுக்க முடியும்?"

இது பாரசீக மக்களின்—சுதந்திர ஜனநாயக பாரசீகத்தின்—குரல். ஏகாதிபத்தியப் படைகளைப்போல், பொதுஜனங்களுக்கு துன்பம் விளைவிக்கிறவர்களல்ல. ஏகாதிபத்தியங்களைப் போல் சோவியத் யூனியன் சுதேச மக்களை அடக்கி ஒடுக்கவில்லை......

"பாரசீகத்தின் வடபாகத்தில் ஏன் டூடே கட்சி வளர்ந்திருக்கிறது என்று கேட்டபொழுது ஆர்மேனியர்களின் தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அர்டாச்சஸ் ஹொரானெஸினே வடபாகத்தில் செம்படைகள் இருக்கின்றன. எங்களு

டைய விவகாரங்களில் செம்படை தலையிடுவதே கிடையாது. தென்பகுதியிலுள்ள பிரிட்டிஷார், பாரசீக சர்க்கார் எங்களை வேட்டையாடி வருவதைத் தடுக்க எத்தகைய நடவடிக்கைகளை யும் எடுத்துக்கொள்ளவில்லை என்று பதிலளித்தார்'' என்று ரேமாண்ட் ஆர்தர் டேவிஸ் கூறுகிறார்.

# 4. ஜனநாயக இயக்கத்தின் சரித்திரம்

*[அஜர்பைஜான்—தர்டிஸ்தான்—டூடே கட்சி—ஜன நாயகத்தை நசுக்கச் சதி]*

## அஜர்பெஜான்

பாரசீகத்தின் வடபாகத்திலுள்ள அஜர்பெஜான், இன்று உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அஜர்பெஜான் ஜனநாயக இயக்கத்தை "ரஷ்யர்தான்'' தூண்டிவிட்டார்கள் என்று ஏகாதிபத்தியப் பிரசார யந்திரம் பாரெங்கும் பறை சாற்றி வருகிறது. இதே பேர்வழிகள்தான் இந்தோனேஷியா வில் இன்று வெடித்திருக்கும் சுதந்திர இயக்கத்தை ஜப்பானியர் கள்தான் தூண்டிவிட்டார்கள் என்றும், 1942-ம் வருடம் நமது நாட்டு மக்கள் ஏகாதிபத்திய அடக்குமுறையை எதிர்த்துப்போரா டியபொழுது, ஜப்பானியர்களால் தூண்டிவிடப்பட்டவர்கள் என் றும் பொய்ப் பிரசாரம் செய்தனர். ஆனல் நமக்கும் உலக முழுதுமுள்ள ஜனநாயக வாதிகளுக்கும் உண்மை தெளிவாகத் தெரியும். அதேமாதிரியாக அஜர்பெஜான் ஜனநாயக இயக்கத் தின் சரித்திரம் உண்மையை நிரூபித்துக் காட்டும்.

பாரசீகத்தில் கடந்த நாற்பது வருடங்களாகப் பல சுதந்திரப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இந்தப் போராட்டங் களுக்கு அஜர்பெஜான்தான் நடுநாயகமாகத் திகழ்ந்தது. இங் கிருந்துதான் ஜனநாயகப் புயல் பாரசீகத்தின் மூலைமுடுக்குகளுக் கெல்லாம் வீசியடித்தது. நமது நாட்டில் வங்காளமும், கல்கத்தா வும் நமது தேசிய இயக்கத்திற்கும், மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் முன்னேடியாக இருப்பதுபோல், பாரசீகத்திற்கு அஜர்பெஜா னும், அதன் தலைநகரான டாப்ரிஸீம் பாரசீகத்தின் தேசிய இயக் கத்திற்கு தலைமை ஸ்தானமாக விளங்குகின்றன.

டாப்ரிஸ் நகரத்தில்தான் 1612-ம் வருடம்முதல் முதலில் பத் திரிகை வெளியிடப்பட்டது. 1840-ம் வருடம் முதன்முதலில்

நவீன பள்ளிக்கூடமும் ஸ்தாபிக்கப்பட்டது. ராம் மோஹன்ராய் வங்காளத்தில் சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்த அதேகாலத் தில்தான் இந்தச் சம்பவம் நடந்தது "ஹாப்லுல் மாதீன்" "ஹாஷ்ராதுல் ஆர்ஸ்" போன்ற முற்போக்கு மனப்பான்மை யைப் பரப்பிய பத்திரிகைகள் இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் டாப்ரிஸில்தான் பிரசுரிக்கப்பட்டன.

தேசபக்தியை ஊட்டுங் "நால்பஹார் (புதிய வசந்தம்) என்ற நூலை மிர்ஸா ஆகாகான் என்ற கவி, அஜர்பெஜானில் ஆர்டே பில் என்ற இடத்திலுள்ள கொடிய சிறைக் கோட்டத்தில் எழுதி ஞர். நமது சுதேசி இயக்கமும், அன்னியத் துணி பகிஷ்கார இயக்கமும் நடந்த அதே காலத்தில்—1906-ம் வருடத்திலிருந்து 1908-ம் வருடம் வரையிலும்—பாரசீகத்திலும் தேசிய இயக்கம் தலைதூக்கிற்று. பிற்போக்கு யதேச்சாதிகார முடியாட்சியை எதிர்த்துப் பாரசீக மக்கள் போராடினர்கள். இதன்விளைவாகத் தான் 1906-ம் வருடத்தில் சில அரசியல் சீர்திருத்தங்களை பார சீக அரசன் கொடுத்தான். பாரசீகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் முதன்முதலில் அஜர்பெஜானில்தான் ஏற்பட்டது.

"என்ஜீமன்," "பிதாய்" என்ற பெயரோடு, தொண்டர் படை கள் அமைக்கப்பட்டன. "பிதாய்" என்ருல் பாரசீக பாஷையில், உயர்ந்த லட்சியத்திற்காக ஒருவன் தன்னைத் தானே தியாகம் செய்யத் தயார் என்று அர்த்தம்.

1908-ம் வருடம் இந்த அற்ப அரசியல் சீர்திருத்தத்தை பலாத்காரமாக ரத்து செய்ய ரேஸா ஷா முயற்சித்தான். ஆனல், ஆயுதம் தாங்கிய தொண்டர்கள் அவனுடைய நாசகார முயற் சியை முறியடித்தார்கள். ஆயினும், 1908-ம் வருடம் எதிர்ப் புரட்சி வெற்றி பெற்றது. தேச முழுவதும் சர்வாதிகார ஆட்சி யைக் கட்டவிழ்த்துவிட்டான் ரேஸா ஷா. ஆயினும், அஜர் பெஜான் எளிதில் அடிபணியவில்லை யென்பது குறிப்பிடத்தக் கது. டாப்ரிஸ் நகரம், ஒன்பது மாதங்கள் வரையிலும் வீரம் செறிந்த போராட்டத்தை நடத்திற்று.

" 1907-ம் வருடத்தில், பாரசீக சட்டசபையில், வட பார சீகத்திலிருந்து வந்த பிரதிநிதிகள்தான் குறிப்பிடத்தக்கவர்கள். நவீன, முற்போக்கு சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள்தான் கோரினர்கள் " என்று ஹான்ஸ் கோஹன் கூறுகிருர்.

இந்தியாவில், பிரிட்டிஷ் மிதவாதிகளின் கொள்கைகளோடு தொடர்பு வைத்துக்கொண்டவர்கள் வங்காளிகள்தான். அதே மாதிரியாக, ரஷ்யாவின் எல்லையிலுள்ள அஜர்பெஜான் முதலில் ரஷ்ய மிதவாதிகளோடும், பின்பு ரஷ்யப் புரட்சிக்காரர்களோடும்

தொடர்பு வைத்துக்கொண்டது. அதிகமாக அரசியல் உரிமைகளைக் கொடுக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் பொதுமக்கள் நடத்திய ஜனநாயக இயக்கம் எப்படி ராஜாராம் மோகன்ராய் போன்றவர்களுக்கு உத்வேகமூட்டிற்றோ, அதேமாதிரியாக ரஷ்யாவில் 1905-ம் வருடம் நடந்த ஜனநாயகப் புரட்சி அஜர்பெஜான் மக்களையும் தட்டியெழுப்பிற்று.

**ஸர் பெர்ஸிஸைக்ஸ்** என்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சரித்திராசிரியர் **"பாரசீகத்தின் சரித்திரம்"** என்ற புத்தகத்தில், "பாரசீகத்தில் நடந்த ஜனநாயக இயக்கத்தின்போது, வட பாரசீகம் தான் திட்டவட்டமான அரசியல் கொள்கைகளைச் சமர்ப்பித்தது.........இந்த இயக்கத்தின் பலனைக் கிடைத்த வெற்றிக்கு அஜர்பெஜான் மாகாணத்திற்குத்தான் முக்கிய கௌரவம் உரியது" என்று குறிப்பிடுகிறார்.

பாரசீக ஜனநாயக இயக்கத்திற்கு அஜர்பெஜான் கோட்டையாகத் திகழ்ந்ததால், பிற்போக்குப் பாரசீக சர்க்கார் அஜர்பெஜான் மக்களை மிருகத்தனமாக நசுக்கிவந்தார்கள். அடக்குமுறைகளோடு வேறு பல உபாயங்களையும் கையாண்டனர். அஜர்பெஜான் மாகாணத்தில் எந்த சர்க்கார் உத்தியோகஸ்தன் அதிகப்படியாக அபினியை விற்கிறானே, அவனுக்கு பிரத்தியேக "போனஸ்" கொடுக்கப்பட்டது. அபினியைக் கொடுத்து, மதியை மழுங்க வைத்து அரசியல் கிளர்ச்சியில் ஈடுபடாமல், கவனத்தை வேறு துறைகளில் திருப்பத்தான் இந்தச் சூழ்ச்சி!

பாரசீகத்தின் வடபாகத்திலுள்ள அஜர்பெஜானியர்கள், அதன் எல்லையை ஒட்டிய சோவியத் அஜர்பெஜான் தேசிய இனத்தை சேர்ந்தவர்கள். தங்களுடைய பக்கத்து வீட்டில், தங்களுடைய சொந்தச் சகோதரர்கள் தலைதெறிக்கும் வேகத்தில் முன்னேறி வருவதைக்கண்டு பாரசீகத்திலுள்ள அஜர்பெஜானியரும் புத்துணர்ச்சி பெற்றனர். உதாரணமாக சோவியத் அஜர்பெஜானில், 1937-ம் வருடத்தில் பள்ளிக்கூட மாணவர்களின் தொகை முன்னைவிட 25 மடங்கு அதிகரித்திருந்தது; முன்பு 12 என்ஜினீயர்கள் இருந்தார்கள்; இப்பொழுது 3000 பேர்கள்! முன்பு 2 பத்திரிகை; இப்பொழுது 100 பத்திரிகைகள்!

மேலும், அஜர்பெஜானில் பெரும்பாலான மக்கள் அஜர்பெஜானியர்கள். இவர்களுடைய பாஷைக்கும், கலாச்சாரத்திற்கும் பாரசீக பாஷைக்கும், பாரசீகர்களின் கலாச்சாரத்திற்கும் சம்பந்தமே கிடையாது. எனவே; இவர்கள் ஒரு தனி தேசிய இனத்தினர். ஆனால், பிற்போக்கு பாரசீக சர்க்கார், அஜர்பெபெஜான் பாஷையைப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கக் கூடாதென்றும், அஜர்பெஜான் பாஷையில் புத்தகங்களோ,

பத்திரிகைகளோ பிரசுரிக்கக் கூடாதென்றும் தடை உத்தரவிட்டிருந்தனர்.

கடந்த கால் நூற்ருண்டாக சுதந்திர ஜனநாயக இயக்கத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டுவந்த மக்கள் இந்த அவமானத்தை எத்தனை காலம் வரையிலும் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்? சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

## குர்டிஸ்தான் தேசீய இயக்கம்

"குர்டிஸ்தான் மலைஜாதியினர் பாரசீக மத்திய சர்க்காரைத் தாக்கி வருகிருர்கள்......இவர்கள் சோவியத் யூனியன் ஏஜெண்டுகள்" என்ற பச்சைப் புளுகுகளை ஏகாதிபத்தியப் பிரசார யந்திரம் உலக முழுதும் பரப்பி வருகிறது. ஆனால் உண்மையாக நடப்பதென்ன?

அஜர்பெஜானைப்போல், குர்டிஸ்தானத்திலும் தேசிய இயக்கம் வளர்ந்திருக்கிறது. குர்டிஸ்தானியர் ஒரு புராதன தேசிய இனத்தினர். சிலர் சோவியத் யூனியனிலும், 15 லட்சம் பேர்கள் துருக்கியிலும் (துருக்கி சர்க்கார் ஈவிரக்கமின்றி குர்டிஸ்களை கொன்று வருவதால், இப்பொழுது சுமார் 4 லட்சம் பேர்கள் தான் இருககிருர்கள்) 5 லட்சம் பேர்கள் பாரசீகத்திலும், 7 லட்சம் பேர்கள் இராக்கிலும் வசிக்கிருர்கள். குர்டிஸ்தான் தேசிய இயக்கத்தின் தலைவர்கள், இராக், இரான், துருக்கி எல்லைப்புறத்தில் ஒரு தாயகத்தைக் கேட்கிருர்கள். இந்த குர்டிஸ்தான் பிரதேசத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சொந்தமான எண்ணைக் கிணறுகள் உள்ள கிர்குக், மொஸீல் முதலிய நகரங்கள் இருக்கின்றன.

பதினெட்டாவது நூற்ருண்டிலிருந்து, பாரசீக சர்க்காரும், துருக்கி சர்க்காரும் இவர்களை நசுக்கி வருகிருர்கள். 1880-ம் வருடத்திலும் 1908-ம் வருடத்திலும் இவர்கள் புரட்சி செய்தார்கள். ஆனல் பாரசீகமும், துருக்கியும் ஒன்று சேர்ந்து, புரட்சியை அடக்கி விட்டன.

முதல் உலக மகாயுத்தம் முடிந்த பின்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் குர்டிஸ்களைத் தனது கையாட்களாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தது. எனவே, ஷெரீப் பாஷா என்ற ராணுவத்தள கர்த்தரை நேச நாடுகளுக்கும் துருக்கிக்கும் இடையே நடந்த சமாதான ஒப்பந்த மகாநாட்டிற்கு அனுப்பினுர்கள். 1920-ம் வருடம் ஸிவேர்ஸ் என்ற இடத்தில் நடந்த ஒப்பந்தப்படி, சுதந்திர குர்டிஸ்தான் ஸ்தாபிக்கப்பட்டது. கெமால் பாஷா அதிகாரத்திற்கு வந்தவுடன், இந்த உடன்படிக்கையை ரத்து செய்துவிட்டார். லாஸேன் ஒப்பந்தப்படி, குர்ட்ஸ்கள் துருக்கி, இரான், இராக் ஆகிய மூன்று தேசங்களில் பிரிக்கப்பட்டனர்.

லாஸேன் உடன்படிக்கைப்படி குர்ட்ஸ்களுக்கு சகல உரிமைகளையும் கொடுக்கவேண்டும். ஆனால் துருக்கி, இதற்கு நேர் எதிரிடையாக நடந்துகொண்டது. துருக்கியில் குர்ட்ஸ்கள் தங்களுடைய பாஷையைப் பேசக்கூடாது. இவர்களை இழிவாக நடத்தியதோடு, லட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். 1925-ம் வருடம் குர்ட்ஸ்கள் புரட்சி செய்தார்கள். ஆனால் மிருகத்தனமாக அடக்கப்பட்டனர்.

இராக்கிலும் இதைவிடப் படுமோசமான நிலைமை. 1930-ம் வருட ஆங்கிலோ—இராக் உடன்படிக்கைப்படி, இவர்களுக்குக் கலாச்சாரத்திலும், அரசியலிலும் ஓரளவு உரிமை கொடுக்க வேண்டும். ஆனால் துருக்கியைப்போல் இங்கும் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். இரானிலும் இதேமாதிரியாக நசுக்கப்பட்டனர். ஆனால், சோவியத் யூனியனில் பரிபூரண சுதந்திரத்தைப் பெற்று, பாஷை, கலாச்சாரம் முதலிய துறைகளில் அபிவிருத்தி யடைந்திருக்கிறார்கள்.

பாரசீகத்தின் வடபாகத்தில் செம்படை வந்தபின்பு, அஜர்பெஜானைப் போல், குர்டிஸ்தானிலும் பெருத்த மாறுதல் ஏற்பட்டது. குர்டிஷ் பாஷையில் பள்ளிக்கூடங்களும், பத்திரிகைகளும் ஆரம்பிக்கப்பட்டன. குர்டிஷ் தேசிய இயக்கமும் காட்டுக்கனல் போல் வளர்ந்தது.

குர்டிஷ்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எண்ணைக் கிணறுகள் உள்ள பிரதேசத்தில் இருப்பதால், தேசிய இயக்கம் பரவி வருவதைக் கண்டு அஞ்சுகிறது. ஏனெனில் சுதந்திர ஜனநாயக குர்டிஸ்தான் ஏகாதிபத்தியத்தின் சுரண்டுதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும். எனவே குர்டிஷ்தானில் மலர்ந்திருக்கும் சுதந்திர, ஜனநாயக இயக்கத்தினரின் போராட்டத்தை "கொள்ளைக்காரர் கூட்டத்தின் அட்டகாசம்" என்று ஏகாதிபத்தியங்கள் பொய்ப் பிரசாரம் செய்கின்றன.

குர்டிஸ்தானியர்களின் தேசிய இயக்கத்தைப்பற்றி ஏகாதிபத்திய பிரசார யந்திரம் தாறுமாறாகத் திட்டி வருகிறது. எனவே, அவர்களுடைய லட்சியமென்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பாரசீகத்திலுள்ள குர்டிஸ்தானியர்களின் தேசியக் கட்சியின் தலைவர் **ஆகா மகமத் காஸி**. இந்த வருடம் ஜனவரி மாதத்தில், தெஹரானிலுள்ள ஐந்து பத்திரிகைகளின் நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டார்கள். அப்பொழுது அவர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு ஆகா மகமத் காசி பின்வருமாறு பதிலிறுத்தார் :—

"குர்டிஸ்தான் ஜனநாயகக் கட்சியின் லட்சியம் இதுதான் :

(1) பாரசீகத்தில் குர்டிஸ்தானியர்களுக்கு கலாச்சார சுதந்திரம் அளிக்கவேண்டும்.

(2) குர்டிஸ்தான் பாஷையில்தான் பள்ளிக்கூடங்களில் பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும். சர்க்கார் விவகாரங்களையும் சுதேச பாஷையில் நடத்தவேண்டும்.

(3) குர்டிஸ்தானியர்களைத்தான் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கவேண்டும்.

(4) இந்தப் பகுதியில் வாழும் சகல தேசிய இனத்தினரோடும் நேச உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறோம்.

(5) ஏழை விவசாயிகளுக்கு நிலம், கடன் முதலியன கொடுத்து உதவவேண்டும்.

அஜர்பெஜானியர்களும், நமது நாட்டிலுள்ள பல தேசிய இனத்தினர்களும் கேட்கும் கோரிக்கைகளைத்தான் குர்டிஸ்தானியர்களும் கேட்கிறார்கள். தங்களுடைய மக்கள், தங்களுடைய பாஷை, தங்களுடைய கலாச்சாரம் அபிவிருத்தி யடையவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த நியாயமான கோரிக்கைகளை ஏகாதிபத்தியங்கள் திரித்துக் கூறுகின்றன. ஏகாதிபத்தியங்களுக்கு வால் பிடிப்பது நமது சுதந்திரப் பாதையா? அல்லது, நமது இயக்கத்தைப் போன்ற ஒரு தேசிய இயக்கத்தை ஆதரிப்பது நமது லட்சியமா? சிந்தித்துப் பாருங்கள்!

## டூடே கட்சி

பாரசீகத்தின் சுதந்திர ஜனநாயக இயக்கத்தில், டூடே கட்சி (பொதுஜனக் கட்சி) முக்கிய பங்கெடுத்துக் கொண்டு வருகிறது. கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள். தேசியவாதிகள், முற்போக்கு மிதவாதிகள் ஆகிய சகல கட்சியினரும் இதில் இருக்கிறார்கள். டூடே கட்சியின் சார்பில், தொழிலாளர் சங்கங்களும், கிஸான் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த ஜனநாயகக் கட்சியை "ஏகாதிபத்திய பிரசார யந்திரம்" சோவியத் யூனியனின் ஐந்தாம்படை என்று பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது. பாரசீகத்தைக் கபளீகரம் செய்து வரும் ஒரு "பூதம்" என்று ஏகாதிபத்தியப் பத்திரிகைகள் துவேஷப் பிரசாரம் செய்து வருகின்றன. எனவே இந்தக் கட்சியின் திட்டமென்ன என்பதை ஜனநாயக வாதிகள் அறிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இல்லையானால், ஏகாதிபத்திய வலையில் சிக்கும்படியே நேரும்.

பாரசீக சட்டசபையில் டுடே கட்சியின் தலைவரான டாக்டர் **கெஷாவரேஸை** தெஹரானிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க பத்திரிகைகளின் நிருபர்கள் பேட்டி கண்டார்கள். டுடே கட்சியின் திட்டத்தைப்பற்றியும், லட்சியத்தைப் பற்றியும் பின்வருமாறு அவர்களிடம் விவரித்தார்:

"டுடே கட்சியின் அங்கத்தினர்கள் தொகையைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்ந்தேனேயானால், உடனே எண்ணிக்கையைச் சொல்லியிருப்பேன். டுடே கட்சியின் அங்கத்தினகளும், பிரதிநிதிகளும் சிறையில் அடைக்கப்படும் நாட்டில் வாழ்கிறேன். இந்தக் கட்சியின் தொழிற் சங்கங்கள் நசுக்கப்பட்டிருக்கும் நாட்டில்—இந்தக் கட்சியின் 40 தினசரி பத்திரிகைகள் மீது தடை உத்தரவு விடப்பட்டிருக்கும் நாட்டில் வாழ்கிறேன்.

"சமீபத்தில் நடந்த தேர்தலில், டுடே கட்சியின் அங்கத்தினர்களுக்கு, 50,000 ஓட்டுகள் கிடைத்தன. ஓட் போடுகிறவர்கள் ரேஷன் கார்டையும் காட்டவேண்டுமென்று சர்க்கார் நிபந்தனை விதித்திருந்ததால், ஏழைகள் ரேஷன் கார்டை விற்றுவிட்டார்கள். எனவே, டுடே கட்சியை ஆதரிக்கும் அநேக ஏழைகள் ஓட்போடவில்லை.

"ஹிஸ்பே டுடே—இ—இரான் என்ற டுடே கட்சியின் திட்டங்கள இதுதான்.

1. நசுக்கப்பட்ட தொழிலாளர்களதும், விவசாயிகளதும் சுதந்திரத்தை விரும்பும் அறிவாளிகளதும் உத்தியோகஸ்தர்களதும் பொதுக்கட்சி இது.

2. டுடே கட்சி, பாரசீத்தின் பூரணசுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறது. ஏகாதிபத்தியங்களின் சூழ்ச்சிகளை எதிர்த்துப் போராடுகிறது.

3. சரி சமத்துவ அந்தஸ்தின் அடிப்படையில் சுதந்திரத்தை விரும்பும் சகல நாடுகளோடும் நேச உறவு வைத்துக்கொள்வதுதான் டுடே கட்சியின் நோக்கம். உலக சமாதானம்தான் எங்களுடைய லட்சியம்.

4. தேசிய சர்க்காரையும், உண்மையான ஜனநாயக அரசாங்கத்தையும் அமைக்க விரும்புகிறோம்.

5. நிலப்பிரபுத்துவ முறையை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். சர்க்கார் நிலத்தையும், பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தையும் வாங்கி, உழவர்களுக்கு விற்கவேண்டும். மொத்தப் பணத்தை உடனே கேட்காமல், சிறு தொகையாக அந்தப் பணத்தை வசூல் செய்யவேண்டும்.

பாரசீகத்திலுள்ள சகல தேசிய இனத்தினருக்கும் சரிசமத்துவம் கொடுக்கவேண்டுமென்று கோருகிறோம்."

இத்தகைய முற்போக்கு லட்சியங்களை உட்கொண்ட கட்சி, பொதுஜனங்களின் அன்பையும், ஆதரவையும் பெருமலிருக்குமா?

சமீபத்தில் நடந்த தேர்தலில் இஸ்பஹானில் டூடே கட்சியின் பிரதிநிதி பெடாகர் மொத்தம் 34000 ஓட்டுகளில் 30000 ஓட்டுகளைப் பெற்ருர். சட்டசபைக் கூட்டத்திற்கு பெடாகர் இஸ்பஹானிலிருந்து தெஹரானுக்குப் போகும்பொழுது, ஆயிரக்கணக்கான மக்கள் அவரை இஸ்பஹான் வீதிகளினூடே பின் தொடர்ந்து சென்றனர்!

மஜ்லிஸில் உள்ள 120 அங்கத்தினர்களில் 8 பேர்கள் டூடே கட்சியினர். சுமார் 25 பேர்கள் டூடே கட்சியின் அனுதாபிகள். டூடே கட்சியின் "ராபார்" என்ற பத்திரிகைதான் தெஹரானில் அதிகச் செல்வாக்கு பெற்றிருக்கிறது. டூடே கட்சியின் செல்வாக்கு அமோகமாக பெருகியிருப்பதனுல்தான் பிரிட்டிஷ் முதலாளிகளின் பத்திரிகையான "எகனுமிஸ்ட்"

"இன்றைய சட்டசபையிலுள்ள கட்சிகளில் டூடே கட்சிதான் கட்சிக் கட்டுப்பாட்டோடு நடக்கிறது. எட்டுப் பேர்கள் அடங்கிய இந்தச்சிறு கட்சி, சட்டசபைக்கு உள்ளேயும், வெளியிலும் தீவிரமாகப்போராடுகிறது" என்று கூறுகிறது.

## ஜனநாயகத்தை நசுக்க முயற்சி

இரண்டாவது உலக மகா யுக்தம் நடக்கும்பொழுதே, உலக முழுதும் ஜனசக்தி வளர்ந்து வந்தது. பாரசீகத்திலும், டூடே கட்சியின் தலைமையின்கீழ் பொதுமக்கள் ஒன்றுபட்டு ஜனநாயகத்தை நோக்கி தலைதெறிக்கும் வேகத்தில் முன்னேறி வந்தார்கள். 1941-ம் வருடம் ரேஸாஷா முடிதுறந்து ஓடியபின்பு, பாரசீக மக்கள் சிறிது பிரஜா உரிமைகளைப் பெற்றனர். ஜனநாயக சக்திகள் வளர அரம்பித்தன. இதைக்கண்டு பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் பயந்து நடு நடுங்கின. இதை நசுக்கவில்லையென்ருல், இரு கும்பல்களையும் குழிவெட்டிப் புதைப்பார்களென்பதை உணர்ந்தனர். எனவே, ஜனநாயக இயக்கத்தை நசுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டான ஸையக் ஸியா உதீன் மூலமாக இந்த நாசகாரப் பணியை நடத்தத் திட்டம் போட்டனர்.

"பாரசீகத்தின் தென்பகுதியின் வழியாக, பிரிட்டிஷாரின் அனுமதியின்றி ஒருவரும் பாரசீகத்திற்குள் நுழையமுடியாது.

ஸியாஉதீன் பிரிட்டிஷாரின் அனுமதி பெற்றுத்தான் வந்தான். அவர் பாரசீகத்திற்குள் வந்தபிறகு, இரண்டாவது நாள் பாரசீக சட்டசபைக்கு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றையதினமே. சோவியத் யூனியனைக் கடுமையாகத் தாக்கத் துவங்கிவிட்டான். 1945-ம் வருட இறுதியில், தெஹரானிலுள்ள "எம்ரூஸ் லி பார்தா" என்ற பததிரிகை, "பாரசீகத்தில் சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கவும், பாரசீக சோவியத் உறவை முறியடிக்கவும் ஸியாஉதீன் அனுப்பப்பட்டான் என்று எழுதிற்று" என்று ரேமாண்ட் டேவிஸ் எழுதுகிறார்.

பிற்போக்கு நிலச்சுவான்கள் "நேஷனல் வில் கட்சி" என்ற ஸ்தாபனத்தை அமைத்தார்கள். இதன் தலைவர் ஸையத் ஸியா உதீன். இதை அன்னிய சர்க்கார்கள் ஆதரித்துவருவதால் "பிரிட்டனுக்கு ஆதரவான கட்சி" என்று பாரசீகர்கள் அழைக்கிறார்கள் என்று ஏ. ஆர். ஹார்டிஞ்ச் "ஹிந்துஸ்தான்" பத்திரிகையில் (3-10-46) எழுதுகிறார்.

"உலக முழுவதும் வீசியடிக்கும் சுதந்திரச் சண்டமாருதம் பாரசீகத்தையும் சும்மா விடவில்லை......நேச நாடுகள் பாரசீகத்திற்குள் நுழைந்தபின்பு, முற்போக்காளர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

"......ஜனநாயக சக்திகள் வளர்ந்து வலிமை பெற்றன. அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்று மக்கள் கோருவதைக் கண்டு ஆளும் வர்க்கமும், நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் பயப்படுகிறார்கள். சட்டசபையில் மேன்மேலும் பிரதிநிதித்துவம் கொடுத்தால், ஜனநாயக ஸ்தாபனங்கள் பலமடைந்தால் மக்களை அடிமைப்படுத்தி வைக்க சட்டசபை மாத்திரம் போதாது.

"1945ம் வருடத்தின் மத்திய காலத்தில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கிற்று......மஜ்லிஸிலுள்ள பெரும்பாலான அங்கத்தினர்கள் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவர விரும்பவில்லை. நிலப்பிரபுத்துவ மூறையை நீடிப்பதே அவர்களது குறிக்கோள்......அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்று மக்கள் கேட்டார்கள். அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, சர்க்கார் இதற்குப் பதில் கொடுத்தார்கள். முதல் உதை தொழிற்சங்கங்கள்மீது விழுந்தது; தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலர் கொலை செய்யப்பட்டார்கள். தொழிற்சங்கக் கட்டிடங்களை மூடினார்கள். அவைகளின் தலைவர்கள் ஒளிவு மறைவாக வாழ வேண்டி வந்தது. தெஹரானிலுள்ள ஏராளமான பத்திரிகைகள் மூடப்பட்டன. கிராமங்களிலுள்ள விவசாயிகள் சங்கங்கள்மீது தடை உத்திரவு போடப்பட்டது.......

"ஸையத் ஸியா உதீனின் "நேஷனல் வில் கட்சியில்" 9,100 அங்கத்தினர்கள் இருந்தார்கள். ஜெர்மானிய, இத்தாலிய பாசிஸ்டுக் கட்சியைப்போல், பாரசீகத்திலும் ஒரு பாசிஸ்டுக் கட்சியை ஸ்தாபிக்க ஸியா உதீன் திட்டம் போட்டிருந்தான் ..........." என்று ரேமாண்ட் ஆர்தர் டேவிஸ் (ஏப்ரல் 46-ல் "ஆசியாவும், அமெரிக்காவும்" என்ற பத்திரிகையில் எழுதுகிருர்.

சட்டசபையில் ஸியா உதீன் கும்பல்களுக்கு அதிக ஸ்தானம் கிடைத்திருந்தன. ஆனால், சட்டசபையில் பலர் இவர்களை முழுக்க முழுக்க ஆதரிக்கவில்லை. உதாரணமாக, நடுநிலைமையாளர்களின் (வலதுசாரிகளும் அல்ல, இடதுசாரிகளும் அல்ல) தலைவர்களான டாக்டர் முஸாடிக், கவாம் ஸீல்தானே (இப்பொழுது பிரதம மந்திரி) போன்றவர்கள் ஸியா உதீனின் போக்கை அப்படியே ஆதரிக்கவில்லை.

ஸியா உதீனை ஆதரிப்பவர்கள் 80 பேர்களும், அவனை எதிர்ப்பவர்கள் 50 பேர்களும் சட்டசபையில் இருந்தனர். இந்த 50 பேர்கள் சட்டசபைக் கூட்டத்திற்கு வரவில்லை யென்ருல், கோரம் கிடையாது. எனவே, சட்டசபைக் கூட்டமும் நடக்காது.

ஆகையால் டுடே கட்சியையும், ஜனநாயக இயக்கத்தையும் வேரோடு கெல்லி எறிய ஸியா உதீன் திட்டம் போட்டான். முதல் எதிர்ப் புரட்சிப் போர்த் தந்திர முறை, மந்திரி சபையைக் கைப்பற்றுவது என்பதுதான்.

ஸையத் ஸியா உதீனின் சூழ்ச்சியின் பலனாக ஸையத் மந்திரி சபை 1944-ம் வருடம் நவம்பர் மாதம் ராஜிநாமா செய்த பின்பு, பாயாட்டின் தலைமையின் கீழ் நடுநிலைமையாளர்களின் மந்திரி சபை அமைக்கப்பட்டது. ஆனால், புதிய மந்திரி சபை ஸியா உதீன் விருப்பப்படி நடக்கவில்லை. "ராட்-இ-எம் ரூஸ்" என்ற அவனுடைய பத்திரிகை,

"பாயாட் தொலையவேண்டும். ஏனெனில், அவன் தேசத்தைப் புரட்சியை நோக்கி இழுத்துச் செல்கிருன்" என்று (12-3-45) எழுதிற்று. எனவே, பாயாட் ராஜிநாமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். ஹகீமல்-முல்க் என்ற பழைய மிதவாதி மந்திரியானுர். இவரும் ஸியா-உதீனின் கொள்கையை ஒப்புக்கொள்ளாததால் ஜூன் மாதத்தில் ராஜிநாமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். பின்னர், அவனுடைய நண்பர்களான ஸாதிரும், பிறகு ஹகீமியும் பிரதம மந்திரிகளானுர்கள். 1945-ம் வருட இறுதியில் நடக்கவேண்டிய மஜ்லிஸ் தேர்தலை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தனர். அன்னிய நாட்டுத் துருப்புகள் இருப்ப

தால் தேர்தலை நடத்தக்கூடாதென்று சாக்குப்போக்கு கூறினார்கள். வாஸ்தவத்தில் ஜனநாயக உணர்ச்சி பெருகியிருப்பதால், தேர்தலில் டுடே கட்சியும், ஸியா உதீனை எதிர்ப்பவர்களும் வெற்றி பெறுவார்கள் என்ற காரணத்தால்தான் தேர்தலை ஒத்திப்போட்டுக்கொண்டே போனார்கள். மேலும் சோவியத் துருப்புகள் பாரசீகத்தைவிட்டு வெளியேறியவுடன், ஜனநாயகத்தைக் குழிவெட்டிப் புதைக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார்கள். (சோவியத் துருப்புகள் பாரசீகத்தைவிட்டு வெளியேறியவுடன் பிற்போக்கு இராணுவத் தலைவர்கள் மத்திய சர்க்கார் உத்தரவின்றி அஜர்பெஜான் தேசிய இயக்கத்தினரைத் தாக்கினார்கள். இது, அவர்களுடைய திட்டத்தை நிரூபிக்கிறது.)

இரண்டாவது திட்டம், சட்டசபைக்கு வெளியே ஜனநாயக கட்சியையும், அதன் தலைவர்களையும் நசுக்குவது. 1944-ம் வருடத்தின் மத்திய பகுதியில், பல ஜனநாயக பத்திரிகைகளைத் தாக்கத் துவங்கினான். நவம்பர் மாதத்தில் டுடே கட்சியின் "ராபார்" பத்திரிகைக்கு தடை உத்தரவு போடப்பட்டது. போல்ஷ்விக் புரட்சியின் 27-வது வருடக் கொண்டாட்டத்தின்போது இந்தச் சம்பவம் நடந்தது. இத்துடன், தெஹ்ரானில் 20,000 ஜனங்கள் அடங்கிய பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தைப் பலாத்காரமாகக் கலைத்து, அதன் தலைவர்களைக் கைது செய்தார்கள். டிரேட் யூனியன் காரியாலயத்திலிருந்த தொழிலாளர் தலைவர்களைக் கைது செய்து, கட்டிடத்திலிருந்த சொத்துக்களைக் கொள்ளையடித்தனர் போலீஸ் கும்பல்கள்.

இதே மாதிரியாக பாரசீகம் முழுதும் தொழிற் சங்கத்தை நசுக்கி வந்தான்.

மேலும், ஜனநாயகக் கட்சிக்கு அனுதாபம் காட்டிய உத்தியோகஸ்தர்களையும் சும்மா விடவில்லை. உதாரணமாக, பாஹ்ரோமியில் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் டுடே கட்சியை மிருகத்தனமாக நசுக்குவதை எதிர்த்தார். எனவே, அவரை அங்கிருந்து அகற்றிவிட்டான்.

டாக்டர் கெஷாவரெஸ் போன்ற டுடே கட்சித் தலைவர்களை கூண்டாக்கள் நையப் புடைத்து, பயமுறுத்தினார்கள். ஜனநாயகவாதிகளைத் தாக்கும்படி மலைஜாதியினரைத் தூண்டி, குர்டிஸ்தானிலுள்ள ஜனநாயக வாதிகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாட்களான மலை ஜாதியினர் அடிக்கடி தாக்கி வந்தனர். ஆனால், இவர்களுடைய அட்டகாசத்தை அடக்க மத்திய சர்க்கார் எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வில்லை. சர்க்கார் ராணுவத்தில் லெப்டினண்டு கர்னல் பதவி வகிக்கும் மஹமத் ரஷீத், கானி ஸகானி ஆகியவர்கள்தான் இந்த மலைஜாதியினரின்

தலைவர்கள்!........எனவே, பாரசீகத்தில் பிற்போக்காளர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் இடையே போராட்டம் நடந்து கொண்டிருந்தது. "ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து, பாரசீகத்தை விடுவிக்கிறோம்—அதன் சுதந்திரத்தைக் காப்பாற்றுகிறோம்" என்று மார்தட்டி வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சுதேச பிற்போக்காளர்களைப் பயன்படுத்திக்கொண்டு, ஜனநாயக இயக்கத்தைச் சிதறடித்து வந்தார்கள். பாரசீகத்தின் தேசிய ஜனநாயக இயக்கத்தின் தாயகமான அஜர்பெஜானில், நவம்பர் மாதம் நடந்த சம்பவத்திற்குக் காரணம், இந்தப் போராட்டம் தான்.

இத்துடன் சோவியத் எதிர்ப்பு வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் பாரசீகப் பிற்போக்காளர்கள்.

உதாரணமாக, 1921-ம் வருடத்திய சோவியத் பாரசீக ஒப்பந்தப்படி, (ஜார் கொடுங்கோலனுக்குச் சொந்தமான எண்ணைக் கிணறுகளைப் பாரசீக சர்க்காருக்கே திருப்பிக் கொடுத்த பின்பு) வடபாரசீகத்தில் அன்னிய சர்க்காருக்கு எண்ணை எடுக்கும் உரிமையைக் கொடுக்கக் கூடாது. ஏனெனில், அன்னிய நாடுகள் இந்தப் பிரதேசத்தை சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு ராணுவ தளமாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள்.

பாரசீக பிற்போக்கு சர்க்கார், ஒப்பந்தம் ஆன உடனேயே இந்த நிபந்தனையை மீறி நடந்தது.

1921-ம் வருடம் நவம்பர் மாதம் 23ந் தேதியன்று அமெரிக்க ஸ்டாண்டர்ட் எண்ணைக் கம்பெனிக்கு வடபாரசீகத்தில் எண்ணை எடுக்கும் உரிமையைப் பாரசீக சர்க்கார் கொடுத்தது. 1922-ம் வருடம் இந்தக் கம்பெனி நிபந்தனைகளை மீறி நடந்ததால், உரிமையை ரத்து செய்தது.

1923-ம் வருடம் டிசம்பர் மாதம், அமெரிக்கன் ஸின்க்ளேயர் கம்பெனிக்கு எண்ணை எடுக்கும் உரிமையைக் கொடுத்தது. ஆனால், இந்த கம்பெனிக்குப் போதுமான மூலதனம் கிடைக்கவில்லை.

1937-ம் வருடம், ஜனவரி மாதம், திரும்பவும் அமெரிக்கன் டிலாவேர் கம்பனிக்கு எண்ணை எடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கம்பனியே உருப்படாமல் போய்விட்டது.

1939-ம் வருடம் மார்ச்சு மாதத்தில், ஒரு டச்சு கம்பெனிக்கு எண்ணை எடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. 1944-ம் வருடம் பிப்ரவரி மாதம் எண்ணை எடுக்கும் உரிமை ரத்து செய்யப்பட்டது.

1944-ம் வருட இறுதியில் டச்சு, அமெரிக்க ஏகாதிபத்ய முதலாளிகள் பாரசீக சர்க்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்திவந்

தனர். செப்டம்பர் மாதத்தில் சோவியத் யூனியனும் வடபாரசீகத்தில் எண்ணெ எடுக்கும் உரிமை கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தது.

உடனே ஏகாதிபத்தியப் பத்திரிகைகள் "சோவியத் யூனியன் பாரசீகத்தை விழுங்க முயற்சி செய்கிறது" என்று தொண்டை கிழியக் கத்தின. நமது நாட்டு தேசியப் பத்திரிகைகளும் "சோவியத் யூனியன் ஏகாதிபத்திய நாடாகமாறுகிறது" என்று குற்றஞ் சாட்டின.

விருப்பு வெறுப்பின்றி உண்மையை ஆராய்ந்ததுபாருங்கள்! தனது எல்லையிலுள்ள பாரசீகத்தோடு நேச உறவு வைத்துக் கொள்ளவும், பாரசீகத்தின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும் முறையிலும் சோவியத் யூனியன் வேண்டுகோள் விடுத்தது.

1920-ம் வருடத்தில் சோவியத் யூனியன் நீண்ட முதல் உலக மகாயுத்தத்தாலும், தலையீடு யுத்தத்தாலும் பொருளாதாரத்துறையில் பலஹீனமாகவே இருந்தது. எனவே, பாரசீகத்திற்கு உதவி செய்யமுடியாத நிலைமையில் இருந்தது. 1944-ம் வருடத்தில், தொழில் முன்னேற்றத்தில் உலகத்தில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. பாரசீகத்திற்கு உதவி செய்யக்கூடிய சக்தி பெற்றிருந்தது. பாஸிஸ்டு எதிர்ப்பு யுத்தம், சோவியத் யூனியனின் எண்ணெக் கிணறுகளை வற்றி வரண்டுபோகும்படி செய்துவிட்டது. எனவே சோவியத் யூனியனுக்கு உடனடியாக எண்ணெ தேவையாக இருந்தது.

பாரசீகம் சுயமாகவே எண்ணெ எடுக்கும் தொழிலை நடத்த முடியாத நிலைமையில் இருந்தது. இது எதைக் காட்டுகிறது? வடபாரசீகத்தில் நாற்பத்தைந்து வருடங்களாக எண்ணெ எடுத்துவந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யமும், அமெரிக்க ஏகாதிபத்யமும் பாரசீகத்தைப் பொருளாதாரத்துறையில் முன்னேறவிடாமல் அமுக்கிவைத்திருந்தது என்பதற்கு இது உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற உதாரணம்!

## எண்ணெபற்றி சோவியத் திட்டம்

சோவியத் யூனியன் கீழ்கண்ட பிரரேபணையைப் பாரசீக சர்க்காருக்குச் சமர்ப்பித்தது:

1. பாரசீகத்திலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை விற்பது, யந்திரங்களை நிர்வாகிப்பது முதலியன பாரசீக சர்க்காரின் நிர்வாகத்தில்தான் இருக்கும்.

2. எடுக்கப்பட்ட எண்ணெயில் 50 சத விகிதம்தான் சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படும். பாரசீக சர்க்காரிடம் எஞ்சிய 50 சத விகிதம் எண்ணெ ஒப்படைக்கப்படும்.

3. எண்ணெயை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய யந்திரங்களும், உபயந்திரங்களும் பாரசீகத்திலேயே உற்பத்தி செய்யப்படும்.

4. எண்ணெ எடுக்கும் இடத்தில் எல்லை நிர்ணயிக்கப்படும். (ஏகாதிபத்தியங்களைப்போல், பாரசீகத்தின் மொத்த நிலப்பரப்பில் ஆறில் ஐந்து பாகத்தை விழுங்காது)

5. நிர்வாக சபையில் மூன்றில் இரண்டு பாகத்தினர் பாரசீக உத்தியோகஸ்தர்கள்.

6. பாரசீகத் தொழிலாளர்களுக்கு, தொழில்கல்வி கற்றுக் கொடுக்கும்பொருட்டு, பாரசீகக்தில் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படும்.

7. தொழிலாளர்களின் நல உரிமைகள் பாதுகாக்கப்படும்.

8. இந்த ஒப்பந்தகாலம் முடிந்தவுடன் சகல பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும், யந்திரங்களும், கட்டிடங்களும் பாரசீக சர்க்காருக்கே நஷ்ட ஈடில்லாமல் கொடுக்கப்படும்.

ஆங்கிலோ இரானிய எண்ணெக் கம்பனியைப்போல் இது பாரசீகத்தைச் சுரண்டும் திட்டமல்ல. பாரசீக மக்களையும், பாரசீகத்தையும் அபிவிருத்தி செய்யும் திட்டம். பாரசீகத்தின் நல உரிமையை அடிப்படையாகக் கொண்ட நியாயமான திட்டம். முதலாளித்வ திடடமல்ல, சரி சமத்துவத்தின் அடிப்படையிலுள்ள சோஷலிஸ்டுத் திட்டம். சோவியத் பணத்தையும், பொருளையும், தொழிற்கல்வித் திறமையையும், பாரசீக இயற்கைச் செல்வத்தையும், தொழிலாளர் உழைப்புச் சக்தியையும் ஒன்றுபடுத்தி, பாரசீகத்திற்கும், சோவியத் யூனியனுக்கும் பரஸ்பர உதவி செய்யும் திட்டம்.

முதலில், பாரசீக சர்க்கார் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டது. ஆனால், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் தூண்டுதலால், பின்பு மறுத்து விட்டது. அதேசமயத்தில், ஏகாதிபத்தியங்களுக்கு விட்டுக் கொடுக்கத் துடிதுடித்தது.

“ஸேயதும் (பிரதம மந்திரி) அவரை ஆதரிப்பவர்களும் பாரசீகத்திற்கும், சுதந்திரப் பிரியர்களான சோவியத் மக்களுக்குமிடையே நேச உறவு ஏற்படுவதைக் கண்டு பயப்படுகிறார்கள்.

பிற்போக்காளர்களின் இத்தகைய கொள்கை, பாரசீகத்தை அழிந்துபோகும் நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது"

என்று "பெர்மான்" என்ற பத்திரிகை எழுதிற்று.

ஆம், பாரசீக பிற்போக்காளர்கள், சோவியத் எதிர்ப்பு, ஜனநாயக எதிர்புப் பாதையில் போய்க்கொண்டிருந்தார்கள்.

இந்தப் பிரரேபணையைப் பத்திரிகைகளில் பிரசுரிக்க அனுமதிக்வில்லை! ஆம் பொதுஜனங்கள் இதை ஆதரிப்பார்கள் என்பதற்காகத்தான்!

"முதலில் சோவியத் பிரதிநிதியிடம் சாதகமாகப் பதில் கொடுத்து, பிறகு திடீரென மறுத்ததன் அந்தரங்க நோக்கமென்ன? ஷேயத் சர்க்கார் பாஸிஸ்டு கொள்கையைப் பின்பற்றி வருகிறது. சில அரசியல் தலைவர்களின் (ஏஜண்டுகள்) தூண்டுதலே இதற்குக் காரணம்......என்று "டுடே" கட்சியின் "ராபார்" எழுதிற்று.

ஆம் சோவியத் பிரரேபணையை நிராகரித்தது, ஏகாதிபத்தியங்களின், அவர்களது ஏஜண்டுகளான சுதேச பிற்போக்காளர்களின் வெற்றி; ஜனநாயகத்தின் சுதந்திரத்தின் தோல்வி.

இவ்வாறு, பாரசீக சர்க்கார் தேச நலனுக்கு நேர் விரோதமான பாதையில் போய்க்கொண்டிருந்தது. சோவியத் எதிர்ப்பிலும், ஜனநாயக சக்திகளை நசுக்குவதிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தது.

# 5. அஜர்பெஜானில் நடந்ததென்ன?

1945-ம் வருடம் நவம்பர் மாதம் 19-ந்தேதியன்று ஏகாதிபத்திய செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட செய்தியை உலக முழுதும் பரப்பின:

"அஜர்பெஜானிலுள்ள கலகக்காரர்கள், பாரசீகத்தின் தலைநகரான தேஹரானை நோக்கிச் செல்கிறார்கள்...... அஜர்பெஜானை பாரசீகத்திலிருந்து துண்டித்து, சோவியத் யூனியனோடு சேர்ந்துகொள்வதுதான் கலகக்காரர்களின் நோக்கம்......ரஷ்யர்கள் கலகக்காரர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்கிறார்கள்......சோவியத் யூனியன்தான் இந்தக் கலகத்தைத் தூண்டிவிட்டது......"

இவ்வாறு ஏகாதிபத்தியப் பிரசார யந்திரம் தினசரி பல கதைகளை கட்டிக்கொண்டேயிருந்தன. ஆனால் ஒரு வாரத்திற்குப்பிறகு, ஏகாதிபத்தியச் செய்தி ஸ்தாபனங்களே, "தெஹரானை

நோக்கிக் கலகக்காரர்கள் செல்கிருர்கள்" என்ற செய்தியை நிறுத்திவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இன்று வரையிலும், கலகக்காரர்கள் தெஹரானுக்குச் செல்லவேயில்லை. மேலும் பாரசீக சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில், "கலகக்காரர்கள் தெஹரானை நோக்கிச் செல்கிருர்கள்" என்ற வாக்கியங்களே கிடையாது. "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரிந்து விடும்" என்ற நமது புராதன பழமொழி எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்!

## ஆனல் உண்மையாக நடந்ததென்ன?

நவம்பர் மாதத்தில் அஜர்பெஜானிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு தேர்தல் நடந்தது. தேர்தலின்போது டூடே கட்சியின் அபேட்சகர்கள் கிழ்க்கண்ட திட்டங்களைத் தேர்தல் திட்டமாக உட்கொண்டிருந்தார்கள்:

(1) அஜர்பெஜானிலுள்ள பள்ளிக்கூடங்களில் பாரசீக பாஷையோடு, அஜர்பெஜான் பாஷையும் கற்றுக்கொடுக்கவேண்டும்; (2) நீதிமன்றங்கள் சர்க்கார் இலாகாக்கள் முதலிய ஸ்தாபனங்களில், அஜர்பெஜான் பாஷையை உபயோகிக்கவேண்டும். (3) இன்னும பொது ஜனங்களுக்கு அதிகமாக பிரஜா உரிமைகள் கொடுக்கவேண்டும். (4) பரிபூரண ஜனநாயகத் தேர்தல்களை நடத்தவேண்டும்...." (5) பாரசீக மத்திய சர்க்காரின்கீழ், அஜர்பெஜானை ஒரு சுதந்திர மாகாணமாகக் கருதவேண்டும்........ முதலியன.

இன்னும் தெளிவாகக் கூறுவதென்ருல், உதாரணமாக ஆந்திர மாகாணத்தை ஒப்பிடலாம். தெலுங்கர்களைப்போல், அஜர்பெஜானியரும் கலாச்சாரத்தையும், பாஷையையும் அபிவிருத்தி செய்ய விரும்பினுர்கள்.

இதுவரையிலும் நசுக்கப்பட்டிருந்த தேசிய இனத்தினரின், தேசிய உணர்ச்சியைத்தான் அஜர்பெஜானியர்களது கோரிக்கைகள் பிரதிபலிக்கின்றன. எனவே, பெரும்பாலோர் தேர்தலில் பங்கெடுத்துக்கொண்டார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள், அறிவாளிகள், ஜனநாயக மனப்பான்மையுடைய நிலச்சுவான்தார்கள், பாதிரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆகிய சகல வர்க்கத்தினரும் டூடே கட்சியை அமோகமாக ஆதரித்தனர். மத்திய சர்க்காரின் கீழ் சுயேச்சையான அஜர்பெஜான் மாகாணம் உருவானுல்தான், தேசிய வளர்ச்சி சாத்தியமாகுமென்பதை உணர்ந்தனர். எனவே, அஜர்பெஜான் ஜனநாயகவாதிகளுக்கு பெருத்த வெற்றி கிடைத்தது.

ஜனநாயக இயக்கம் அமோகமாகச் செல்வாக்குப் பெற்றிருப்பதைக் கண்டு பிற்போக்கு மத்திய சர்க்காரும், அஜெர்பாஜினிலுள்ள பிற்போக்கு நிலச்சுவான்தார்களும், இவர்களின் எஜண்டான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் நடுநடுங்கினர். எனவே, தேர்தல் நடக்கும்பொழுதும், அதற்குப் பின்பும் ஜனநாயகவாதிகளைச் சுட்டு வீழ்த்திவந்தனர். "பிரிந்து போகிறவர்களின் இயக்கத்தை நசுக்கிறேம்' என்ற பெயரில், ஜனநாயக இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்குவதில் ஈடுபட்டனர். ஆனல், பிற்போக்காளர்களின் பாச்சா பலிக்கவில்லை! பல இடங்களில் நடந்த பயங்கரமான போராட்டத்தில் சர்க்கார் துருப்புகள் படுதோல்வியுற்றன. உடனே, தெஹரானிலிருந்து மேலும் படைகளை அனுப்பிற்று மத்திய சர்க்கார்.

எதற்காக? கலாச்சார சுதந்திரத்தைக் கேட்கும் மக்களை வேரோடு கெல்லி எறிவதற்காகத்தான். இந்தோனேஷ்யாவிலும், இந்தோ-சைனவிலும், சைனவிலும், கிரீஸிலும் பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் எதிர்க்கிறவர்களை ஆதரித்து, சுதந்திர, ஜனநாயகவாதிகளைக் கொன்று குவித்து வருகின்றன. அதேமாதிரியாக பிற்போக்காளர்களோடு சேர்ந்துகொண்டு பொதுஜனங்களைச் சுட்டு வீழ்த்த சோவியத் யூனியன் மறுத்தது. "பாரசீகத்தின் உள்நாட்டு விஷயத்தில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. ஆனல், வட பாரசீகத்தில் ஏற்கனவே ஏராளமான சர்க்கார் துருப்புகள் இருக்கின்றன. சாதாரணமாக, பாதுகாப்பை நிலைநாட்டுவதற்கு இந்தப் படைகள் போதும். மேலும் படைகளை அனுப்பினல், அதன் விளைவாக மேலும் போராட்டம் விஸ்தரித்து, மேலும் ரத்தக்களரி ஏற்படும். இத்துடன், வடபாரசீகத்திலுள்ள செம்படையைப் பாதுகாக்க மேலும் செம்படைகளை சோவியத் யூனியன் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். மேலும் படைகளைக் கொண்டுவர நாங்கள் தயாராக இல்லை" என்று சோவியத் யூனியன் பாரசீக சர்க்காருக்குத் தெரிவித்தது. மேலும் பாரசீகத்தின் வடபாகத்திலிருந்து சோவியத் யூனியன் உணவு முதலிய பொருள்களைக் கொண்டு போவதாக பாரசீக சர்க்கார் குற்றஞ் சாட்டியதற்கு "நாங்கள் ஒரு மணி தானியம்கூடக் கொண்டுபோகவில்லை. அதற்கு நேர்மாருக, சோவியத் யூனியன் பாஸிஸ்டுகளோடு பயங்கரமான யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும்பொழுது, சோவியத் யூனியனின் வயல்கள் ஜெர்மானியரின் ஆதிக்கத்திலிருக்கும்பொழுது, 25,000 டன் கோதுமையையும், ஏனைய பொருள்களையும் பாரசீக மக்களுக்குக் கொடுத்தோம்" என்று சோவியத் யூனியன் பதிலளித்தது.

யுத்தத்தைச் சுட்டிக் காட்டி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நமது நாட்டில் பத்து லட்சம் மக்களைப் பட்டினிபோட்டுக் கொன்றதை, சோவியத் யூனியனின் செயலோடு ஒப்பிட்டுப் பாருங்கள்!

இறுதியாக வடபாரசீகத்திலுள்ள பிற்போக்கு உத்தியோகஸ்தர்கள் ஆத்திரமூட்டும் வண்ணம் நடந்து கொண்டதுதான், இந்தச் சம்பவத்திற்கு மூலகாரணம் என்று சோவியத் யூனியன் தெரிவித்தது.

1946-ம் வருடம் மார்ச் மாதம் 2-ந் தேதியன்று விடுத்த அறிக்கையில் "வடபாரசீகத்தில் செம்படைகள் இருப்பது வரையிலும், ஜனநாயக இயக்கத்தைப் பலாத்காரமாக நசுக்க மேலும் படைகள் கொண்டு வருவதை ஒரு காலத்திலும் அனுமதிக்கமாட்டோம். வடபாரசீகத்தில் போதிய படைகள் இருந்தன. அவைகளால் பாதுகாப்பை நிலைநாட்ட முடியவில்லை யென்றால், அஜர்பெஜான் சர்க்காரும், மத்திய சர்க்காரும் பொதுஜனங்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன என்பதுதான் அர்த்தம். இந்த நிலைமையில், ஜனநாயக இயக்கத்தைப் பலாத்காரமாக நசுக்கும் செயலை சோவியத் யூனியன் ஆதரிக்காது" என்று சோவியத் யூனியன் பாரசீக சர்க்காருக்குத் தெரிவித்தது.......

பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களைப்போல் சோவியத் யூனியனும், சுதந்திர, ஜனநாயக வாதிகளைச் சுட்டுவீழ்த்த மறுத்தது. இந்தப் பெரிய குற்றத்திற்காகத்தான் ஏகாதிபத்தியங்கள் உலகமுழுதும் துவேஷப் பிரசாரத்தை நடத்தின!

நவம்பர் மாதம் 20-ந் தேதியன்று, டாப்ரீஸ் நகரத்தில் அஜர்பெஜான் தேசிய காங்கிரஸ் கூடிற்று. 700 பிரதிநிதிகள் இதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். அஜர்பெஜான் தேசிய சர்க்காரும் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் புதிய ஜனநாயக சர்க்கார் கீழ்க்கண்ட அறிக்கையில், தங்களுடைய லட்சியத்தைத் தெரிவித்தது:

1. அஜர்பெஜான் மக்கள் ஒரு தனி தேசிய இனத்தினர். சொந்தபாஷை, கலாச்சாரம், பாரம்பரை முதலியன பெற்ற மக்கள். எனவே, அஜர்பெஜான் மக்களுக்கு, மாகாண தேசிய சர்க்கார் என்ற ரூபத்தில் பாரசீகத்திற்குள்ளேயே ஒரு தனி ஜனநாயகக் குடியரசை அளிக்கும்படி மத்திய சர்க்காரைக் கோருகிறோம். அஜர்பெஜான் குடியரசு தங்களுடைய பிரதிநிதிகளை மத்திய சர்க்காரின் ஸ்தாபனங்களுக்கு அனுப்புவதன் மூலமாகவும், நியாயமான வரி செலுத்துவதன் மூலமாகவும் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ளும். இத்தகைய கோரிக்கையின் நோக்கம் பாரசீகத்தை துண்டிப்பதோ, அல்லது

எல்லைப்புறத்தை மாற்றியமைப்பதோ அல்ல. தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமையைத்தான் கேட்கிறது.

2. கலகத்திற்கு மூலகாரணமாக இருந்த பிற்போக்காளர்களையும், மக்களை வதைத்தவர்களையும் அதிகார பீடத்திலிருந்து அகற்றவேண்டும்.

3. சகல பள்ளிக்கூடங்களிலும் அஜர்பெஜான் பாஷை கற்றுக் கொடுக்கவேண்டும். யாவருக்கும் இலவசக் கல்வி போதிக்கவேண்டும்.......

4. அஜர்பெஜானைவிட்டு வெளியேறி, இப்பொழுது அதற்கு எதிரிடையாகப் பொய்ப்பிரசாரம் செய்துவரும் நிலச்சுவான்தார்களது நிலத்தையும், சர்க்கார் நிலத்தையும் விவசாயிகளுக்கு விநியோகித்து, பஞ்சத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்கவேண்டும். சர்க்கார் விவசாய பாங்குகள் மூலமாக, விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவ வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, கைத்தொழிலை ஆதரித்து புதிய பாக்டரிகளையும், புதிய ரஸ்தாக்களையும் அமைக்கவேண்டும் தொழிலாளர்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

5. பொதுஜனங்களுக்கு இலவச வைத்திய உதவி அளிக்க வேண்டும்.

6. தேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையில் நடந்துகொண்டால், தனிப்பட்டவர்களின் வியாபாரத்தையும், தொழிற்சாலைகளையும் சர்க்கார் அங்கீகரிக்கும்.

7. அஜர்பெஜானிலுள்ளவர்களுக்கு எந்த மதத்தையும் பின்பற்ற பூரண உரிமை கொடுக்கப்படும்.

8. அஜர்பெஜானிலுள்ள குர்ட்ஸ், ஆர்மேனியர்கள், அஸ்ஸார் முதலிய தேசிய இனத்தினருக்கு சரிசமத்துவம் கொடுக்கப்படும்.

அஜர்பெஜான் தேசிய சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, சுமார் ஆறு வாரங்கள் வரையிலும் தெஹரானில் ஒரே குழப்பம் குடிகொண்டிருந்தது. ஒருபுறத்தில் ஏகாதிபத்தியங்களின் கையாட்களான ஸையத் ஸியா உதீனும், பிரதம மந்திரியாக இருந்த ஹகீமியும் சோவியத் யூனியனை வெளுத்து வாங்கவேண்டுமென்று துடிதுடித்தனர். மற்றொருபுறத்தில், இப்பொழுது பிரதம மந்திரியாக இருக்கும் எம். கவாம் ஸுல்தானே தலைமையிலுள்ளவர்கள் சோவியத் எதிர்ப்புக் கொள்கையைக் கைவிடவேண்டுமென்றும், உள்நாட்டில் ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்களை ஆதரிக்

கக்கூடாதென்றும் கருதினர்கள். எனவே, உள்நாட்டிலேயே இரண்டு சக்திகள் முட்டி மோதிக்கொண்டிருந்தன. ஒருபுறத்தில் பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்களும், அவர்களது சுதேச நண்பர்களும் பாரசீகத்தை உளுத்துப்போன நிலப்பிரபுத்துவ யதேச்சாதிகார முறையில் வைத்திருந்து, பொதுமக்களைச் சுரண்டிக் கொழுக்க முயற்சி செய்தனர். அதாவது பாரசீகத்தின் நல உரிமைகளுக்குப் பாதகமான பாதையில் சென்றனர். மற்ெருரு புறத்தில், டூடே கட்சியும், தொழிற் சங்கங்களும் அஜர்பெஜான், குர்டிஸ்தான் ஜனநாயக இயக்கங்களும் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திற்கும் பிற்போக்காளர்களின் யதேச்சாதிகாரத்திற்குச் சாவுமணி அடித்து, சோவியத் யூனியனேடு உறவு வைத்துக்கொண்டு, ஜனநாயகப் பாதையில் செல்ல விரும்பினுர்கள்.

# 6. ஏகாதிபத்தியச் சூழ்ச்சி பலிக்கவில்லை

அஜர்பைஜான் தேசீய ஜனநாயக இயக்கத்தைப் பலாத்காரமாக நசுக்க முயற்சித்தது படுதோல்வியில் முடிந்தது. சில நாட்களுக்குள் சர்க்கார்படைகள் அஜர்பெஜான் தேசீய சர்க்காரிடம் சரணுகதி யடைந்தன.

சோவியத் எதிரியும், ஜனநாயக விரோதியுமான இப்ராஹிம் ஹகீமி சோவியத் யூனியனேடு சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர். "ஒரு கட்டத்தில் உடன்பாடு ஏற்படும்போலிருந்தது" என்று லண்டனிலுள்ள "டைம்ஸ்" பத்திரிகையே கூறிற்று. ஆம், சிக்கலான பிரச்னைகளே கிடையாதே! உடன்பாடு ஏற்படத்தானே வேண்டும்!

ஆனல், சுமுகமாக உடன்பாடு ஏற்படுவதைக் கண்டு பிற்போக்கு சக்திகள் பயந்தன. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களும், சுதேச பிற்போக்காளர்களும் திரைமறைவில் இரு நாடுகளுக்கு மிடையே உடன்பாடு ஏற்படாவண்ணம் சூழ்ச்சி செய்யத் துவங்கினுர்கள். எனவே, ஏகாதிபத்தியங்களின் ஏஜண்டான ஹகீமி சர்க்கார் டிசம்பர் மாதம் 1-ந் தேதிக்குப் பிறகு சமரசப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த மறுத்தது. ஏன்?

முதலாவதாக, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் சோவியத் யூனியனுக்கும், பாரசீகத்திற்கும் இடையே நேச உறவு ஏற்படுவதை விரும்பவில்லை. எனவே, அவர்களின் ஏஜண்டான ஹகீமி சர்க்கார் ஏகாதிபத்தியங்களின் "உத்தரவுப்படி" சமரசப்

பேச்சு வார்த்தைகளைத் திடீரென நிறுத்திற்று. மேலும், உடன்பாடு ஏற்பட்டு ஜனநாயக இயக்கம் பாரசீகத்தில் வெற்றி பெற்றால், சுதேச நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் யதேச்சாதிகார ஆட்சியின் மூலமாகப் பொதுஜனங்களைச் சுரண்டி வருவதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

இரண்டாவதாக, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் இருநாடுகளுக்கு மிடையே உடன்பாடு ஏற்படுவதையும், பாரசீகத்திலேயே ஜனநாயகம் தழைத்தோங்குவதையும் விரும்பாததற்குக் காரணங்கள் பின்வருமாறு :

1. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பாரசீகத்திலிருந்து கோடிக்கணக்கான டன் எண்ணையை வருடா வருடம் சுரண்டி வருகின்றன. பாரசீகத்தில் ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால், இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

2. பாரசீகத்தில் பிற்போக்காளர்கள் அதிகாரத்திலிருந்தால் தான் தங்களுக்குச் சொந்தமான எண்ணைக் கிணறுகளில் குறைந்த கூலிக்கு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி அதிக லாபம் திரட்ட முடியும். ஜனநாயக சர்க்கார் ஜீவாதாரச் சம்பளம் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கும். உள்நாட்டில் பிற்போக்காளர்கள் பாரசீக மக்களைச் சுரண்டிக் கொழுக்கும்படி செய்வது. இதன் மூலமாக தொழிலாளர், விவசாயிகள் போராட்டத்திற்கு விதை தூவி, போராட்டம் நடக்கும் பொழுது, சுதேச பிற்போக்காளர்கள் தங்களுடைய உதவியை நாடும்படி செய்து, அச்சமயத்தில் மேலும் பல சலுகைகளைப் பாரசீக பிறபோக்கு சர்க்காரிடமிருந்து பெறுவது. ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால், இந்த ஏகாதிபத்தியச் சூழ்ச்சிக்கு இடமே கிடையாது,

4. பாரசீகத்தில் பிற்போக்கு சர்க்கார் இருந்தால்தான், 1921-ம் வருடத்திய சோவியத்—பாரசீக ஒப்பந்தத்தை மீறி வட பாரசீகத்தில் ஏகாதிபத்தியங்கள் எண்ணை எடுக்கும் உரிமையைப் பெறமுடியும்.

5. சோவியத் யூனியனின் கிழக்கு எல்லையிலுள்ள ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, போலந்து, செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளில் உண்மையான ஜனநாயக சர்க்கார்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனிமேல் ஹிட்லரைப்போல் சோவியத் யூனியனைத் தாக்க அந்த நாடுகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது. எனவே, சோவியத் யூனியனில் எல்லையில் ஆயிரம் மைல் பரந்து கிடக்கும் பாரசீகத்தைத்தான் சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு முக்கியமான ராணுவ தளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். பாரசீக சோவியத் உடன்பாடு ஏற்பட்டால், பாரசீகத்தில்

ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால் இந்த நாசகார வேலைக்கு இட மேது ?

6. பாரசீகத்தில் உண்மையான சுதந்திர ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால், அதற்கு அடுத்தாற்போலுள்ள இராக், பாலஸ்தீனம், டிரான்ஸ் ஜோர்டான், ஸாவுதி அரேபியா, இந்தியா முதலிய அடிமை நாடுகளும், தங்களை அடிமைப்படுத்திவரும் பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களையும், அவைகளின் ஏஜண்டுகளான சுதேச பிற்போக்காளர்களையும் எதிர்த்துப் போராடுவார்கள். அதாவது புதிய பாரசீகம், அராபிய நாடுகளிலும் சுதந்திர, ஜனநாயக இயக்கத்தைத் தட்டி எழுப்பி, ஏகாதிபத்தியச் சுரண்டலைக் குழிவெட்டிப் புதைக்கும். உதாரணமாக, இரானிலிருந்து 1,70,00,000 டன், பாரசீக வளைகுடாவிலிருந்து 20 லட்சம் டன் இராக்கிலிருந்து, 60 லட்சம் டன், எகிப்திலிருந்து 13 லட்சம் டன் —ஸாவுதி அரேபியா முதலிய நாடுகளிலிருந்து வருடா வருடம் மேற்கூறியவாறு கோடிக்கணக்கான எண்ணை சுரண்டிக்கொண்டு போவதை ஜனநாயக சர்க்கார் தடுப்பார்கள்.

"ஒரு சொட்டு மண்ணெண்ணை ஒரு சொட்டு ரத்தத்திற்குச் சமம்" என்று கிளமன்ஸி சொல்கிறார்.

7. மத்தியதரைக் கடல் ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பு. ஏகாதிபத்திய கடல், ஆகாயப் போக்குவரத்துகள் மத்தியதரைக் கடல் பிரதேசங்களின் மூலமாகத்தான் செல்கின்றன. இவைகளில் சுதந்திர ஜனநாயக, சர்க்கார் ஏற்பட்டால், ஏகாதிபத்தியப் போக்குவரத்துகளுக்கே அபாயம் ஏற்படும்.

8. மேலும் சகல அடிமை நாடுகளுக்கும் பூரண சுதந்திரம் கொடு என்று ஏகாதிபத்தியங்களை நிர்ப்பந்தித்து வரும் சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு பாரசீகப் பிரச்னையை ஒரு கருவியாக உபயோகப்படுத்திக்கொண்டார்கள், இத்துடன், இந்தோனேஷியா, இந்தோ சைனா, இந்தியா, பாலஸ்தீனம், முதலிய நாடுகளிலுள்ள மக்களை பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் கொன்று குவித்து வருவதை உலக மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். இவர்களுடைய கவனத்தைப் பாரசீகத்தின் மீது திருப்ப, அஜர்பெஜான் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொண்டார்கள்......

பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்களைத் தூண்டிவிட்டு, இந்தப் பிரச்னையைப் பாதுகாப்பு சபைக்குக் கொண்டுவந்ததன் காரணம் இதைத் தவிர வேறு ஏதேனும் உண்டா? சிந்தித்துப் பாருங்கள் !

இந்தோனேஷியா, கிரீஸ் முதலிய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு ஜனநாயகவாதிகளை நசுக்கிவரும் பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியம் பர்மா, மலேயா, இந்தியா, பாலஸ்தீனம் முதலிய நாடுகளில் சுதந்திர இயக்கத்தை நசுக்கிவரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சைனுவிலும், ஜப்பானிலும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு, பிற்போக்காளர்களை ஆதரித்து, ஜனநாயகவாதிகளை நசுக்கிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் "சோவியத் யூனியன் பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறது" என்று ஓலமிட்டதன் அந்தரங்க நோக்கம் மேற்கூறிய காரணங்களைத்தவிர வேறு இருக்கமுடியுமா? திடீரென பாரசீகத்தின் மீது "சுதந்திர"க் காதல் ஏன் ஏற்பட்டது? சிந்தித்துப் பாருங்கள்! கலாச்சார சுதந்திரத்தைக் கேட்ட அஜர்பெஜான் மக்கள் உலக சமாதானத்திற்கு அபாயம் விளைவிக்கிருர்களா? அல்லது பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் ஆதரிக்கும் பாஸிஸ்டு பிராங்கோ ஸ்பெயினும், பாசிஸ்டு அர்ஜெண்டைனுவும், போர்த்துகலும் உலக சமாதானத்திற்கு அபாயம் விளைவித்து வருகின்றனவா?...

பாரசீகத்திலுள்ள பொதுமக்களோ, அல்லது ஜனநாயகக் கட்சிகளோ சோவியத் யூனியனை எதிர்த்து ஒருவார்த்தைகூடப் பேசவில்லை.

1946-ம் வருடம், ஜனவரி மாதத்தில், பாரசீக சட்ட சபையிலுள்ள அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஹகீமி சர்க்காரின் போக்கைப் பகிரங்கமாகக் கண்டித்தனர்.

1945-ம் வருடம், டிசம்பர் மாதத்தில், பிரதம மந்திரி பதவியை ஏற்குமுன்பு கவாம் ஸுல்தானே, லண்டனிலுள்ள "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் நிருபரிடம் கலகத்திற்கு யார் காரணமென்பதை எடுத்துரைத்தார்.

"1941-ம் வருடத்தில் ரேஸாஷாவின் சர்வாதிகார ஆட்சி ஒழிந்த பின்பு, பொதுஜனங்கள் சர்க்காரிடமிருந்து பல சமூக சீர்திருத்தங்களையும், ஜனநாயக உரிமைகளையும் எதிர்பார்த்தனர். ஆனால் பெரிதும் ஏமாற்ற மடைந்தனர். எனவே, பொதுமக்களிடையே அதிருப்தி குமுறிக்கொண்டிருந்தது. முக்கியமாக அஜர்பெஜானியர்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பெற துடிதுடித்தார்கள். ஆகவே, பாரசீக சர்க்காரின் பிற்போக்குக் கொள்கைதான் அஜர்பெஜான் சம்பவத்திற்கு மூலகாரணம்" என்று கூறினர்.

எனவே, சோவியத் எதிர்ப்புக்குத் தனதுதாயகத்தில் ஆதரவு கிடைக்காததால், "பாரசீகப் பிரச்னையை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபைக்குச் சமர்ப்பிப்பதில் வெற்றிபெற்றுவிட்டதால் எனது கடமை முடிந்துவிட்டது" என்று ஒரு அறிக்கையை வெளியிட்டு, பிரதம மந்திரி இப்ராஹிம் ஹகீமி தனது பதவியை ராஜிஞமா செய்தான். பாரசீகப் பிரச்சினையைப் பாதுகாப்பு சபைக்

குச் சமர்ப்பிப்பதன் மூலமாக சோவியத் எதிர்ப்பு வேலையை ஏகாதிபத்தியங்களிடம் ஒப்படைத்தான்!

பாதுகாப்பு சபைக்கு பாரசீகத்திலிருந்து வந்திருந்த தூது கோஷ்டியில் ஒருவரான நஸ்ருல்லா எண்டேஸாம் " பிரதம மந்திரி (ஹகிமி) ராஜினமா செய்ததின் அர்த்தம், சோவியத் யூனியனேடு நேரடியாக சமரசப் பேச்சுவார்த்தைகள் இனிமேல் ஆரம்பமாகும்" என்று லண்டனில் கூறினர். இதிலிருந்து ஹகிமிதான் சோவியத் பாரசீக உடன்பாட்டிற்கு குறுக்கே நின்ருன் என்பது தெளிவாகிறது.

பாரசீகப் பிரச்சினையைப் பாதுகாப்பு சபைக்குக் கொண்டு வர எந்தவிதமான உரிமையும் கிடையாது. எனவே, சோவியத் யூனியனின் பிரதிநிதி எம். விஷின்ஸ்கி, "ஐக்கியநாடுகளின் சட்ட திட்டப்படி, தகராறில் ஈடுபட்டிருக்கும் இருநாடுகளும் தங்களுக்குள்ளே முதலில் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும். இதன் மூலமாகத் தகராறைத் தீர்க்க முடியாமல் போனல்தான் பாதுகாப்புசபை தலையிடவேண்டும்.............இரு நாடுகளுக்குமிடையே இன்னும் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதால், பாதுகாப்பு சபை இந்தப் பிரச்னைபற்றி சர்ச்சை செய்யக்கூடாது" என்று பாதுகாப்பு சபையில் பேசினர். ஏகாதிபத்தியங்கள் திக்குமுக்காடின. "இரு தேசங்களும் முதலில் தங்களுக்குள்ளேயே நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தட்டும்" என்று பாதுகாப்பு சபை ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று. இரண்டாவது கட்டத்தில் ஏகாதிபத்தியங்கள் படு தோல்வியடைந்தன.

புதிய பாரசீகப் பிரதம மந்திரி கவாம் ஸுல்தானே, திரும்பவும் சோவியத் யூனியனேடு பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருந்தார். "சோவியத் யூனியனேடு நேச உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறேம்" என்று அறிக்கைகளில் குறிப்பிட்டார். அதைக் கண்டு ஏகாதிபத்தியங்களின் அடி வயிறு கலங்கிற்று. நேரடியான பேச்சுவார்த்தைகளைத் தடுத்து, நேச உறவு ஏற்படுவதை முறியடிக்க பல புதிய உபாயங்களைத் தேடினர்கள். பாரசீக சர்க்காரை கேட்காமல், அமெரிக்காவிலுள்ள பாரசீக ஸ்தானிகர் டாக்டர் ஹுஸ்ஸேன் ஆலா சோவியத் யூனியனைப்பற்றி பல கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விட்டார். "தேசபக்தி அத்துமீறிப் போனதால் தான் அப்படிப் பேசினர்" என்று பிரின்ஸ் பிரோஷ் கூறினர்.

"சோவியத் யூனியன் அன்னிய நாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு, சிறிய நாடுகளை அடிமைப்படுத்தி வருகிறது. உதாரணமாக, செம்படைகள் பாரசீகத்தில் ஏன் இருக்

கின்றன.——உலகசமாதானத்திற்கு உலை வைக்கும் நெருக்கடி பாரசீகத்தில் ஏற்பட்டிருக்கிறது.—" என்பன போன்ற பொய்ப் பிரசாரத்தில் ஏகாதிபத்தியங்கள் தீவிரமாக ஈடுபட்டன.

சோவியத் யூனியன் எப்பொழுதாவது ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டிருக்கிறதா என்ற உண்மையைச் சரித்திரம் நிரூபித்துக்காட்டும். பாரசீகம், சைனா, மங்கோலியா முதலிய நாடுகளுக்கு உதவிபுரிந்திருக்கிறதே தவிர, பாதகம் செய்தது கிடையாது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டதும் கிடையாது.

உதாரணமாக பாரசீகத்தைத்தான் எடுத்துக்கொள்வோம். பாரசீகத்தில் ஜனநாயக சக்திகள் வளர்ந்து, வலிமை பெற்று வருவதைக் கண்டு நடு நடுங்கிய பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பாரசீகத்தின் உள்நாட்டு விஷயத்தில் தலையிடத் துடி துடித்தன. சைனாவிலும், ஜப்பானிலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு, சுதந்திர ஜனநாயக சக்திகளை நசுக்கி வருவதுபோல், இந்தோனேஷியா இந்தோ சைனா சுதந்திர இயக்கங்களை நசுக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரஞ்சு, டச்சு ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவளித்து வருவதுபோல் இந்தியா, பர்மா, மலேயா, பானஸ்தீனம் முதலிய நாடுகளில் சுதந்திர இயக்கத்தைப் பிளவுபடுத்தி, சுதந்திரப் பிரியர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொன்று குவித்து வருவதுபோல், பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்திலும் தலையிடவேண்டுமென்று 1945-ம் வருடம் டிசம்பர் மாதம் மாஸ்கோவில் நடந்த மூன்று வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாட்டில் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதாவது, பிரிட்டன், அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முக்கூட்டு கமிஷன் நியமிப்பது; மத்திய சர்க்காருக்கும், மகாணங்களுக்கும் இடையே உள்ள உறவிலும், சிறுபான்மையோரின் பாஷைப் பிரச்னையிலும், தேர்தல் சட்டதிட்டத்திலும், சர்க்கார் சட்டதிட்டத்திலும் இந்தக் கமிஷன் தலையிடவேண்டுமென்று பிரரேபித்தனர்.

பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்தில்—அதாவது, அதன் சுதந்திரத்தில்—தலையிட மறுத்தது சோவியத் யூனியன். சின்னஞ்சிறிய நாடாக இருந்தாலும் சரி, பெரிய வல்லரசாக இருந்தாலும் சரி அவைகளின் உள்நாட்டு விவகார்த்தில் சோவியத் யூனியன் இதுவரையிலும் தலையிட்டதே கிடையாது. சகல நாடுகளையும் சரி சமத்துவமாகப் பாவித்து வந்திருக்கிறது. ஆனால், பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் சிறிய நாடுகளின் சுதந்திரத்தில் தலையிடுவது என்ற குட்டையில் ஊறித்தடித்தவை. எனவே பாரசீ

கத்தில் சோவியத் யூனியன் செய்த ஹிமாலயக் குற்றமென்ன? பொதுஜனங்களைக் கொன்று குவிக்க மறுத்தது! ஏகாதிபத்தியக் கும்பலில் சோவியத் யூனியன் சேர மறுத்தது. ஏகாதிபத்தியங் களை இந்த விஷயம்தான் ஆத்திரமூட்டிற்று!

ஆங்கிலோ—பாரசீக—சோவியத் ஒப்பந்தப்படி, செம்படை கள் மார்ச் மாதம் 2-ந் தேதி பாரசீகத்திலிருந்து வாபஸ் வாங்க வேண்டும். ஆனால், ஏன் வெளியேறவில்லை? இந்தக் கேள்விக் குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. பார சீகத்திலுள்ள பிற்போக்காளர்களும், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதி பத்தியங்களும் என்ன செய்து வருகிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், செம்படைகள் ஏன் வாபஸ் வாங்க வில்லை என்பது தெளிவாகத் தெரியும்.

கிரீஸ், இந்தோனேஷியா, (இங்கு சுமார் 54,000 ஜப்பானிய கைதிகளை சுதந்திர இயக்கத்தை நசுக்க உபயோகித்து வருகிறார் கள்) எகிப்து, இராக், ஸிரியா, லெபனான், டிரான்ஸ் ஜோர்டான், பாலஸ்தீனம், அஸோர் தீவுகள், சைனா, ஐஸ்லாந்து, பசுபிக் சமுத் திரத்திலுள்ள தீவுகள் முதலிய நாடுகளில் பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் இருக்கின்றன. எதற்காக? சுதந்திர ஜனநாயக இயக் கங்களை நசுக்குவதற்காக!

ஆனால் செம்படைகள் பாரசீகத்தில் எதற்காக இருந்தன? சோவியத் யூனியனுக்கு எதிரிடையாக பாரசீகத்திலுள்ள பிற் போக்காளர்களும், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களும் சூழ்ச்சி செய்து வந்தன.

உதாரணமாக, பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்கள் கடந்த இருபத்தைந்து வருடங்களாக, சோவியத் எதிர்ப்புக் கொள் கையைப் பின்பற்றி வந்தார்கள். (1) இச்சமயத்தில் புது பிரதம மந்திரியாக இருந்த இப்ராஹீம் ஹகீமிதான் 1919-ம் வருடத்தில் சோவியத் பிரதேசத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தார். (2) 1921-ம் வருடத்திய பாரசீக–சோவியத் ஒப்பந்தப்படி, பாரசீகத் தின் வடபாகத்தில் அன்னிய ஏகாதிபத்தியங்களுக்கு எண்ணெய்க் கிணறுகளைக் கொடுக்கக்கூடாது. ஆனால் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மை உலர்வதற்குள், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு எண்ணெய்க் கிணறுகளைக் கொடுத்து வந்தது. (3) பாரசீகத்தில் சோவியத் யூனியனை எதிர்க்கும் வேலை யில் ஸையத் ஸியாவுதீன் போன்ற ஏகாதிபத்தியங்களின் கை யாட்கள் ஈடுபட்டிருந்தனர்.

ஏகாதிபத்தியங்களும் சோவியத் எதிர்ப்பு வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தன. உதாரணமாக, (1) பாரசீகத்தி

லிருந்து பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புகள் வாபஸ் வாங்கப்பட்டது உண்மையே. ஆனல் 1945-ம் வருடம் டிசம்பர் மாதம் 25-ந் தேதியன்று, "ராபார்" என்ற ஜனநாயகக் கட்சியின் பத்திரிகை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலுள்ள பார்ஸ் மாகாணத்தில் பிரசுரமாகும் "ஸோளூஷ்" என்ற பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த செய்தியைப் பிரசுரித்தது. அதாவது, "இந்த மாகாணம் இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானம்போல் இருக்கிறது, சுதந்திர தேசமல்ல, முறையாக சுதேசிகளுக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆயுதங்களையும், ராணுவப் பயிற்சியையும் கொடுத்து வருகிறது........." என்று அதன் ஆசிரியர் எழுதினர்.

அமெரிக்காவிலுள்ள "நியூயார்க் சோவியத் ரஷ்யா டுடே" என்ற பத்திரிகையில், முன்பு சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்த ஷாஹானி என்பவர் மார்ச் மாதத்தில் ஒரு கட்டுரை எழுதினர். அதில் கடந்த இரண்டு வருடங்களாக பாரசீகத்தின் தென்பகுதிக்கு பிரிட்டிஷ் ஆயுதங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன என்றும், இங்குள்ள மலைஜாதியினரின் ஒரு ஐக்கிய முன்னணி நிறுவப்பட்டிருக்கிறதென்றும், இவர்களுடைய படைகளுக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நவீன ராணுவப் பயிற்சி அளித்திருக்கிறதென்றும், "சோவியத் எதிர்ப்பு வேலையில் பயிற்சி அளிக்கப்பட்ட ஏராளமான முஸ்லிம் பாதிரிகளை இராக்கிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொண்டுவந்திருக்கிறது. இவர்களுக்கு மாதச்சம்பளம் 3,000 ரயல். பிரிட்டிஷ் சோவியத் துருப்புகள் வாபஸ் வாங்கினபிறகு, ஜாவாவைப்போல், இங்கும் உள்நாட்டு சண்டையைக் கிளப்புவதுதான் அந்தரங்க நோக்கம்" என்று அந்தக் கட்டுரையில் எழுதினர்.

2. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் மத்தியதரைக் கடலில் 10 லட்சம் துருப்புகளை வைத்திருந்தன.

"ஏகனாமிஸ்ட்" என்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பத்திரிகை, "சமீபகாலத்தில் மத்தியதரைக் கடல் பிரதேசத்தில், அபரிமிதமாக பிரிட்டிஷ் படைகள் வந்திருக்கின்றன. சுமார் ஐந்து லட்சம் சிப்பாய்கள் வந்திருக்கிருர்கள்" என்று எழுதிற்று.

இவ்வாறு பாரசீகத்திலும், அதற்கு அடுத்தாற்போலுள்ள நாடுகளிலும் சோவியத் எதிர்ப்பு சக்திகள் தீவிரமாக வேலைசெய்து வந்தன. எனவே, பாரசீகம் சோவியத் எதிர்ப்புத் தளமாகத் திகழ்ந்ததால், 1921-ம் வருடத்திய சோவியத்—பாரசீக ஒப்பந்தப்படி செம்படைகளை வைத்திருந்தது. அதாவது தற்காப்புக்காகத்தான். பாரசீகத்தை நசுக்குவதற்காக அல்ல.

பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் "சோவியத் யூனியன் படைகளை வைத்துக்கொண்டு, பயமுறுத்தி சமரசப் பேச்சு

வார்த்தைகளை நடத்திவருகிறது," என்று பாரசீகத்திற்குப் பரிந்து பேசுகிறார்கள்! "நாங்கள் படைகளை வைத்துக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டோம்" என்று பெவின் பேசினார். ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள்!

டிரான்ஸ்ஜோர்டானிலும், எகிப்திலும், இந்தியாவிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், படைகளை அந்தந்த நாடுகளில் வைத்துக் கொண்டு தானே சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது? அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஐஸ்லாந்தில் படைகளை வைத்துக் கொண்டுதானே சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது? சில நாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகுகூட, படைகளை வாபஸ் வாங்கியிருக்கிறதா? (இப்பொழுது பாரசீகத்திற்கும் சோவியத் யூனியனுக்கும் உடன்பாடு ஏற்பட்டபிறகு, செம்படைகள் அனைத்தும் வாபஸ் வாங்கிவிட்டன) சோவியத்—பாரசீக ஒப்பந்தத்தின் ஷரத்துக்களையும், பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ஒப்பந்தங்களின் ஷரத்துக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும், "சுதந்திரம்" கொடுத்த பின்பும், ஏகாதிபத்யப் படைகள் டிரான்ஸ்ஜோர்டான், இராக், பிலிப்பைன் முதலிய நாடுகளில் இருக்கின்றன. ஏகாதிபத்தியங்களின் பிரதிநிதிகள்தான் உண்மையான எஜமானர்கள்.........எனவே, சோவியத் யூனியன் பாரசீகத்தை விழுங்கவுமில்லை, உலக சமாதானத்திறகு அபாயம் விளைவிக்கவுமில்லை. இந்தப் புரளியைக் கிளப்பிவிட்டு, பாரசீக சோவியத் உறவை முறிக்க முயற்சி செய்தார்கள்.

எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக ஒத்திகையை நடத்தினார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்! மார்ச்சு மாதம் 1-ந்தேதியன்று வடகிழக்கு பாரசீகத்திலிருந்து செம்படைகளை வாபஸ் வாங்கிவிட்டதாகவும், நிலைமையை இன்னும் தெளிவாக விவரிப்பது வரையிலும், வடமேற்கு பாரசீகத்தில் மாத்திரம் செம்படைகள் இருக்குமென்றும் சோவியத் யூனியன் அறிவித்தது.

ஏகாதிபத்திய பிரசார யந்திரம் "சோவியத் யூனியன் பாரசீகம் முழுவதையும் கபளீகரம் செய்ய ஆயத்தம் செய்கிறது" என்ற புரளியைக் கிளப்பிவிட்டது.

மார்ச் மாதம் 12-ந்தேதியன்று "சோவியத் படைகள் தெஹரானை நோக்கிச் செல்கின்றன" என்ற திடுக்கிடும் செய்தியை அமெரிக்க சர்க்கார் வெளியிட்டது. அந்தப் பொய்ச் செய்தியை உடனே பாரசீகப் பிரதம மந்திரி "இவ்வாறு சோவியத் படைகள் நடமாடுவதுபற்றி எனக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை" என்று அறிக்கைவிட்டார்.

எனவே, மார்ச் மாதம் 15–ந்தேதி "ரஷ்யத் துருப்புகள் தெஹரானுக்கு 23 மைல் தூரத்தில் வந்துவிட்டன என்று பாரசீக யுத்த மந்திரி என்னிடம் கூறினர்" என்ற செய்தியை அமெரிக்க அசோஷியேடட் பிரஸ் செய்தி ஸ்தாபனம் உலக முழுதும் பரப்பிற்று.

மார்ச் மாதம் 16-ந்தேதியன்று, பாரசீக யுத்த மந்திரி, "இவ்வாறு ஒரு வார்த்தைகூட நான் பேசவில்லை" என்று அண்டப் புளுகை உடைத்தெறிந்தார். அதே தினத்தன்று, "பாரசீக சர்க்கார் இந்தப் பிரச்னையைப் பாதுகாப்பு ஸபைக்குக் கொண்டுவரவில்லையென்ருல், அமெரிக்க சர்க்கார் இதைப்பற்றி விவாதிக்கும்" என்று அமெரிக்க வட்டாரங்கள் பேசிக்கொண்டன!

இறுதியில், அமெரிக்காவிலுள்ள பாரசீக சர்க்காரின் பிரதிநிதி டாக்டர் ஹுஸ்ஸேன் ஆலா, ஐக்கிய நாடுகளின் சபையின் பொதுக்காரியதரிசிக்கு ஒரு கடிதமெழுதினன். இதை, "எங்களைக் கேட்காமலே எழுதப்பட்ட கடிதம்" என்று பாரசீகப் பிரதமர் கூறினர்.

பாதுகாப்பு சபையில், சோவியத் யூனியனின் பிரதிநிதி எம். கிராமிகோ, "இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன. ஏப்ரல் மாதம் 10-ந் தேதி வரையிலும் இந்தப் பிரச்னையைப்பற்றி பேசுவதை ஒத்திப் போடுங்கள். இதற்குள் உடன்பாடு ஏற்படவில்லையென்ருல், பாதுகாப்புச் சபை இந்த விஷயம்பற்றி சர்ச்சை செய்யலாம்" என்று கோரினர். பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் இந்தக் கோரிக்கையை எதிர்த்தன.

பாதுகாப்புச் சபையின் கூட்டம் நடந்துகொண்டிருக்கும் பொழுது ஏப்ரல் மாதம் 4–ந்தேதியன்று பாரசீகமும் சோவியத் யூனியனும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு விட்டதாகவும், அதன்படி மார்ச் மாதம் 24-ந்தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்களுக்குள் சகல துருப்புகளையும் வாபஸ் வாங்குமென்றும் இரு நாடுகளும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கை கூறிற்று. ஆனல் பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பாதுகாப்புச் சபையிலிருந்து இவ்விஷயத்தை ரத்து செய்யவில்லை. எனவே, சோவியத் பிரதிநிதி பாதுகாப்புச் சபையிலிருந்து இந்தப் பிரச்னைப்பற்றி விவாதிக்கும்பொழுது வெளியேறினர்.

ஏப்ரல் மாதம் 6-ந்தேதி பாரசீகத்திற்கும், சோவியத் யூனியனுக்கும் நேச உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டதாக இரு நாடுகளும் கையெழுத்திட்டு ஒரு அறிக்கை விட்டன......அதற்குப் பின்பு கூட பாரசீகப் பிற்போக்காளர்கள் இன்னும் ஓலமிடுகிருர்கள்.

அமெரிக்காவிலுள்ள பாரசீக ஸ்தானிகர் டாக்டர் ஹுஸ்ஸேன் ஆலா இன்னும் சோவியத் எதிர்ப்புப் பிரசாரத்தை பாரசீகத்தின் சார்பில் தீவிரமாக நடத்திவருகிறார். "நாங்கள் சொல்லாமல் இனிமேல் உங்கள் விருப்பம்போல் பாரசீகத்தின் சார்பாக ஒன்றுமே பேசக்கூடாது" என்று பாரசீகப் பிரதமர் கவாம் ஸுல்தானே ஆலாவுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

பாரசீகம் தங்களுடைய புகாரைப் பாதுகாப்புச் சபையிலிருந்து வாபஸ் வாங்கிய பிறகுகூட பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பாரசீகப் பிரச்னையைப் பாதுகாப்புச் சபையிலிருந்து ரத்து செய்ய முடியாது என்று வீராப்புப் பேசுகின்றன. இதன் அர்த்தம் என்ன? பாரசீகத்திற்காக நீலிக்கண்ணீர் வடித்தது, பாரசீகத்தின் நலனுக்காக அல்ல! பாதுகாப்புச் சபையைத் தங்களுடைய சுயநலத்துக்காக, சோவியத் எதிர்ப்புப் பிரசாரத்திற்காக உபயோகப்படுத்திக் கொண்டார்கள் என்பது இப்பொழுது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

ஏகாதிபத்தியங்களின் பொய்ப் பிரசாரத்தை நம்பி, அதற்கு வால் பிடித்தவர்கள் இப்பொழுதாவது ஏகாதிபத்திய பிரசார யந்திரத்தின் சூழ்ச்சியை உணர்ந்து இனிமேல் அதன் மாய வலையில் சிக்காமலிருக்கட்டும்!

# 7. ஜனநாயகப் பாதையில் செல்கிறது

*[சோவியத் பாரசீக ஒப்பந்தம் — அஜர்பெஜானுக்கு வெற்றி—புதிய பாரசீகம் மலர்கிறது.]*

## சோவியத் பாரசீக ஒப்பந்தம்

"சோவியத் யூனியனும், பாரசீகமும் சமரசப் பேச்சு வார்த்தைகளைத் தீவிரமாக நடத்திக்கொண்டிருந்தன. இப்பொழுது ஒப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. சோவியத் யூனியனின் வேண்டுகோள்படி பாதுகாப்பு சபை இந்தப் பிரச்சினையைப் பற்றிய விவாதத்தை ஒத்திப்போட்டிருந்தால், பாதுகாப்பு சபை விவாதிக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது" என்று சொல்கிறது ஏகாதிபத்தியச் செய்தி ஸ்தாபனமான "ராய்ட்டர்". வாஸ்தவம்தான்; ஆனால் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களும். பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்களும் சமாதானத்தையும், நேசநாடுகளுக் கிடையே ஒற்றுமையையும், பாரசீகத்தின் நலனை

யும் பாதுகாக்க விரும்பவில்லை. நேச நாடுகளுக்கிடையே பிள வையும், சோவியத் பாரசீக நேச உறவை முறிக்கவும், பார சீகத்தை அடிமைப் படுத்தவும் பெருமுயற்சி செய்தார்கள். ஆனால், படுதோல்வி யுற்றனர்!

பாரசீகத்தின் நலனா, அல்லது ஏகாதிபத்தியங்களின் நலனா— எதைப் பாதுகாப்பது என்ற பிரச்னை பாரசீகப் பிரதம மந்திரி முன்பு நின்றது. பிரதம மந்திரி கவாம் ஸுல்தானே பாரசீகத் தின் நலனைப் பாதுகாக்க முன்வந்தார். எனவே 1946-ம் வரு டம் ஏப்ரல் மாதம் 4-ந் தேதி சோவியத் யூனியனும் பாரசீகமும் நேச உடன்படிக்கை செய்து கொண்டன. இந்த உடன்பாடு, புதிய பாரசீகம்—சுதந்திர ஜனநாயக பாரசீகம்—மலர்வதற்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தப்படி,

1. மார்ச் மாதம் 24-ந் தேதியிலிருந்து ஆறு வாரங்களுக் குள் செஞ்சேனை பாரசீகத்திலிருந்து வாபஸ் வாங்கிவிடும் (இப் பொழுது சகல படைகளும் பாரசீகத்தைவிட்டு வெளியேறி விட்டன)

2. செம்படை வாபஸானவுடன் புதிய சட்ட சபைக்கு தேர் தல் நடக்கும். (இப்பொழுது சட்டசபை கலைக்கப்பட்டிருக் கிறது)

3. அஜர்பெஜானிலுள்ள மக்களின் விருப்பப்படி அஜர் பெஜானில் ஜனநாயகச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப் படும். அந்த மாகாணத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

4. பாரசீகமும் சோவியத் யூனியனும் ஒன்று சேர்ந்து, வட பாரசீகத்தில் ஒரு எண்ணெக் கம்பனியை அமைக்கும். சட்ட சபையின் அங்கீகாரத்தைப்பெற, இந்த ஒப்பந்தம் 7 மாதங்களுக் குள் சட்டசபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

சோவியத்—பாரசீக ஒப்பந்தத்தைப்பற்றி "ஹிந்துஸ்தான்" பத்திரிகையில் (19-5-46) ரோனுல்ட் ஆர்டிஞ்ச் பின்வருமாறு எழுதுகிறார்:

"இந்த ஒப்பந்தத்தை, பாரசீக மக்கள் கொட்டு முழக்கத் துடன் வரவேற்றார்கள் . . . . சிறிய, அபிவிருத்தி யடையாத நாட் டுக்கு, எந்தப் பெரிய தேசமும் இதுவரையிலும் இத்தகைய சலு கைகளைக் கொடுத்ததே கிடையாது. ஆங்கிலோ இரானிய எண் ணெக் கம்பெனியை ஒப்பிட்டுப் பாருங்கள்! பிரிட்டிஷ சர்க்காரின் ஆதிக்கத்திலுள்ள இந்தக் கம்பெனியில் பாரசீக மக்களுக்கு இம்மி யளவேனும் உரிமை கிடையாது. கொள்ளை லாபத்திலிருந்து, ஒரு

சிறு பகுதி பாரசீக சர்க்காருக்குக் கொடுக்கப்படுகிறது, அவ்வளவுதான். ஏனைய அடிமை நாட்டுத் தொழிலாளர்களைச் சுரண்டி வருவதுபோல் திறமையாக பாரசீகத் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறுர்கள். தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையையும், சுகாதார வசதியையும் எழுதவே கைகூசுகிறது. தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சட்டமே கிடையாது. மிகமிகக் குறைந்த கூலி. இதை, சோவியத் ஒப்பந்தத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நியாயமான சம்பளம், நியாயமான ஜீவனம், சுகாதார வசதிகள், தொழிற்சங்க அங்கீகாரம் முதலியன தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும்.

"வட பாரசீகத்தில் எண்ணைக் கம்பெனி ஆரம்பமானல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். நேரடியாகவும், மறைமுகமாகவும் உற்பத்தி பெருகும், தேசத்தின் பொருளாதாரம் அபிவிருத்தியடையும்,... இதுமட்டுமல்ல, இந்தச் சிறந்த உதாரணம், தென்பகுதியிலுள்ள பிரிட்டிஷ் முதலாளிகளின் கொடிய சுரண்டுதலுக்குச் சாவுமணி யடிக்கும் என்பது திண்ணம்".

இந்த எண்ணைக் கம்பெனியை 50 வருடங்கள் வரையிலும் இரு நாடுகளும் ஒன்ருகச் சேர்ந்து நடத்துவார்கள். பின்பு, இந்த கம்பெனிக்குச் சொந்தமான சகல பொருள்களும் பாரசீக சர்க்காருக்கே சொந்தம். முதல் 25 வருட காலத்தில் இந்தக் கம்பெனியின் மூலதனத்தில் சோவியத் யூனியன் பங்கு 51 சதவிகிதம். பாரசீகத்தின் பங்கு 49 சதவிகிதம். பின்பு இரண்டாவது 25 வருட காலத்தில் இரு நாடுகளின் பங்கு 50, 50 சதவிகிதம். இந்த 50 வருடகாலத்தில், பாரசீக சர்க்காருக்கும், பாரசீக மக்களுக்கும் தேவையான எண்ணை, மலிவான விலைக்கு விற்கப்படும். பாரசீக தொழிலாளர்களுக்கு தொழிற் கல்வி அளிக்கப்படும். இத்துடன் நியாயமான சம்பளம், தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை வீட்டு வசதி, சுகாதார வசதி முதலியன கொடுத்து தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும்.

இந்த எண்ணைக் கம்பெனிக்குத் தேவையான நிலக்கரி இரும்பு முதலியன பாரசீகத்திலேயே தோண்டி எடுக்கப்படும். இதற்கு வேண்டிய புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். யந்திரத் தொழில் அபிவிருத்தியடைவதோடு, விவசாயம் ரஸ்தாக்கள் கால்வாய்கள் முதலியனவும் அபிவிருத்தியடையும். எனவே, சுபீக்ஷ பாரசீகத்தை உருவாக்குவதற்கு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை, ஆங்கிலோ இரானிய ஆயில் கம்பெனியின் சுரண்டுதலோடு ஒப்பிட்டுப் பாருங்கள்!

இந்த ஒப்பந்தத்தைக் கண்டு பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் அடிவயிறு கலங்குகிறது. ஏனெனில், பாரசீக மக்களின் நல உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட இந்த எண்ணை கம்பெனி, சுரண்டுதலை அடிப்படையாகக் கொண்ட பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் எண்ணைக் கம்பனிகளின் சுரண்டுதலுக்குச் சாவு மணி அடிக்கும் என்பது திண்ணம்.

இரண்டாவதாக, வடபாரசீகத்திலுள்ள எண்ணைக் கிணறுகளை ஏகாதிபத்தியங்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். 1921ம் வருடத்திய சோவியத் பாரசீக ஒப்பந்தத்தை மீறி, பாரசீக பிற்போக்காளர்கள் பன்முறை அந்தப் பிரதேசத்திலுள்ள எண்ணைக்கிணறுகளை ஏகாதிபத்தியங்களுக்குக் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது, அந்த ஆசை நிராசையாகப் போய்விட்டது.

பாதுகாப்பு சபையில், பாரசீகத்திற்குப் பரிந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது பாரசீகத்திலுள்ள எண்ணைக் கிணறுகளை எல்லாம் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் ஒரு திட்டத்தை பாரசீகத்திலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் பாரசீக சர்க்காருக்குச் சமர்ப்பித்தார் என்று பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுப் பத்திரிகை "டெய்லி ஓர்க்கர்" (4-4-46) கூறுகிறது. ஏகாதிபத்தியங்களின் தில்லுமுல்லுத்தனங்கள் இப்பொழுது தூள்தூளாகப் போய்விட்டன.

இது நியாயமான ஒப்பந்தமா, அநியாயமான ஒப்பந்தமா என்று சிந்தித்துப் பாருங்கள்! ஏகாதிபத்தியங்கள் இப்பொழுது பல நாடுகளோடு ஒப்பந்தம் செய்துவருவதை ஒப்பிட்டுப் பாருங்கள் :

பாரசீகத்தில் புதிய சகாப்தம் பிறந்திருக்கிறது. சுதந்திர, சுபிட்ச பாரசீகத்தை நிர்மாணிக்க, சுரண்டுதலை அடியோடு ஒழிக்க சோவியத் யூனியனின் உறவு பேருதவி புரியும்.

## அஜர்பெஜானுக்கு வெற்றி

பாரசீகத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அஜர்பெஜான் பிரச்சினைதான் மூலகாரணம். அஜர்பெஜான் மக்கள் கலாச்சார சுதந்திரத்தைக் கோரினார்கள்; ஜனநாயக சட்ட திட்டங்களை வேண்டினார்கள். பாரசீகத்திலுள்ள ஒரு மூலையில் ஒரு சில லட்சம் மக்கள் இந்த ஜனநாயகப் பிரச்சினையை எழுப்பினார்கள் என்றாலும் இது வாஸ்தவத்தில் உலகப் பிரச்சினைதான். இந்தப் பிரச்சினை உலகத்தையே கவர்ந்தது. உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து போயிற்று; ஒன்று சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் உலகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் நசுக்கிவரும் ஏகாதிபத்திய முகாம்; மற்றொன்று சுதந்திரத்தையும், ஜனநாய

கத்தையும் உலக முழுதும் நிலைநாட்ட விரும்பும் முற்போக்கு சக்திகளின் முகாம். ஏகாதிபத்திய முகாமில் பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களும், அதன் கையாட்களான சுதேச பிற்போக்காளர்களும் கச்சையை வரிந்துகட்டிக்கொண்டு நின்றார்கள் முற்போக்கு முகாமில், சோவியத் யூனியனும், உலக முழுதுமுள்ள சுதந்திர ஜனநாயகவாதிகளும் பிற்போக்காளர்களுக்கு எதிரிடையாக அணிவகுத்து நின்றார்கள். இறுதியில் முற்போக்காளர்கள் வெற்றிபெற்றார்கள்; ஏகாதிபத்தியவாதிகள் மண்ணைக் கவ்வினார்கள். சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் விரும்பும் இந்தியாவின் வெற்றி என்று கூறினால் மிகையாகாது.

கலாச்சார சுதந்திரத்தைக் கோரிய அஜர்பெஜான் மக்களோடு சமாதானமுறையில் பேச்சுவார்த்தைகளை நடத்த மறுத்து பலாத்காரத்தில் இறங்கிற்று பாரசீக பிற்போக்காளர்கள் கும்பல். ஒன்றுபட்ட ஜனசக்தி அவர்களுடைய நாசகார வேலையை நிர்மூலம் செய்தது.

ஏகாதிபததியங்களின் ஏஜண்டுகள் பாரசீக அரசாங்கத்தின் அதிகார பீடத்திலிருந்து அகற்றப்பட்ட பின்பு, பாரசீகத்தின் நல உரிமைகளைப் பெரிதெனக் கருதும் கவாம் ஸுல்தானே போன்றவர்கள் மந்திரிகளானார்கள். எனவே, அஜர்பெஜான் மக்களோடு சமாதானரீதியில் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். சுமுகமாக உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது: அதாவது,

1. விவசாயம், வியாபாரம், தொழிற்சாலைகள், போக்குவரத்துக்கள், கல்வி, சுகாதாரம், போலீஸ், நீதிமன்றம், பொருளாதாரம் ஆகிய இலாகாக்களின் தலைவர்களை அஜர்பெஜானியர்களே தேர்ந்தெடுப்பார்கள்.

2. அஜர்பெஜான் மாகாண சபை, அந்த மாகாணத்தின் வைஸ்ராயின் பெயர்களை மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கும். மத்திய சர்க்கார் அதில் ஒருவரை நியமனம் செய்யும்.

3. அஜர்பெஜான் தேசிய ராணுவத்தைக் கலைக்கமாட்டார்கள். ஆனால், அது மத்திய சர்க்காரின் ராணுவ இலாக்காவின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும்.

4. அஜர்பெஜானிலிருந்து கிடைக்கும் சர்க்கார் வருமானத்தை முதலில் அஜர்பெஜானிலேயே செலவழிக்கப்படும். எஞ்சிய பணம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கப்படும்.

5. அஜர்பெஜானியர்கள் குர்டிஸ்தானியர்கள், ஆர்மேனியர்கள் முதலிய சகல தேசிய இனத்தினருக்கும் சரிசமத்துவ உரிமை அளிக்கப்படும். சகல தேசிய இனத்தினர் பாஷைகளையும் பள்ளிக்கூடங்களில் போதிக்கலாம்.

6. அஜர்பெஜானின் பொருளாதாரம், சுகாதாரம், கலாச்சாரம் ஆகியவைகளை அபிவிருத்தி செய்ய மத்திய சர்க்கார் உதவி புரியும்.

7. அஜர்பெஜானிலுள்ள ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு, தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க பூரணசுதந்திரம் கொடுக்கப்படும்.

8. கடந்த காலத்தில் அஜர்பெஜானிலுள்ள ஜனநாயக இயக்கத்தை ஆதரித்து வந்தவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

9. ஜனத்தொகைக்குத் தக்கபடி, மத்திய சட்டசபையில் அஜர்பெஜான் பிரதிநிதிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கப்படும்.

அஜர்பெஜானியர்களின் கோரிக்கைகளில் 90 சதவிகிதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. பாரசீகம் ஜனநாயக பாதையில் செல்ல ஆரம்பித்திருப்பதால், இன்னும் நேச உறவு அதிகரிக்கத்தான் செய்யும்.

தெஹ்ரானிலுள்ள "ஜபார்" "ஷபாஸ்" முதலிய பல பத்திரிகைகள் இந்த உடன்பாட்டைக் கொட்டு முழக்கத்தோடு வரவேற்றன. "அஜர்பெஜான் பிரச்னை சமாதான ரீதியில் தீர்க்கப்பட்டிருக்கிறது. இது பாரசீகத்தின் வெற்றி"......என்று எழுதின. சர்வதேச முக்கியத்துவத்தையும் வற்புறுத்தி எழுதின. பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட, பாரசீகப் பிரச்னையைப் பயன்படுத்திக்கொள்ள அந்நியநாட்டு பிற்போக்காளர்கள் ஹகீமி போன்ற சுதேச பிற்போக்காளர்கள் மூலமாக முயற்சி செய்தார்கள். "அஜர்பெஜான் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டதால், யுத்த கோஷத்தை முழக்கிவரும் போர்வெறியர்கள் யுத்தத்திற்கு அடிகோலும் ஒரு சந்தர்ப்பத்தை இழந்தனர்." என்று "ஷபாஸ்" எழுதுகிறது.

சுதேச பிற்போக்காளர்களும், ஏகாதிபத்தியங்களும் இன்னும் சூழ்ச்சி செய்து வருகின்றன. ஆனால் வளர்ந்துவரும் பொதுஜன சக்தி அவர்களது தில்லுமுல்லுத்தனங்களை முறியடிக்குமென்பது திண்ணம்.

## புதிய பாரசீகம் மலர்கிறது

இன்று பாரசீகம் சுதந்திர ஜனநாயகப் பாதையில் கம்பீரமாகச் செல்கிறது. பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு பழம்பெரும் பாரசீகத்தைப் பாதகாணிக்கையாகக் கொடுத்து வந்த சுதேச பிற்போக்காளர்கள்மீது புதிய பாரசீகம் கடுமையான நடவடிக்கை எடுத்துவருகிறது.

அமெரிக்காவிலுள்ள டாக்டர் ஆலா போன்ற அந்நிய நாடுகளிலுள்ள பாரசீகத்தின் ஸ்தானீகர்கள், ஏகாதிபத்தியங்களிடமிருந்து ஏராளமான பணத்தைப் பெற்று பாரசீகத்தின் சார்பாக சோவியத் யூனியனைத் தாக்கி, மறைமுகமாக ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தைப் பாரசீகத்தில் நிலைநாட்ட சூழ்ச்சி செய்து வந்தார்கள். பாரசிக சர்க்காரைக் கேட்காமலே வாயில் வந்தபடி உளறிக் கொட்டினார்கள். "நாங்கள் சொல்லாமல் பாரசீகத்தின் சார்பாகத் தான்தோன்றித்தனமாக ஒன்றும் பேசக் கூடாது" என்று உத்திரவிட்டு, இவர்களின் ஓட்டை வாயை அடக்கிவிட்டது புதிய பாரசீக சர்க்கார்.

சமீபத்தில் அஜர்பெஜானில் பயங்கரமான யுத்தம் நடப்பதாக ஏகாதிபத்தியங்கள் தொண்டை கிழியக் கத்தின. அஜர்பெஜானிலுள்ள பிற்போக்கு ராணுவத் தலைவர்கள்—ஏகாதிபத்தியங்களின் கையாட்கள்—மத்திய சர்க்காரின் உத்திரவின்றி, அஜர்பெஜான் தேசிய இயக்கத்தினரைத் தாக்கினார்கள்! சென்ற வருடம் அஜர்பெஜான் மக்களைச் சுட்டு வீழ்த்தி, நெருக்கடியை உண்டுபண்ணியவர்களும் இவர்கள்தான் !.........

"அஜர்பெஜான் ஜனநாயகவாதிகளைச் சுடும்படி நாங்கள் உத்திரவிடவே யில்லை. தான்தோன்றித்தனமாக, அங்குள்ள ராணுவத் தலைவர்கள் கலகத்தை உண்டுபண்ணி வருகிறார்கள்..." என்று பிரதம மந்திரி கவாம் ஸுல்தானே கண்டித்தார். இத்துடன் நின்றுவிடவில்லை. இதற்குக் காரணமாக இருந்த ராணுவத் தலைவர்களை—முன்பு மத்திய சர்க்காரின் படைகளின் தலைவனாக இருந்த ஜெனரல் ஆர்பா உள்பட—கைது செய்திருக்கிறார்.

ஸையத் ஸியா உதீன், டாக்டர் ஹுஸ்ஸேன் ஆலா பாஷா, இப்ராஹிம் ஹகீமி முதலிய பிற்போக்காளர்கள் பாரசீகத்தின் நலனுக்காகப் பாடுபடவில்லை. பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் சுரண்டுதலைப் பாரசீகத்தில் நிரந்தரமாக நிலைநாட்டுவதற்காகவும், நேச நாடுகளுக்கிடையே பிளவை உண்டுபண்ணுவதற்காகவும் சூழ்ச்சி செய்தார்கள்.

"நான் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டபொழுது, பெரிய நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இந்நெருக்கடிக்கு நான் பொறுப்பாளியல்ல. ரஷ்யா சம்பந்தமாக ஏற்பட்டிருந்த தவறான அபிப்பிராயத்தைத் தவிர்த்து, இரு நாடுகளுக்குமிடையே நேச உறவை நிலைநாட்ட முயற்சி செய்தேன்.......முதலில், அஜர்பெஜான் பிரச்னையைத் தீர்ப்பதில் முழு கவனத்தையும் செலுத்தினேன்.

"பாரசீகத்திலுள்ள பிற்போக்காளர்கள், அந்நிய நாடுகளின் ஸ்தானிகர் காரியாலயங்களுக்குச் சென்று அவர்களுடைய உத்தர

வைப் பெற்று, குழப்பத்தை உண்டுபண்ணி வந்தார்கள். இதன் மூலமாக பாரசீகத்திற்குப் பெருத்த பாதகம் செய்திருக்கிறார்கள். தேசத்தின் தலைவன் என்ற நிலையில், இவர்களுடைய கொட்டத்தை அடக்குவதுதான் எனது முதற்கடமை......இன்னும் சதியாலோசனைகள் நடக்கின்றன. இதை நான் சகித்துக்கொண்டிருக்க மாட்டேன். விஷக்கிருமிகளைப்போல் பாவித்து, அவர்களைப் பூண்டோடு அழித்துத்தான் தீருவேன்." என்று கவாம் ஸுல்தானே சமீபத்தில் பிற்போக்காளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஸையத் ஸியாஉதீன் உள்பட, பல பிற்போக்காளர்கள்—ஏகாதிபத்தியங்களின் ஏஜண்டுகள், தேசத்துரோகிகள்,—இன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் பாரசீகத்திலிருந்து, ஏகாதிபத்தியச் செய்தி ஸ்தாபனங்கள் பொய்புரட்டுக்களைப் பாரெங்கும் பிரசாரம் செய்து, உலக மக்களின் மனதைக் குழப்பி வந்தது நமது நாட்டில் காங்கிரஸ் தலைவர்களும், முஸ்லிம் லீக் தலைவர்களும் தேசியப் பத்திரிகைகளும் ஏகாதிபத்தியங்களின் மாயவலையில் சிக்கி சோவியத் யூனியனையும் அஜர்பெஜான் தேசிய இயக்கத்தையும் நாக்கில் நரம்பில்லாமல் திட்டினார்கள்:

இப்பொழுது பாரசீக சர்க்கார், வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்திகளைத் தணிக்கை செய்து வருகிறது.

தேர்தல் சட்டதிட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு, மஜ்லிஸுக்குப் புதிய தேர்தல் நடக்கப் போகிறது. கவாம் சுல்தானேயின் சர்க்கார், சர்க்காருக்குச் சொந்தமான நிலத்தையெல்லாம் நிலமில்லாத விவசாயிகளுக்கு வினியோகிக்க தீர்மானித்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எவ்வாறு பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்தில் இப்பொழுதுகூடத் தலையிட்டு வருகிறது என்பதை ஜூன் மாதம் 13-ந் தேதி சோவியத் பத்திரிகை "ப்ராவ்தா" அம்பலப்படுத்திற்று.

அதாவது, பாரசீகத்திலுள்ள பிரிட்டிஷ் ராஜதூதர் லீரோ கெட்டால், பாரசீகப் பிரதம மந்திரியைப் பேட்டிகண்டு பேசினார். அப்பொழுது, பாரசீக சர்க்கார் டூடே கட்சிக்குச் சாதகமாக நடந்து கொள்வதைக் கண்டித்தார்; ஆங்கிலோ இரானிய எண்ணைக் கம்பனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கிளர்ச்சியை அடக்க வேண்டுமென்றும், இல்லையானால், ஒரு புதிய நிலைமை ஏற்படலாமென்றும், அதற்காகப் பாரசீக சர்க்கார் வருந்த வேண்டி வருமென்றும் மிரட்டினார்; மந்திரி சபையில் டூடே கட்சியின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றார்; நடக்கப்போகும் தேர்தலைக் கண்காணிக்க பிரிட்டிஷ் பிரதிநிதிகளை அனுமதிக்க வேண்டுமென்று கோரினார்.

இந்த மிரட்டலுக்கு, கவாம் ஸுல்தானே ஆணித்தரமாகப் பதில் கொடுத்தார்: "பிரிட்டனின் நேச உறவை விரும்புகிறோம். ஆனால், பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை அனுமதிக்க மாட்டோம்" என்றார்.

இதுவரையிலும் ஏகாதிபத்தியங்களின் கையாட்களாக இருந்த ஹகீமிகளும், ஙியாவுதீன்களும் ஏகாதிபத்தியங்களின் உத்தரவுகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். "அன்னிய சர்க்கார்கள் இனிமேல் பாரசீகத்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது, அனுமதிக்கவும் மாட்டோம்" என்று பிரின்ஸ் முஸாபர் பிரோஷ் அஜர்பெஜானிலிருந்து திரும்பிவந்தவுடன் கூறினார். ஜனசக்தியின் ஆதரவைப் பெற்றிருக்கும் பாரசீக சர்க்கார் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திற்கும், சூழ்ச்சிகளுக்கும் சாவுமணி அடித்துவருகிறது. இனிமேல், பாரசீகம் சுதந்திர, ஜனநாயகப் பாதையில் செல்லும் என்பது திண்ணம்......

பாரசீக மக்கள் இன்று புத்துயிர் பெற்றிருக்கிறார்கள். அடிமைத் தளைகளை உடைத்தெறியத் துடிதுடிக்கிறார்கள். உதாரணமாக, 1946-ம் வருடம் மே மாதம் 4-ந் தேதி, ஆங்கிலோ இரானிய எண்ணெய்க் கம்பனியில் வேலை செய்யும் 10,000 பாரசீகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்; பிரிட்டிஷ் முதலாளிகள் பல உபாயங்களைக் கையாண்டு வேலை நிறுத்தத்தைச் சிதறடிக்கப் பெரு முயற்சி செய்தார்கள். ஆனால், இறுதியில் தோல்வியுற்றனர்; ஒன்றுபட்ட தொழிலாளர்கள் பல சலுகைகளைப் பெற்றனர்.

அதோ, புதிய பாரசீகம் அடிவானத்தில் உதயமாகிறது. பாரசீகத்தில் சுதந்திரமும், ஜனநாயகமும் தளிர்விட்டுத் தழைத்தோங்க ஆரம்பித்திருக்கிறது. பாரசீகத்தின் பழம்பெரும் நண்பர்களாகிய நாம், சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் விரும்புகிறவர்களாகிய நாம் புதிய பாரசீகத்தைக் கொட்டுமுழக்கத்துடன் வரவேற்கிறோம்! அது வாழ்க!

Janasakthi Publishing House Q. H. M, S. 402

Printed at the Janasakti Press Q. H. M. S. 374

Date of Printing: 20th July, 1946.

# அத்தனையும் அவசியமானவை

| | | | | |
|---|---|---|---|---|
| காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு கம்யூனிஸ்டுகளின் பதில் (3-ம் பாகம்) | ... | 1 | 4 | 0 |
| உழவர் யாதாஸ்து | ... | 0 | 1 | 0 |
| நெசவாளருக்கு நூல்; மக்களுக்கு துணி | ... | 0 | 2 | 0 |
| பஞ்சாலைத் தொழிலாளர் கோரிக்கைகள் | ... | 0 | 3 | 0 |
| சமஸ்தானத்திலிருந்தும் வெளியேறு | ... | 0 | 2 | 0 |
| தருவது என்ன? | ... | 0 | 2 | 0 |
| தென்னாப்பிரிக்க இந்தியர் போராட்டம் | ... | 0 | 3 | 0 |
| கொலைபாதகர் சூதாட்டம் | ... | 0 | 6 | 0 |
| பகத் சிங்கும் அவரது தோழர்களும் | ... | 0 | 8 | 0 |
| சுதந்திரத்திற்காக இறுதிப் போராட்டம் | ... | 1 | 4 | 0 |
| எல்லோருக்கும் வேலை—(பி. டி. ரணதிவே) | ... | 0 | 4 | 0 |
| எல்லோருக்கும் உணவு—(ஜி. அதிகாரி) | ... | 0 | 5 | 0 |
| பொதுமக்களுக்காக ரெயில்வே | ... | 0 | 2 | 0 |
| விவசாயிகளும் கம்யூனிஸ்ட் கட்சியும் | ... | 0 | 4 | 0 |
| ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு | ... | 0 | 3 | 0 |
| காந்தி - ஜோஷி கடிதப் போக்குவரத்து | ... | 0 | 8 | 0 |
| ஒப்பிலாத சமுதாயம்—(டி. என். பிரிட்) | ... | 0 | 8 | 0 |
| வெற்றி யாருக்கு?—(பி. ஸி. ஜோஷி) | ... | 0 | 4 | 0 |
| முஸ்லிம் லீகை ஏன் ஆதரிக்கிறோம் | ... | 0 | 1 | 6 |
| தேசபக்தி வெல்லும், ரௌடித்தனமல்ல | ... | 0 | 1 | 0 |
| சிட்டகாங் வீரர்கள் 2, 3, 4, 5 | ... | 0 | 2 | 0 |
| ,, 6 (கல்பனாதத்) | ... | 0 | 4 | 0 |

## ஜனசக்தி பிரசுராலயம்

ஜி. டி., சென்னை